29°/27°

# உதயன்

■ பதிப்பு: ★ ★ ■ விலை: ரூபா 20 | ■ சுடர் 28 ■ கதிர் 130 | ■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 23, வெள்ளி 05.04.2013 | UTHAYAN - A Lively National Tamil Daily Website: www.onlineuthayan.com

# படைகளுக்கு காணிகள் சுவீகரிப்பு முழு வீச்சில்

## யாழ்.காணி அலுவலகம் மும்முர செயற்பாட்டில்


யாழ்ப்பாணம்,ஏப். 5

மக்களின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட காணி அபிவிருத்தி அமைச்சின் யாழ். மாவட்ட அலுவலகம் பணிகளைத் தொடங்கி ஒரு மாத காலம் ஆவதற்குள் படையினருக்குக் காணி சுவீகரிக்கும் செயற்பாடுகள் முழுவீச்சில் மும்முரமாக மேற்கொண்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் படையினரால் கோரப்பட்ட பெருமளவு தனியார் காணிகளைச் சுவீகரிக்கும் பகிரங்க அறிவித்தல்கள் இந்த மாதம் யாழ்.மாவட்டக்

பார்க்க பக்கம் 04

### பகிரங்க அறிவித்தல்களும் மக்களின் பார்வைக்கு



காணி எடுத்தல் சட்டத்தின் (அத 460)
2ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

## பதவியை துறந்தார் சிவசுவாமி

யாழ்ப்பாணம்,ஏப் 05

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலராக நியமிக்கப்பட்ட ஆ.சிவசுவாமி தனது பதவியை துறந்தார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் 'உதயனு'க்குத் தெரிவித்தன.

கடந்த மாதம் 11 ஆம் திகதி காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தின் பதவி நிலை உத்தியோகத்தராக-காணி சுவீகரிப்பு அலுவலராக, வடமாகாண முன்னாள் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி நியமிக்கப்பட்டார்.

நியமிக்கப்பட்டு ஒரு மாதகாலத்துக்குள்ளேயே அவர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். படையினருக்காகத் தனியார் காணிகளை மும்முரமாக சுவீகரிக்கும் பணிகள் யாழ். மாவட்ட காணி அலுவலகத்தினால் முன்னெடுக்

பார்க்க பக்கம் 04

## ஜி.சி.ஈ. சாதாரண தர முடிவுகள் வெளியாகின

கொழும்பு, ஏப்.5

2012 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இரவு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று பாடசாலைகளுக்குப் பெறுபேற்றுத் தாள்கள் அனுப்பி வைக்கப்படும் எனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இணையத்தளத்தில் பரீட்சைப் பெறுபேறுகளை பார்வையிடுவோருக்கு திணைக்களத்தினால் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

அதில் உங்கள் பெறுபேற்றினைத் தெரிந்துகொள்வதற்கு உங்கள் பரீட்சைச் சுட்டெண்ணைத் திருத்தமாக உட்படுத்துக. வேறொரு சுட்டெண்ணை உட்படுத்துவதால் வேறொருவரது பெயரும் பெறுபேறும் பெறப்படும்.

பார்க்க பக்கம் 04

பஸ்களில் மும்மொழிகளில் பெயர்ப் பலகை பொருத்தும் பணிகள் முழுமை பெறவில்லை 3

நடைமுறை அரசியலுக்கு ஒருபோதும் வரமாட்டேன் 9

அரசுக்கு வழங்கும் ஆதரவை முஸ்லிம்கள் மீள் பரிசீலனை 15

## 'உதயன்' மீதான தாக்குதல்; பாரபட்சமற்ற விசாரணையாம்

கொழும்பு, ஏப்.5

ஊடகங்கள் மீதான தாக்குதலை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. கிளிநொச்சி 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா.

நேற்றுக் கொழும்பில் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில்

பார்க்க பக்கம் 04

## ஊடக சுதந்திரம் கேள்விக்குறி 'உதயன்' தாக்குதலால் உறுதி

### நீதியமைச்சர் ஹக்கீம் கண்டனம்

கொழும்பு, ஏப்.5

இலங்கையில் ஊடக சுதந்திரம் தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது எனவும், 'உதயன்' கிளிநொச்சி அலுவலகம் மீதும், ஊழியர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல் அதன் புதிய அத்தியாயம் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்

பார்க்க பக்கம் 04



## வடக்கு தேர்தலுக்கு மட்டும் விதிவிலக்கு

கொழும்பு, ஏப்.5

வடக்குத் தேர்தலைத் தவிர ஏனைய அனைத்துத் தேர்தல்களும் அரசமைப்பின் தேர்தல் நேர அட்டவணைக்கமைய 2016ஆம் ஆண்டே நடத்தப்படும் என்று அரசு நேற்று அறிவித்தது.

வடக்குத் தேர்தலில் வெற்றிபெறுவது ஆளுங் கட்சியா அல்லது எதிர்க்கட்சியா என்பது முக்கியமில்லை. வடக்குத் தேர்தல் நடத்தப்பட்டால் அது நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்று இளைஞர் விவகார அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

பார்க்க பக்கம் 04

## ஆணைக்குழுவின் பரிந்துரைகள் 1 1/2 வருடத்தில் நடைமுறைக்கு

### அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப்.5

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனைத்தும் இன்னும் ஒன்றரை வருட காலத்துக்குள் செயல்படுத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு விடயங்கள் தொடர்பாகவும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான கால எல்லைகள் குறிப்பிடப்பட்ட செயற்றிட்டமும் தயார் என்று அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா நேற்றுத் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட

பார்க்க பக்கம் 04

## 'உதயன்' தாக்கப்பட்டமையால் நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தி

### ஹெல உறுமயவும் கண்டனம்

கொழும்பு, ஏப்.5

'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள ஜாதிக ஹெல உறுமய, கிளிநொச்சியில் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில்,

சுதந்திரமாகத் தனது நட

பார்க்க பக்கம் 04

## மன்னார் தனியார் பஸ்கள் இன்று முதல் பகிஷ்கரிப்பில்

மன்னார்,ஏப்.5

மன்னார் மாவட்டத்துக்கான தனியார் பஸ்கள் இன்று வியாழக்கிழமை முதல் காலவரையறையற்ற சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன என்று வட இலங்கைத் தனியார் பஸ் சங்கத்தின் செயலாளர் அன்ரன் பிறேமகாந்த் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 04

## இலங்கையில் உதவித் திட்டங்களை இந்தியா ஒருபோதும் நிறுத்திவிடாது


புதுடில்லி,ஏப். 5

இந்திய அரசின் நிதி உதவியுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட உதவித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளை இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சு மறுத்துள்ளது. அந்த உதவித் திட்டங்கள் ஒருபோதும் நிறுத்தப்படமாட்டாதெனவும் அது கூறியுள்ளது.

ஐ.நா. மனித உரிமை

பார்க்க பக்கம் 04

# சல்மான் குர்ஷித்-ரணில் புதுடில்லியில் சந்திப்பு



புதுடில்லி,ஏப் 05

புதுடில்லிக்குப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித்தைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாகப் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த பின்னர், இலங்கையில் அதிகரித்து வரும் இந்திய எதிர்ப்புணர்வு குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

முன்னதாக, ரணில் விக்கிரமசிங்க, பா.ஜ.க தலைவர்கள் எல்.கே. அத்வானி, சுஸ்மா சுவராஜ் ஆகியோரையும் சந்தித்துப் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## பாம்புப் பெண் நிரோஷாவுக்கு பிடியாணை

கொழும்பு,ஏப் 05


பாம்புப் பெண் என அழைக்கப்படும் நிரோஷா விமலரட்னவுக்குக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

சந்தேக நபரான நிரோஷா விமலரட்ன அல்லது டிலானி என அழைக்கப்படும் இந்தப் பெண் நேற்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகாமையினாலேயே நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இரவுக் களியாட்ட விடுதியில் நடன மங்கையாகப் பணியாற்றி வந்த நிலையில் பாம்பொன்றை உடன் வைத்திருந்த காரணத்தினால் கடந்த வருடம் ஒக்ஸ்ட் மாதம் 28ஆம் திகதி இவர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த)

## மிகப் பெரிய சிலந்தி வடக்கில் கண்டுபிடிப்பு



வவுனியா,ஏப் 05

மிகப் பெரிய சிலந்தி ஒன்று வடக்கு மாகாணத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மாங்குளம் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மரம் ஒன்றில் இருந்தே இந்தச் சிலந்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பொயிசிலத்தேரிய வகைச் சிலந்தியை சேர்ந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

குறுக்காக சுமார் 8 அங்குலம் நீளம் வரை இருக்கும் இந்தச் சிலந்தி, மனிதனின் முகம் ஒன்றுக்கு ஈடான அளவில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அரசியல் கைதிகளுடன் சந்திப்பு

கொழும்பு,ஏப் 05

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் தமிழ் அரசியல் கைதிகளை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடி யுள்ளனர்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளையே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகளாக தமிழ் கைதிகளைச் சந்திப்பதற்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்து வந்தது. எனினும், அதற்கான சந்தர்ப்பம் தற்போதே வழங்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை ஆணையாளர் சந்தி ரரட்ன பல்லேகம இந்தச் சந்திப்பை ஏற்பாடுகளை செய்துள்ளார். (த)

# காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா 44 மில்லியன் டொலர் கடன்

கொழும்பு,ஏப் 05

வர்த்தக நடவடிக்கைகளுக்காக காங்கேசந்துறை துறைமுகத்தை அபிவி ருத்தி செய்வதற்கு இலங்கை, இந்தியாவிடமிருந்து 44.3 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

போரின்போது உண்டான சேதங்கள் காரணமாகப் பல தசாப்தங்களாக அது முழு அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ளது. போரின் போது அழிக்கப்பட்ட கப்பல்களின் பகுதிகளும் இங்கு உள்ளன.

> 2009ஆம் ஆண்டு போர் முடிந்த பின் இந்தியா வர்த்தக நடவடிக்கைகளுக்காக இந்தத் துறைமுகத்தை புனரமைக்க உதவி செய்வதாக உறுதியளித்திருந்தது.

2009ஆம் ஆண்டு போர் முடிந்த பின் இந்தியா வர்த்தக நடவடிக்கைகளுக்காக இந்தத் துறைமுகத்தைப் புனரமைக்க உதவி செய்வதாக உறுதியளித்திருந்தது.

இந்தியா இந்தத் திட்டத்துக்கு நன்கொடை மற்றும் சலுகை அடிப்படையிலான உதவியை வழங்கப் போவதாகக் கூறியிருந்தது. இது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 21ஆம் திகதி ஜூலை மாதம் 2011ஆம் ஆண்டு கைச்சாத்தானது. முதற் கட்ட வேலைகளுக்காக இந்தியா 20 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க ஒப்புக்கொண்டது.

துறைமுகத்தில் மண் வாருதலின் இரண்டாம் கட்ட வேலையை இந்தியக் கம்பனி ஒன்று தொடங்கவுள்ளது. அலைத்தடை அணையைப் புனரமைக்கவும் இறங்குதுறை ஒன்றை அமைக்கவும் கடன் பெறப்படும் எனத் துறைமுக அபிவிருத்தி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

''நாம் இந்தக் கடனைப் பெறவுள்ளோம். வட்டி வீதம் பற்றி பேச்சு நடைபெறுகின்றது. இது சலுகை அடிப்படையிலான கடனாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்'' என அவர் கூறினார். (த)

## கிளிநொச்சி தாக்குதலுக்கும் அரசுக்கும் தொடர்பு இல்லை

### அமைச்சர் மறுப்பு

கொழும்பு,ஏப்.5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அரசே முழுப் பொறுப்பு என்ற கூட்டமைப்பின் குற்றச்சாட்டை அரசு நேற்று அடியோடு மறுத்துள்ளது. அத்துடன், இந்தத் தாக்குதலுக்குத் தாம் பொறுப்பல்ல என்றும், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அரசு கூறியுள்ளது.

நாட்டில் இன, மதங்களுக்கிடையே பேதங்களை ஏற்படுத்த எவருக்கும் நாம் இடமளிக்கமாட்டோம். தற்போது நாட்டில் இடம்பெறும் பிரிவினைவாத நடவடிக்கைகளுக்கும் அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தேசிய, சர்வதேச ரீதியில் விடுக்கப்படும் அழுத்தங்களை முறியடித்து அரசு வெற்றிநடை போடுகிறது என்றும் தெரிவித்தார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அரசு காரணம் என்ற குற்றச்சாட்டை நாம் நிராகரிக்கிறோம். எமக்கும் இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. இவ்வாறான தாக்குதல் சம்பவங்களை நாம் அனுமதிக்கவும் மாட்டோம்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்ற வருகின்றன.

30 வருட காலப் போர் அனுபவங்களின் அடிப்படையில் நாட்டில் இனங்களுக்கிடையே மீண்டும் பிரிவினையை ஏற்படுத்தும் நாம் இடமளிக்கமாட்டோம். இனங்களுக்கிடையேயும் மொழிகளுக்கிடையேயும் பிரச்சினையை ஏற்படுத்தி இலங்கை மக்களுக்குத் துன்பம் ஏற்பட நாம் அனுமதிக்க மாட்டோம் - என்றார். (த)

# சிறுபான்மையினர் மீது கட்டவிழும் வன்முறைகள்

### தேசிய கிறிஸ்தவ ஒன்றியம் கவலை

யாழ்ப்பாணம்,ஏப்.4

சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்து வருவது தொடர்பாக இலங்கைத் தேசிய கிறிஸ்தவ ஒன்றியம் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைய மாதங்களில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் தமது வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் சம்பவங்கள் மற்றும் வன்செயல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இதற்கு மேலாக முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன. அத்துடன் முஸ்லிம் பெண்கள் தமது மதத்தினால் வரையறுக்கப்பட்ட ஆடைகளை அணிந்து சென்றபோது தாக்கப்பட்டுள்ளனர்.

> இந்தத் தாக்குதல் சம்பவங்களைப் பலர் நேரில் பார்த்துள்ளனர்.

தண்டனைகளுக்கு அஞ்சாத குழுவினர் இந்தத் தாக்குதல் சம்பங்களில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இவர்கள் கைது செய்யப்படவுமில்லை- தண்டிக்கப்படவுமில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவங்களைப் பலர் நேரில் பார்த்துள்ளனர். புகைப்படம் மற்றும் ஒளிப்பதிவுச் சாட்சியங்களும் உள்ளன. ஆனால் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் மந்தமாகச் செயற்படுகின்றனர்.

30 வருடகாலம் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த நிலையில் இந்தச் சம்பவங்கள் இங்கு இடம்பெற்று வருகின்றமை வருத்தமளிக்கிறது.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு கால அவகாசம் கேட்டுள்ளது. ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இரண்டு தீர்மானங்கள் மிகவும் காத்திரமானவை.

இந்த நிலையில் இங்கு நடைபெறும் சம்பவங்களுக்கு இலங்கை அரசு நேர்மையான வகையில் பொறுப்புக் கூறவேண்டும்.

பாதுகாப்புத் தரப்பினர் இவற்றைத் தடுப்பதற்கு சட்டத்தை நிலைநிறுத்தி அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்றுள்ளது. (த)

## எரிகாயத்துக்கு இலக்கான பெண் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம்,ஏப்,5

எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த் பெண் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தார்.

காரைநகர் நெடுங் காட்டைச் சேர்ந்த வேலாயுதம் லீலாவதி (வயது-48) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டில் குப்பி விளக்கு தட்டுண்டு தீ பற்றியமையால் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் இவர் கடந்த மாதம் 22 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

பிள்ளைக்கு விளக்கில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற் கொண்டார். (த-ரி)

# முறிகண்டி- முழங்காவில் வீதியை தற்காலிகமாகவேனும் புனரமைக்குக

## அரச அதிபருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

கிளிநொச்சி, ஏப். 5

*மிகமோசமான நிலையில் காணப்படும் முறிகண்டி - முழங்காவில் வீதியை தற்காலிகமாக புனரமைத்து மக்களின் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கோரியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.*

இது தொடர்பாக அவர் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் பாவனையில் உள்ள பிரதான வீதிகளில் முறிகண்டி - முழங்காவில் வீதி, கடந்த இரண்டு வருடங்களாக எந்தப் புனரமைப்பும் இல்லாமல் மிக மோசமான நிலையிலுள்ளது. அவசர நோயாளரைக் கூட கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. கடந்த பருவமழையுடன் வீதி மிகமோசமாகச் சேதமடைந்துள்ளது.

அதிலும் குறிப்பாக அக்கராயன், அம்பலப்பெருமாள் சந்தியிலிருந்துஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன் கட்டு, முழங்காவில் வரையான வீதியின் நிலை ஆபத்து நிறைந்ததாக மாறியுள்ளது.

இந்த வீதியின் புனரமைப்புத் தொடர்பாக கடந்த வருடம் வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளருக்கும் நேரடியாக தெரிவித்திருந்தேன். 2012 இல் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை எந்த விமோசனமும் இந்த வீதிக்குக் கிடைக்கவில்லை. முழங்காவில், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, வன்னேரிக்குளம், ஐயனார்புரம், ஆனைவிழுந்தான், சோலை, வேரவில், நாச்சிக்குடா, குமுழமுனை, வலைப்பாடு, கிராஞ்சி, இரணைமாதாநகர், கரியாலைநாகபடுவான் ஆகிய ஊர்களில் வாழும் மக்களின் போக்குவரத்து, வைத்தியசேவை, கல்விப் பணி மற்றும் இதரபணிகள் இந்த வீதி ஒழுங்கின்மையால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே குறித்த வீதியை அவசரமாகப் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். குறிப்பாக பெரும் குழிகளாக உள்ள பகுதிகள் முழுவதும் கிரவல் மண்ணாவது இட்டு தற்காலிகமாக போக்குவரத்து செய்யக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச அதிபருக்கான கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-426)

## பரந்தன் கொலை சந்தேகநபர்கள் மூவருக்குப் பிணை அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்.5

பரந்தனில் குடும்பஸ்தரை வெட்டிக்கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட 5 பேரில் 3 பேர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலனைக்காக யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மகேந்திரராஜா என்பவர் கடந்த மே மாதம் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

இந்த ஐந்து சந்தேகநபர்களில் 3 சந்தேகநபர்கள் சார்பில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.

சந்தேகநபர்களாக அருளம்பலம் அகிலன், அப்பாபு ஆனந்தராசா, நல்லூர் சாமி பாலச்சந்திரன், மைக்கல் பிரதீப் குமார, குணராசா ஆரணியா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் முதல் 3 பேருமே நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதன்படி ஒவ்வொருவரும் தலா 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். தவிர மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிட வேண்டும் என்றும் மன்று நிபந்தனை விதித்தது. (ஐ-4)

## சோரன்பற்று கிராமம் மின்னொளி பெறும்

பளை, ஏப்.5

பளைப் பிரதேசத்தில் மேலும் ஒரு கிராமம் மின்னொளி பெறவுள்ளது. பளை சோரன்பற்று கிராமமே மின்சார வெளிச்சத்தை பெறவுள்ளது.

சோரன்பற்றுக் கிராமத்துக்குப் பொருத்தப்பட்ட மின்மாற்றி மூலமே இந்த மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நிகழ்வில் கலந்துகொள்வார்.

நிகழ்வில் இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகளும் கலந்துகொள்வர். 'வடக்கின் வசந்தம்' திட்டத்தில் கடந்த மாதம் பளைப் பிரதேசத்தில் புதுக்காட்டுச் சந்திப் பகுதிக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## மிதிவெடி விழிப்புணர்வு


புதுக்குடியிருப்பு , ஏப்.5

சர்வதேச மிதிவெடிகள் விழிப்புணர்வு தினம் கடந்த முதலாம் திகதி முல்லைத் தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம் பெற்றது. இதன்போது மிதிவெடியினால் ஏற்படும் பாதிப்புக்கள், அதன் உருவ அமைப்புக்கள் என்பன தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் விழிப்புணர்வு சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் மிதிவெடி தொடர்பான கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் ஏ.எம். பாயிஸ், இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் விஜயதிலக மற்றும் யுனிசெப் நிறுவனத்தின் அதிகாரி கெரலின் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-400)



*நெடுங்கேணி வைத்தியசாலைக்கு அருகில், பிரதான வீதியின் மருங்கில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் வாய்க்கால் உரிய முறையில் மூடப்படாமையால் விபத்துக்கள் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. (ஐ-435)*

## கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் 90 பெண் தலைமை குடும்பங்கள்

### நெருக்கடிகளுடன் வாழ்வதாகச் சுட்டிக்காட்டு

அக்கராயன், ஏப். 4

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தில் 90 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளதாக கிராம மாதர் சங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் தமது வாழ்வாதாரத்துக்காக உதவிகளை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலப் போர் அனர்த்தம் மற்றும் இயற்கைக் காரணங்களால் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் இவர்கள் சமூகமட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட நிலையில் தற்போது வறுமை நிலையில் உள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ-18)

## இந்து ஆலயங்களில் பிரச்சினை தீர்க்க குழு

*வவுனியா, ஏப். 5*

*வவுனியா மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குழு ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்தார். காரைக்கால் அம்மையாரின் குருபூசைத்தினம் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;*

*இந்துக் கோயில்களில் பல்வேறு தரப்பினராலும் இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் வந்துள்ளன.*

*எமது சமயத்தலைவர்கள் தமது ஒழுக்க நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க தவறுகின்றனர். இது எங்களுக்கு மட்டுமல்ல எமது சமயத்தவர்களுக்கும் பெரிய மனவேதனையைத் தந்துள்ளது.*

*கோயில்களில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென இந்து ஆலயங்களின் ஒன்றியம் ஒன்று 2011 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அது தொடர்பான விவரம் கலாசார திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் இதுவரை அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. காரணம் அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட இவ்வாறான அமைப்பு ஒன்றில் நிதி மோசடிகள் இடம்பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் மாவட்ட ரீதியில் இத்தகைய அமைப்புகளை உருவாக்குவதற்கு கலாசார திணைக்களம் அனுமதி வழங்குவதை நிறுத்தியுள்ளது.*

*ஆனால் இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான ஒரு அமைப்பு பதிவு செய்யப்படுகின்றதோ இல்லையோ எமது மாவட்டத்தில் சமயப் பெரியார்கள், வர்த்தக பிரமுகர்கள், அபிமானிகள், புத்திஜீவிகளைக் கொண்டு ஓர் அமைப்பு விரைவில் உருவாக்கப்படும். அதனூடாக இந்து ஆலயங்களில் இடம்பெறும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படும் - என்றார். (ஐ-400)*

## சேனைப் பயிர்ச் செய்கை மூலம் அதிக இலாபம் பெற முடியும்

கிளிநொச்சி,ஏப்.5

கிளிநொச்சி மாவட்டத்தில் சேனைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் அதிக இலாபத்தை ஈட்ட முடியும் என, மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.தயாரூபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் அனேகமான விவசாயிகள் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்வதுடன், கூடிய இலாபத்தை ஈட்ட முடியாது நட்டத்தை எதிர்கொள்கின்றனர். இதனைவிட வறட்சிக் காலங்களில் கூடுதலான நீர் விரயமாகின்றது. திட்டமிடப்படாத பயிர்ச்செய்கை மூலமும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள செய்கை முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக சேனைப் பயிர்ச் செய்கை முறை மூலம் அதிக இலாபத்தை ஈட்ட முடியும்.-என்றார். (ஐ-6)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.5

கிளிநொச்சி மாவட்ட தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபை இளைஞர், யுவதிகளுக்கென தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கான விண்ணப்புங்களை கோரியுள்ளது.

கணினி வன்பொருள் தொழில்நுட்பம், தட்டச்சாளர் (தமிழ்), தாதி உதவியாளர், கணினி அனுமதிப் பத்திரக் கற்கை நெறிகளை நடத்தவுள்ளது. க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களும் கணினி வன்பொருள் தொழில்நுட்பத்தில் பத்து வருட அனுபவம் பெற்றவர்களும் இந்தப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை மாவட்ட முகாமையாளர் என்.ஏ.ஐ.ரி.ஏ, ஆனந்தபுரம் கிளிநொச்சி என்ற முகவரியில் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக நேரடியாகவோ தபால் மூலமாகவோ சேர்ப்பிக்க முடியும் என மாவட்ட முகாமையாளர் ஏ.பி. அல்பிரட் அறிவித்துள்ளார். (ஐ-7)

## ‘உதயன்’ தாக்கப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ‘உதயன்’ பத்திரிகைக்கு தொடர்ச்சியாக இடையூறுகள் விளைவிக்கப்படுவதானது நாட்டில் ஜனநாயகத்துக்கும் ஊடக சுதந்திரத்துக்கும் விடுக்கப்படும் பாரிய அச்சுறுத்தலாகும்.

முகமூடி அணிந்த குழுவொன்று, கிளிநொச்சியிலுள்ள ‘உதயன்’ பத்திரிகை அலுவலகத்துக்குள் நுழைந்து அங்கிருந்த ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு, சொத்துகளுக்கும் சேதம் விளைவித்துவிட்டுத் தப்பியோடியுள்ளது.

முகமுடி அணிந்த அறுவர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும், தாக்குதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாட்டுக்கு சர்வதேச மட்டத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவமானது நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதாக அமைந்துவிடும். இதன்மூலம் சர்வதேச சக்திகளும் புலம்பெயர் தமிழர்களுமே நன்மை பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-சி)

## இலங்கையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்தமையும், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது பெருமளவிலான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து தமிழ் நாட்டில் உள்ள சில கட்சிகள் கடுமையான நிலைப்பாட்டை எடுத்தமையுமே இதற்கான காரணங்கள் எனக் கூறப்பட்டதாக ‘இந்து’ நாளிதழ் தெரிவித்திருந்தது.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய அரசின் அநேகமான திட்டங்கள் முன்னர் தீர்மானித்ததன் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகளை உள்ளடக்கக்கூடிய வகையிலான பொருளாதார ஒப்பந்தங்களை மீண்டும் தொடர்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் குரல் தரவல்ல அதிகாரியான சையத் அக்பர்டீன் தெரிவித்தார்.

இந்திய அரசின் மிகப்பெரிய திட்டமான இலங்கைக்குள் இடம்பெயர்ந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படும் 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் 800 மில்லியன் டொலர் மதிப்பிலான இரண்டு ரயில் பாதைகளை அமைக்கும் திட்டங்கள் தமிழர் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். (த)

## படைகளுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

காணி சுவீகரிப்பு அலுவலகம் ஊடாக வெளியிடப்பட்டுள்ளன.

மக்களின் பார்வைக்காக இந்த அறிவித்தல்கள் இப்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த மாதம் 11ஆம் திகதி காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் யாழ்.மாவட்ட காரியாலயம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தினூடாக யாழ்.மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என்றும், அதற்காகவே இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் காணி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் வைத்துத் திறப்பு விழாவின்போது கூறியிருந்தார்.

அத்துடன் பொதுமக்களின் காணிகளை படையினர் சுவீகரிக்கமாட்டார்கள் என்றும், அதற்காக இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் மேற்படி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டு ஒரு மாத காலம் கடப்பதற்குள், யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் படையினர் கோரிய தனியார் காணிகளைச் சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முழுவீச்சாக இந்தக் காணி அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

''காணி எடுத்தல் சட்டத்தின் (அத்.460) 2ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்'' என்ற தலைப்பில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் யாழ்.மாவட்ட சுவீகரிப்பு அதிகாரி ஆ.சிவசுவாமியின் ஒப்பந்தத்துடன் இந்த அறிவித்தல்கள் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## தமிழகப் போராட்டங்களை கண்டிக்கிறார் மல்கம் ரஞ்சித்

கொழும்பு,ஏப் 05

தமிழகத்தில் இடம்பெற்றுவரும் போராட்டங்களுக்குக் கர்தினால் மல்கம் ரஞ்சித் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் இலங்கையர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை நிறுத்துமாறு தமிழக கத்தோலிக்க சபையிடம், கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரியுள்ளார்.

தமிழகத்தில் வாழும் இலங்கையர்கள் தொடர்பில் சர்ச்சைகள் இருந்தால் அதனைப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ள முடியும். தமிழகத்துக்குச் செல்லும் இலங்கையர்கள் துன்புறுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. தற்போது நாட்டில் பல அமைப்புக்கள் உருவாகிப் போராட்டம் நடத்தி வருகின்றன.

30 ஆண்டுகள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் பிரச்சினைகள் அவசியமில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## மன்னார்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மன்னார் மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காகப் புதிய தனியார் பஸ்களுக்கான கேள்வி கோரலைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, ஊடகங்கள் வாயிலாக நேற்று வெளியிட்டிருந்தது.

இதனையடுத்தே தாம் சேவைகளை இன்று வியாழக்கிழமை முதல் புறக்கணித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததவாது:-

## ஜி.சி.ஈ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பெறுபேறுகள் தொடர்பாக முறைப்பாடுகளோ விசாரணைகளோ இருப்பின், இலங்கை பரீட்சைத் திணைகளத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளை 1911- என்ற அவசர அழைப்பின் மூலமோ அல்லது 011-2784208, 011-2784537, 011-3140314, 011-3188350 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ அல்லது 011 2784422 என்ற தொலைநகல் இலக்கத்துடன் ஊடகவோ அல்லது exams@doenets.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அறிவிக்கமுடியும்.

பெறுபேறுகளை www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும். (ஐ-400)

யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளில் ஒரு சில பிரதேச செயலகங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகங்களில், படையினர் தனியார் காணிகளைக் கோரியிருந்தனர்.

படையினர் கோரிய மேற்படி காணிகளுக்குரிய இடங்களிலேயே இந்த அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன. காணி உரிமையாளரின் பெயர் மற்றும் இராணுவத் தேவைகளுக்காகக் காணி சுவீகரிக்கப்படும் விவரம் என்பன இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த காணிகளின் உரிமையாளர்கள் படையினருக்குக் காணி வழங்க மறுப்புத் தெரிவிப்பதாக இருந்தால், விசாரணையின் போது அதனைத் தெரிவிக்கலாம் என்றும் அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது. 14 நாள்களின் பின்னரே விசாரணை இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் உள்ளடங்கும் தனியார் காணிகளின் சுவீகரிப்புத் தொடர்பில் பகிரங்க அறிவித்தல் விடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது,

''அரச காணிகள் தொடர்பான விடயத்தை ஆளுநர் கையாள்கின்றார். தனியார் காணிகள் தொடர்பான விடயத்தை யாழ்.மாவட்ட காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் காணி சுவீகரிப்பு அதிகாரி கையாள்கின்றார். இது தொடர்பில் பூரணமான தகவல்கள் என்னிடம் இல்லை'' எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக காணி சுவீகரிப்பு அலுவலர் ஆ.சிவசுவாமியிடம் கேட்டபோது, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க முடியாது என அவர் மறுத்துவிட்டார். (த-5-ரி)

## ஊடக சுதந்திரம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கொண்டு, இந்தோனேஷியாவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ பயணத்தை அவசரமாக முடித்துக்கொண்டு நேற்று வியாழக்கிழமை அதிகாலையில் நாடு திரும்பியவுடனேயே ‘உதயன்’ மீதான தாக்குதல் பற்றிக் கேள்வியுற்றுப் பெரிதும் கவலையடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் ஹக்கீம், அது குறித்து விடுத்துள்ள கண்டனச் செய்தியில் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

‘சுடர் ஒளி’ பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையான ‘உதயன்’ வடக்கில் மட்டுமன்றி, தற்பொழுது தலைநகர் கொழும்பிலும் கூட விற்பனையாகி அதற்கெனத் தனியான வாசகர் வட்டமொன்றையே உருவாக்கியுள்ளது. நானும் அதனை வாசிக்கின்றேன்.

செய்தி ஊடகங்கள் இலக்குவைத்து தாக்கப்பட்டு வருவது ஆரோக்கியமான செயலாகத் தென்படவில்லை என்பதோடு, அது வாசகர்களுக்கும் உரிய தகவல் அறியும் உரிமையை மறுப்பதும், மலினப்படுத்துவதுமாகும்.

ஊடகங்களுக்கு எதிரான இவ்வாறான அடாவடித்தனங்கள் மேற்கொள்ளப்படும் போது அதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டுமென நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள கண்டனச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-சி)

## பதவியை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கப்பட்டு வந்த நிலையில்அவரது இந்தப் பதவி விலகல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் அவர் கருத்தெதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார். (த-5)

மன்னார் மாவட்டத்துக்கென பஸ் சேவையில் 35 இக்கும் மேற்பட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளதுடன் காலநேரம் பாராமல் சேவையை வழங்கி வருகின்றனர்.

தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்கள் நேர அட்டவணையின் படி இரண்டு நாள்களுக்கு ஒரு தடவையே தூரச் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. பயணிகள் சேவைக்குப் போதுமானதாக மன்னார் மாவட்டத்தில் பஸ்கள் உள்ளபோதும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடிய வகையில் பஸ்களுக்கான கேள்வி கோரலை வெளியிட்டுள்ளது.

இதனைக் கண்டித்து இன்று முதல் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பை பஸ் உரிமையாளர்கள் மேற்கொள்ளவுள்ளனர். யாழ்ப்பாணம், கொழும்பு உள்ளிட்ட மன்னார் மாவட்டத்துக்கான உள்ளூர் சேவைகளும் வெளி மாவட்டங்களில் இருந்து சேவையில் ஈடுபடா - என்றார். (த-14)

## ‘உதயன்’மீதான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் அனுர யாப்பா இதனைத் தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றது.

அமைச்சரவைப் பேச்சாளரான ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுச் சமுகமளித்திருக்கவில்லை. அவருக்குப் பதிலாக அமைச்சர் பிரியதர்சன யாப்பா அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பாக விளக்கம் அளித்தார்.

இவ்வேளையில் வடக்கில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி ‘உதயன்’ பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்று ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

இப்படியான செயல்களை அனுமதிக்க முடியாது. ‘உதயன்’ பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதலை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. இச்சம்பவம் தொடர்பாகப் பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்தி உண்மையைக் கண்டறிந்து தொடர்புடையவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது - என்றார். (த-2)

## வடக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யின் பொருளாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்தவர்களை இணைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். வடக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா, அரசா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியா வெற்றி பெறும் என்பது முக்கியமில்லை. மாறாக, வடக்குத் தேர்தல் நடத்தப்பட்டால் அது நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். மாகாணசபை முறைமையை அறிமுகப்படுத்தத்தான் 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இருப்பினும், கடந்த 30 வருட காலமாக வடக்கில் தேர்தலை நடத்த முடியவில்லை. அதனால் அங்கு தேர்தல் நடத்தப்பட்டால் அது நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைக்கும் பெரும் வெற்றியாகும் - என்றார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பதிலளிக்கையில்,

கேள்வி: நாட்டு மக்களுக்கு இருக்கும் ஒரே மாற்றுவழி தான்தான் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறுகின்றாரே?

பதில்: நாட்டில் அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்க எவருக்கும் உரிமை இருக்கிறது. எவரும் சுதந்திரமாகத் தமது கருத்துகளைத் தெரிவிக்கலாம். இது ஜனநாயக நாடொன்றிலுள்ள இலட்சணமாகும் - என்றார்.

இந்தக் கேள்விக்கு அமைச்சர் டலஸ் அழகப்பெரும் பதிலளிக்கையில்,

நாட்டு மக்களுக்குத் தலைமை வகிப்பதற்கு சரத் பொன்சேகாதான் ஒரே மாற்றுவழி என்ற கேள்வியை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவிடமும் கேட்கலாம் - என்றார்.

கேள்வி: 2014 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் எனக் கூறுகிறதே. அப்படியெனில் அடுத்த வருடம் பொதுத்தேர்தலொன்று நடத்தப்படுமா?

பதில்: நாட்டின் அரசமைப்புக்கமைய 2010ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. இனி ஆறு வருடங்களின் பின்னர் 2016ஆம் ஆண்டே தேர்தல் நடத்தப்படும். அரசமைப்பின் தேர்தல் நேர அட்டவணைக்கமையவே தேர்தல் நடத்தப்படும் - என்றார் அமைச்சர் மைத்திரி.

வடக்குத் தேர்தலைத் தவிர ஏனைய அனைத்துத் தேர்தல்களும் 2016 ஆம் ஆண்டே நடத்தப்படும் என்றார் அமைச்சர் டலஸ். (த-சி)

## ஆணைக்குழுவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வேண்டும் என்பதும் அடங்கும்.

இது குறித்து நேற்று கருத்துத் வெளியிட்ட அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள், தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்க்ள் என்பன தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கான காலவரையறையும் குறிப்பிடப்பட்டுள்ளது- என்றார்.

இவற்றை நடைமுறைப்படுத்த எவ்வளவு காலம் பிடிக்குமென அமைச்சரிடம் கேட்டபோது, சில விடயங்கள் மூன்று மாதம், ஆறு மாதம், 12 மாதம், 18 மாதங்கள் பிடிக்கும். எப்படியும் ஒன்றரை வருடங்களுக்குள் அவை நடைமுறைப்படுத்தப்படும் எனப் பதிலளித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 13 ஆவது அரசியல் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக என்ன கூறுகின்றீர்கள் என அமைச்சரிடம் வினவியபோது,

ஒவ்வொன்றையும் தனித்தனியாக இப்பொழுது கூறமுடியாது. அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன என மழுப்பலாகப் பதிலளித்தார் அமைச்சர். (த-2)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## வன்னியில் அரங்கேறும் கூத்து மாகாணத் தேர்தலை முன்னிட்டா?

கிளிநொச்சியிலுள்ள ''உதயன்'' பணியகத்தின் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித் தனமான தாக்குதல், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீதான மற்றொரு பேரிடியாகும்.

உலக ஊடகவியலாளர் சுதந்திர தினத்துக்கு சரியாக ஒரு மாதம் இருக்கும் நாளன்று இனந்தெரியாதவர்கள் என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு ''உதயன்''மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

அந்த அக்கிரமத்துக்குப் பின்னால் திரைமறைவில் நின்று திட்டமிட்டுச் செயற்பட்டவர்கள் யார் என்பதனை, மதிப்புக்குரிய எமது வாசகர்கள் ஏற்கனவே இலகுவில் அடையாளம் கண்டிருப்பர்.

தமிழ் மக்களின் ஜனநாயக மற்றும் மனித உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுப்பவன் உதயன். இன்று நேற்றல்ல; கடந்த 28 ஆண்டுகளாக, தனக்கு உண்டான உயிர், உடைமை இழப்புகளுக்கு மத்தியிலும், மக்கள் நலனை நாடி உழைப்பதனையே தனது இலக்காகவும் குன்றா இலட்சியமாகவும் கொண்டு உழைத்து வருகிறான் அவன். அதனை எமது வாசகர் பெருமக்கள் நன்கறிவர்.

''உதயன்'' கிளிநொச்சிப் பணிமனை மீது நடத்தப்பட்ட தாக்குதல் அதன் வாசகர்களான மக்கள் மீது ஏவிவிடப்பட்ட தாக்குதலுக்கு ஒப்பானது; சமனானது.

ஜனநாயகத்தினை - மக்கள் ஆட்சியினை - தாங்கிப் பிடித்திருக்கும் நான்கு பிரதான தூண்களில் பத்திரிகைத் துறையும் - ஊடகத் துறையும் - ஒன்றாகும்..

மக்கள் நலன் நாடி, அவர்களுக்குரிய உரிமைகள் பங்கமுறாமல் பாதுகாப்பதும் ஊடகங்களின் பரந்துபட்ட பணிகளில் ஓர் அலகு என்பது, மக்கள் ஆட்சி நடைபெறும் உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், மக்களாட்சியை சர்வாதிகார ஆட்சியாக மாற்றும் அரசியல் தலைவர்களை கொண்ட நாடுகளிலேயே ஊடகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அந்த வகையில் ஊடக சுதந்திரத்தைப் பேணுவதில், 178 நாடுகளில் 163 ஆவது இடத்தைச் சென்ற ஆண்டு இலங்கை [அரசு] பெற்று ''வாகை'' சூடிக்கொண்டது. அதாவது எங்கள் நாட்டில் [முழுமையான] ஜனநாயகம் நிலவவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இப்போது அது மேன்மேலும் கீழிறங்கிச் செல்கிறது என்பதனை, அரசும் அதன் அங்கங்களும் செயற்படும் தன்மைகள், அட்டவணைகள் அப்பட்டமாக எடுத்துக் காட்டுகின்றன!

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது என்றும், மக்களாட்சி ஊன்றி நிலைகொண்டு விட்டது என்றும் பசப்பு வார்த்தை பேசி வரும் ஆட்சியாளர்கள் -

தமக்குச் சார்பாகவும், தமது அடக்குமுறைகள் உட்பட்ட குறைபாடுகளை வெளிப்படுத்தாமல் மறைத்துத் தாளம் போட்டும் செயற்படும் ஊடகங்களைத் தவிர்ந்த ஏனையவற்றை காலால் மிதிப்பதற்குக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து கொலையுண்ட ஊடகவியலாளர்கள் மிகப்பலரில் ஒருவரது கொலைக்கான சூத்திரதாரிகள் தானும் கண்டுபிடிக்கப்படவுமில்லை; நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளிலும் தீர்ப்பு வழங்கப்படவுமில்லை. காலங்கள் கடந்தேகினவேயன்றி, குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. ஏனைய பலவும் உள்ளாடும் கள்ளாடுமாக மறைக்கப்பட்டு விட்டன.

இவற்றுக்கும் மேலாக அராஜகத்தை நிலப்பாவாடையாக விரித்து, தனது ஏவலாளிகளைக் கொண்டு, உண்மைகள் வெளிவராமலும், மக்கள் எழுச்சிகளையும் ஜனநாயக ரீதியான சாத்வீகப் போராட்டங்களையும் அடக்கி ஒடுக்குவதில் அரசு அதீத அக்கறை காட்டி வருகிறது.

அதனை ஒத்த பாணியில், மக்களின் உரிமைகள், உண்மைகளை வெளிப்படுத்தி ஜனநாயக விழுமியங்களை நாடி உழைக்கும் ஊடகவியலாளர்களை, ஊடக உழைப்பாளிகளையும், ஊடகங்களையும் அடக்கி ஒடுக்க முனையும் போக்கு தமிழ் பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அவற்றுக்கு உதாரணங்கள் தேடினால் அவை நீளும்.

மிகக்குறிப்பாக, வடமாகாண சபைத் தேர்தலை நடத்தப் போவதாக, அனைத்துலகத்துக்குக் கூறிக்கொண்டு, மேளந் தட்டிக்கொண்டு, மக்கள் விருப்பத்துக்கு மாறான பெறுபேறுகளை இட்டுக்கட்டும் திட்டத்தின் முதற்படியே, வடக்கில் அரங்கேறும் ஊடகங்களை மறைமுகமாக முடக்கும் முயற்சி. இது பாடசாலை மாணவன் ஒருவனுக்கும் புரியும்...



# உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகைகள்

### கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணத்தில் தற்போது பிரபல பத்திரிகைகள் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில்தான் செயற்பட்டு வருகின்றன.

இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக 48 ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் தொடர்பான கருத்துப் பகிர்வு நிகழ்வு யாழ். மூர்த்தி கலர்லாப் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:-

இலங்கையில் ஊடகங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் நிலையே உள்ளது.

**இதுவரை 48 ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் உயிர்த் தஞ்சம் கோரியுள்ளனர்.**



முன்னர் பத்திரிகைத் தணிக்கை இருந்ததால் உண்மைச் செய்திகளை வெளியிட முடியாத நிலை ஊடகங்களுக்கு இருந்தது. இதனால் தமக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படப் போவதாகக் கருதி இதுவரை 48 ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் உயிர்த் தஞ்சம் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது பிரபல பத்திரிகைகளுக்கும் இதே நிலையே தோன்றியுள்ளது.

ஊடகங்கள் உண்மை நிலையை வெளிப்படுத்த முடியாதவையாகவே தற்போதும் உள்ளன.- என்று தெரிவித்தார். (ம-14)

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு யாழ். மாவட்டத்தில் வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். மாவட்டத்தில் தற்போது 416 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளனர். எழுநூறுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன என யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்க மாநாட்டின்போது அதன் தலைவர் பி.ஐங்கரன் தெரிவித்தார்.

கடந்த 12 வருடங்களாக தீவுப் பகுதியில் பணியாற்றக் கூடியதாக போதிய உத்தியோகத்தர்கள் இல்லை.

புதிய நியமனங்களை விரைவில் வழங்க வேண்டும். தென் பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் எமக்குக் கிடைப்பதில்லை என்றும் அவர் இந்த மாநாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மாதத்தில் இருந்து பதில் கடமையாற்றப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வெற்றிடங்கள் விரைவில் பூர்த்தியாக்கப்படும் என்று பாரம்பரிய கைத்தொழில் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டின்போது தெரிவித்தார்.

இந்த வெற்றிடங்களை நிரப்பும்போது தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அங்கு கடமையாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிய நியமனங்களின்போது இடமாற்றம் தேவைப்படின் பொருத்தமாக அது நடக்கும்.

திவிநெகும வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் மூலம் உங்களுக்கு நிரந்தர ஓய்வூதியம் கிடைக்க வாய்ப்பு உள்ளது எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தெல்லிப்பழை பொலிஸாரின் மாதாந்த நடமாடும் சேவை

அளவெட்டி, ஏப்.5

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தின் மாதாந்த நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் ஜே/212 கிராம சேவையாளர் பிரிவில் கல்லாரை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இங்கு தெல்லிப்பழை வைத்தியசாலை வைத்தியக் குழுவினரால் சகல விதமான நோய்களுக்கான சிகிச்சைகளும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படும்.

அத்தோடு வாகனப் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளுக்கான ஆலோசனைகள், சாரதிப் பத்திரம் பெறுவது தொடர்பான விளக்கங்கள், சிறு சிறு சமூகப் பிரச்சினைகளை அணுகும் முறை கள் தொடர்பாக விளக்கமளித்தல், ஆயுள்வேத சேவை என்பனவும் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-36)

# வடக்கில் சிறந்த சந்தை வாய்ப்புக்கு உரிய கட்டமைப்பு வசதிகள் தேவை

### யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

வட பகுதியில் சிறந்ததொரு சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு வர்த்தகர்களுக்கு உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறை மன்றத்தின் தலைவர் எஸ்.பூரணச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். வர்த்தக தொழில்துறை மன்றமும் அரச தகவல் தொடர்பாடல் தொல்நுட்ப முகவர் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள கண்காட்சி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று முன்தினம் மன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அபிவிருத்தியில் முன்னேற்றம் அடைந்துள்ள வடபகுதி தற்போது முதலீடுகளுக்கு சிறந்த களமாக அமைந்துள்ளது. அத்துடன் பல்வேறு கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தி வருகிறது. புதிய கைத்தொழில் ஆரம்பிக்கப் படுகின்றது. மக்களது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படு கின்றன.

குறிப்பாக அண்மைக் காலமாக வடபகுதி சந்தைத் துறையில் விரிவடைந்துள்ளது. இதற்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பில் பெரும்பாலான அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெறுகின்றன.

இந்த அபிவிருத்தி ஊடாக புதிய முதலீடுகளை விஸ்தரிக்க முடியும். வர்த்தக நிறுவனங்கள் தமது உத்தேச வாடிக்கையாளர்களின் தேவைகளை நன்கு அறிந்து கொள்ளவும், வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறப்பான சேவைகளை வழங்கவும் தகவல் தொடர்பாடல் கட்டமைப்பு ஊடான தீர்வாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


வியாபார மற்றும் தொழில் துறை சமூகத்தினரையும் தகவல் தொழில்நுட்ப வழங்குநர்களையும் ஒன்றாக இணைத்துத் தகவல் தொழில்நுட்ப பாவனை ஊடாக வியாபாரச் செயற்பாடுகளை இலகுவாக மேம்படுத்துவதும் தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குநர்களின் சந்தை வாய்ப்புக்களை அதிகரித்தலும் இந்த கண்காட்சியின் நோக்கமாகும்.

சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது தேவைக்கேற்ப தகவல் தொழில்நுட்ப மெ[illegible] பொருள்கள் மற்றும் தொழில்நுட் ரீதியிலான தீர்வுகளைப் பெற்று கொள்வதற்கும் வாய்ப்பாகவுள்ளது.

உள்நாட்டைச் சார்ந்த நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ளன. முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், வர்த்தகத் துறையினர், அரச, தனியார் நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்களும் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றலாம் எனவும் தெரிவித்தார். (ம-14-4)

# பொதுநலவாய அமைப்பில் இலங்கைக்கு இடமில்லை

## நீக்குவதற்கு இந்தியா வலியுறுத்த வேண்டும்: முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வன்த் சின்ஹா



சென்னை, ஏப்.5

போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இலங்கையை பொது நலவாய அமைப்பில் இருந்து நீக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்கா வலியுறுத்தியுள்ளார்.

ஈழத் தமிழர் பிரச்சினை மற் றும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து பார திய ஜனதா கட்சியின் நிலைப் பாட்டை விளக்குவதற்காக சென்னையில் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் கூறியதாவது:-

''போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இலங்கையை பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈழத் தமிழர்களுக்காக தமிழக மாணவர்கள் நடத்திய போராட்டம் தேசிய அளவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கச்சதீவை தாரை வார்த் தது, ராஜிவ் காந்தி-ஜெய வர்த்தனா ஒப்பந்தம், இந்திய அமைதிப்படையை இலங் கைக்கு அனுப்பியது போன்ற வையே ஈழம் மற்றும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் போன்ற பிரச்சினைகளுக்கு முக்கிய காரணங்களாக அமைந் துள்ளன. இந்தப் பிரச்சினை கள் குறித்து இந்திய மத்திய அரசு உடன் கவனமெடுக்க வேண்டும்''- என்று தெரிவித் தார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய பாரதிய ஜனதாக் கட்சியின் மற்றொரு மூத்த தலைவரான இல. கணேசன், ''பா.ஜா.க. தலைமையில் மத்தியில் ஆட்சி அமைந்தால், ஈழத் தமிழர்களின் உரிமைகளை காப்பாற்ற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்''- என்று தெரிவித்தார். (மற்றொரு செய்தி 21 ஆம் பக்கத்தில்

(ற)

இத்தாலி கடற்படையினர் விவகாரம்

# வழக்கை விசாரணை செய்யப் போவது யார்?

## இந்திய மத்திய அரசு தடுமாற்றம்

புதுடில்லி, ஏப்.5

இந்திய மீனவர் இத்தாலிக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணைகளை யார் தொடர்வது என்பது குறித்து இந்திய மத்திய அரசு ஆராய்ந்து வருவதாக்க் கூறப்படுகிறது.

வழக்கு விசாரணையை இந்திய தேசிய புலனாய்வு அமைப்பிடம் ஒப்படைக்க இத்தாலி அரசு எதிர்ப்பு தெரிவித்திருந்தது. அதைத் தொடர்ந்து வழக்கை சி.பி.ஐயிடம் ஒப்படைக்கலாமா அல்லது ஏற்கனவே முடிவு செய்தபடி என்.ஐ.ஏவிடம் ஒப்படைக்கலாமா என்பது குறித்தே ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் தமது நாடு சென்ற இத்தாலி கடற்படை வீரர்கள் இருவரையும் இந்தியா திருப்பி அனுப்ப இத்தாலி அரசு மறுத்தது. அதையடுத்து அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட மாட்டாது என்று இந்திய மத்திய அரசு உறுதியளித்ததை அடுத்து கடந்த 22ஆம் திகதி இந்தியா திரும்பினர்.

இந்த நிலையில் இந்த வழக்கை தீவிரவாத குற்றங்களை விசாரிக்கும் தேசிய புலனாய்வு அமைப்பிடம் (என்.ஐ.ஏ.) ஒப்படைக்க மத்திய அரசு முடிவு செய்தது. வழக்கு என்.ஐ.ஏயிடம் ஒப்படைக்கப்பட்டால் இத்தாலி வீரர்கள் மீது கடல்சார் பாதுகாப்பு சட்டப்படி வழக்கு தொடர அந்த அமைப்பு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த சட்டத்தின் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்டால் இத்தாலி வீரர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்பதால் என்.ஐ.ஏயிடம் வழக்கை ஒப்படைப்பதற்கு இத்தாலி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அதனால் இத்தாலி வீரர்கள் வழக்கை யார் விசாரிப்பார்கள் என்பதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து இந்திய மத்திய அரசு தீவிர ஆலோசனையை மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ற)

# துப்பாக்கி மோதல்; மாணவர்கள் இருவர் கைது

சென்னை மதுரவாயல் பகுதியில் கல்லூரி ஒன்றில் துப்பாக்கியுடன் சண்டையிட்டுக் கொண்ட மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மதுரவாயிலில் உள்ள கல்லூரி ஒன்றில் இரண்டு வெளிமாநில மாணவர்களுக்கு இடையே இன்று கைகலப்பு ஏற்பட்டது. அப்போது அதில் ஒருவர் தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் மற்றவரைத் தாக்கியுள்ளார்.

இதுகுறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். தாக்குதலுக்குள்ளான மாணவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றையவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். (ற)

# தமிழக மீனவர் மீதான தாக்குதல்; சோனியா, ராகுலை சந்திக்க

## மத்திய அமைச்சர் வாசன் தெரிவிப்பு

சென்னை, ஏப்.5

தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித் துப் பேசியதைத் தொடர்ந்து, காங்கிரஸ் தலைவர் சோனியா மற்றும் துணைத் தலைவர் ராகுல் காந்தி ஆகியோரைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாக மத்திய அமைச்சர் வாசன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை மற்றும் தமிழக மீனவர் பிரச்சினை என்பவற்றால் காங்கிரஸ் கட்சி மீது மாணவர்கள் மற்றும் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுகிறது. தமிழக மக்களின் நலன் சார்ந்த விடயத்தில், கட்சி மேலி டத்தில் தன் குரலை ஓங்கி ஒலிக்க வைப்பதன் மூலம் காங்கிரஸ் மீது ஏற்பட்டுள்ள அதிருப்தியை போக்கும் நடவடிக்கையில் வாசன் தற்போது ஈடுபட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசிய வாசன், இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று வலியுறுத்தியதுடன் தமிழக மீனவர் விவகாரத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

> இலங்கைத் தமிழர் பிரச்சினை மற்றும் தமிழக மீனவர் பிரச்சினை என்பவற்றால் காங்கிரஸ் கட்சி மீது மாண வர்கள் மற்றும் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவு கிறது.

இந்தநிலையில், தற்போது கட்சி ரீதியாக சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தியிடம் தமிழக மீனவர் பிரச் சினை தொடர்பாகப் பேசுவதற்கு வாசன் திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டம் ஆரம்பமாவதுக்கு முன்னர், சோனியாவைச் சந்திக்க அனுமதி கேட்டுள்ளார் என்று தெரிவிக் கப்படுகிறது.

(ற)

மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 06.08.1929 உதிர்வு 10.04.2010



செல்லையா பஞ்சலிங்கம்

திதி: அபரபக்க ஏகாதசி

எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் மூன்று
சென்றாலும் – அப்பா
உங்கள் பிரிவுத் துயர் வாட்டுகின்றது–எம்மை
என்றென்றும் ஆறாது உங்கள் நினைவலைகள்
மாறாது எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

கரந்தன், நீர்வேலி மேற்கு. (35667)(6.11) மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

### ஜம்மு காஷ்மீரில் நிலநடுக்கம்

புதுடில்லி, ஏப்.5

ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஆப்கன் இந்து குஷ் மலைப்பகுதிகளை மையமாகக் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிச்டர் அளவு கோலில் 5.8 ஆகப் பதிவாகியுள்ள நில நடுக்கம் தொடர்ந்து 10 வினாடிகள் உணரப்பட்டது இந்த நில நடுக்கத்தால் காஷ்மீர் பள்ளத்தாக்கு மக் கள் பதட்டமடைந்த னர்.

எனினும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் வெளி யாகவில்லை. (ற)

# கூட்டு இல்லை

## சரத் யாதவ்

புதுடில்லி, ஏப்.5

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி கிடை யாது என்று ஐக்கிய ஜனதா தளம் கட்சித் தலைவர் சரத்யாதவ் உறுதி படத் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. தலைமை யிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, உறுப்புக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து உரிய நேரத்ளதில் பிரதமர் வேட்பாளரைத் தேர்வு செய்யும் என்று அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ற)



ஒ வட்டம்
நூறு நடிகர்கள்
பத்து நாடகங்கள்

யாழ்பாணத்தில் முதல் தடவையாக
திறந்த வெளி நாடகத்திருவிழா–2013

ஏப்ரல் மாதம் 6ம், 7ம் திகதிகளில்
நல்லூர் முத்திரைச் சந்தி
சங்கிலியன் பூங்காவில்
நடைபெறுகின்றது.

USAID
FROM THE AMERICAN PEOPLE

ACTIVE THEATRE MOVEMENT



## ஆர்ஜென்ரீனாவில் பெரு வெள்ளம்: 53 பேர் சாவு

ஆர்ஜென்ரீனா தலைநகர் பியுனோஸ் ஐரெஸ் நகரில் கடந்த சில நாள்களாகப் பெய்த பலத்த மழை காரணமாக 53 பேர் உயிரிழந்துள்ளனர்.

மழையினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் ஏரிகள் திறந்து விடப்பட்டுள்ளன. அதனால் பெருக்கெடுத்து பாய்ந்தோடிய வெள்ள நீர் குடியிருப்புப் பகுதிகளைச் சூழ்ந்துள்ளது.

அதையடுத்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். நகரின் இயல்பு வாழ்க்கையும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்ரீனாவின் பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலைக்குள்ளும் வெள்ள நீர் உட்புகுந்ததால் மின் கசிவு ஏற்பட்டு விபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அதனால் பெற்றோலிய உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது. (ற)

# நீதிமன்றில் தாக்குதல் 53 பேர் உயிரிழப்பு

## ஆப்கன் ஹெராத் மாகாணத்தில் துயரம்



காபூல், ஏப்.5

ஆப்கனில் நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 53 பேர் உயிரிழந்துள்ளனர். 90 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

ஹெராத் மாகாணத்தில் உள்ள நீதிமன்ற வளாகத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை நோக்கி வந்த இரு வாகனங்கள் நீதிமன்ற வளாகத்துக்குள் உட்புகுந்தன. பாதுகாப்பு வீரர்கள் அவற்றைத் தடுத்து நிறுத்த முயன்ற போது அவற்றுள் இருந்த குண்டு ஒன்று பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. நீதிமன்றத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் அதிலிருந்து சுதாகரிப்பதற்குள் மற்றொரு வாகனத்தில் வந்த தீவிரவாதிகள் மூவர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் பொது மக்கள், படையினர் உள்பட 53 பேர் உயிரிழந்தனர். 90க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினரின் எதிர்த்தாக்குதலில் தீவிரவாதிகள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸார் தாக்குதலுக்கு தலிபான் அமைப்பு உரிமை கோரியுள்ளது என்றும் கூறியுள்ளனர். (ற)

# பேச்சு மூலம் தீர்வுகாண இன்னும் சந்தர்ப்பமுண்டு

## வடகொரியா முன்வரவேண்டும் என்கிறார் ஜோன் கெர்ரி

நியூயோர்க், ஏப்.5

பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கு வடகொரியாவுக்கு இன்னமும் வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க வெளியுற வுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி.

தென்கொரியா மீது வடகொரியா போர்ப் பிரகடனம் செய்துள்ள நிலையிலேயே ஜோன் கெர்ரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவித்துள்ள ஜோன் கெர்ரி,

''வடகொரியாவை அணு ஆயுத நாடாக ஏற்றுக்கொள்ள ஒருபோதும் தயாராக இல்லை. கொரியத் தீபகற்பத்தை அணு ஆயுதமற்ற மண்டலமாக மாற்றும் முயற்சிக்கு வடகொரியா ஒத்துழைக்க வேண்டும். ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பேச்சுக்களில் ஈடுபட வடகொரியா முன்வர வேண்டும்.

பிற நாடுகளை மிரட்டும் போக்கை அந்த நாடு கைவிட வேண்டும். கொரிய தீபகற்பத்தில் நிலைமை பதற்றமாக உள்ளது. மீண்டும் புளூட்டோனிய அணு உலையை வடகொரியா இயக்க முயன்றால் அது சர்வதேச விதிகளுக்கு முரணானது.

அதனால் வடகொரியா மேலும் தனிமைப்படுத்தப்படும். அதன் ஜனாதிபதி கிம் ஜோங் உன் ஆபத்தான பாதையிலேயே பயணிக்கின்றார்.

வடகொரியாவின் மிரட்டல்களை அமெரிக்கா முழுமையாகச் சமாளிக்கும். நேச நாடுகளான தென்கொரியா, ஜப்பான் என்பவற்றைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் பின்னிற்காது''- என்று தெரிவித்தார். (ற)

# இராணுவ ஆட்சியே விருப்பத்துக்குரியது

## பாக். இளைஞர்கள் கருத்து

இஸ்லாமாபாத், ஏப்.5

ஜனநாயக ஆட்சியை விட இஸ்லாமிய (ஷரியத்) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதும், இராணுவ ஆட்சியுமே தங்கள் நாட்டுக்கு பொருத்தமாக இருக்கும் என்று பெரும்பான்மையான பாகிஸ்தான் இளைஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில் அந்தநாட்டு இளைஞர்கள் ராணுவ ஆட்சிக்கும், இஸ்லாமிய சட்டத்துக்கும் ஆதரவு தெரிவித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

18 முதல் 29 வயதுக்குள்பட்ட 5,200 இளைஞர்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதில் 38 சதவீதம் பேர் இஸ்லாமிய சட்டத்தை நடைமுறைப்படுத்தி ஆட்சி நடத்துவதற்கும், 32 சதவீதம் பேர் இராணுவ ஆட்சிக்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஜனநாயக ஆட்சியை 29 சதவீத இளைஞர்களே ஆதரித்துள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தான் - ஆப்கன் எல்லையில் உள்ள மலைவாழ் பகுதியில் உள்ள இளைஞர்கள் முழுமையாக இஸ்லாமியச் சட்டதுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதனால் சமூகத்தில் ஒழுக்கம் ஏற்படும், ஊழல் குறையும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

நாட்டில் நிலவும் மோசமான பிரச்சினை எது என்பது தொடர்பான கேள்விக்கு, பயங்கரவாதப் பிரச்சினையைவிட விலைவாசி உயர்வுதான் மிகப்பெரும் பிரச்சினையாக உள்ளது என்றும் பெரும்பாலான இளைஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்று கருத்துக் கணிப்பை நடத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.(ற)

## முஷாரப்பின் சொத்து மதிப்பு ரூ. 64 கோடி



இஸ்லாமாபாத், ஏப்.5

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பின் சொத்துக்களின் மதிப்பு ரூ.64 கோடி என்று கூறப்படுகிறது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முஷாரப் போட்டியிடுகிறார். தேர்தலுக்காக முஷாரப் சமர்ப் பித்துள்ள வேட்பு மனுவிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தன்னுடைய சொத்து மதிப்பு ரூ.64 கோடி என்றும் கடந்த 3 ஆண்டுகளாக அவற்றுக்கானவரிஎதுவும்தாம்செலுத்தவில்லை என்றும் அவர் வேட்பு மனுவில் குறிப்பிட்டுள்ளார். வரி செலுத்தாததன் காரணமாகத் தம்மீது 3 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் அவரது சொத்து ரூ.12 கோடியால் அதிகரித்துள்ளது என்று வேட்புமனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## அமெரிக்க படைகளைத் தாக்கலாம்

### வடகொரிய ஜனாதிபதி அனுமதி

பியாங்யாங், ஏப்.5

அமெரிக்க இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துவதற்கான அனுமதி வடகொரிய இராணுவத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

வடகொரியா மீது ஏதேனும் வகையில் அமெரிக்கா தாக்குதல்களை முன்னெடுக்குமாயின் எதிர்த் தாக்குதல் நடத்துவதற்கு தயங்க வேண் டியதில்லை என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோன் உங் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான உத்தரவு வடகொரிய இராணுவத்தின் உயர் மட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ற)

# பாக். தேர்தலுக்கு 100 கண்காணிப்பாளர்கள்

## ஐரோப்பிய ஒன்றியம் அனுப்புகின்றது

புருசெல்ஸ், ஏப்ரல் 5

பாகிஸ்தானில் அடுத்த மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க 100 பார்வையாளர்களை அனுப்பவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரான மைகேல் கொலெர் தலைமையிலேயே இந்தக் குழு தேர்தலைக் கண்காணிப்புச் செய்யும் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத் துறைத் தலைவர் கேத்தரின் ஒஸ்டன் கருத்துத் தெரிவிக்கையில்,

''பாகிஸ்தானில் நடைபெற உள்ள தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதன்முறையாக ஜனநாயக முறையில் ஆட்சி மாற்றம் நடக்க இருக்கிறது.

மைகேல் தலைமையில் அனுப்பப்படும் இந்தக் குழுவினர் சிறந்த முறையில் செயற்பட்டு பாகிஸ்தான் வாக்காளர்களுக்கு தேர்தல் முறையின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.''-என்று தெரிவித்தார். (ற)

# 17 ஆண்டுகளின் பின் திபெத் அரசியல் கைதி விடுதலை

பீஜிங், ஏப். 5

17 வருடங்களின் பின்னர் திபெத்திய அரசியல் கைதி ஒருவரை விடுவித்துள்ளது சீனா.

திபெத்தைச் சேர்ந்த ஜிக்மே கியாட்சோ என்ற புத்த துறவியே இவ்வாறு விடுக்கப்பட்டுள்ளார்.

சீனாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 52 வயதான ஜிக்மே கியாட்சோவின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்தே, தண்டனைக் காலம் முடிவடைய ஒரு வருடமுள்ள நிலையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு 18 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

சீன மற்றும் திபெத்தியர்களுக்கிடையிலான மோதல்களின்போது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தமை மற்றும் பிரிவினைவாத குற்றச்சாட்டுக்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அவருக்கு முதலில் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனையே வழங்கப்பட்டது. எனினும் சிறையில் திபெத் சமயத் தலைவர் தலாய் லாமாவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தமைக்காக தண்டனை 18 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## மலேஷிய நாடாளுமன்றம் கலைப்பு

கோலாலம்பூர், ஏப்.5


மலேஷியப் பிரதமர் நஜீப் ரஸாக்கினால் பொதுத் தேர்தலை முன்னிட்டு அந்த நாட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. 60 ஆண்டுகளாக ஆட்சியிலிருக்கும் தேசிய முன்னணியின் கூட்டணி அரசு தொலைக்காட்சியொன்றின் ஊடாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து தேர்தல் அதிகாரிகள் விரைவில் கலந்துரையாடி தேர்தல் திகதியை முடிவு செய்வார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளதுடன், பெரும்பாலும் இந்த மாதம் தேர்தல் இடம்பெறலாம் எனவும் கருதப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் தற்போதைய பிரதமர் நஜீப் ரஸாக்கிற்கும், எதிர்க்கட்சித் தலைவர் அன்வார் இப்ராஹிமிற்கும் இடையில் பலத்த போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

## வடமாகாணத்தின் முதலாவது மின்சார மயானம்





ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்துக்கு அமைவாக வட மாகாணத்தில் வவுனியாவில் முதலாவதாக அமைக்கப்பட்ட மின்சார மயானம் கடந்த முதலாம் திகதியிலிருந்து செயற்படத்தொடங்கியுள்ளது. கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் திறந்து வைக்கப்பட்ட இந்த மின்சார மயானம் இதுவரை செயற்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### கிளிநொச்சியில் இரசாயன, உப்பு உற்பத்தி

# தொழிற்சாலைகளை மீள இயக்கி வேலை வாய்ப்பை வழங்க வேண்டும்

கிளிநொச்சி, ஏப்.5

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் மற்றும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் ஆகிய இரு தொழிற்சாலைகளும் 1990 ஆம் ஆண்டுக்குப்பின்னர் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்த இரண்டு தொழிற்சாலைகளும் இயங்காததால் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு பேருக்கும் அதிகமானவர்கள் தொழில்வாய்ப்பை இழந்துள்ளதுடன் இவர்களைச் சார்ந்து வாழ்ந்த குடும்பங்களும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. இந்த நிலையில் ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் மீளவும் 2005 ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் இயங்க ஆரம்பித்தது.

இதன்போதும் சுமார் 862 பேர் வரையில் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். பின்னர் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காரணமாக குறித்த தொழிற்சாலை மீளவும் செயலிழந்தது. அந்தப் பணியாளர்களும் பாதிக்கப்பட்டனர்.

குறித்த பகுதிகளில் கண்ணிவெடி மற்றும் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு கடந்த ஆண்டு தொழிற்சாலை மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ள போதும் தொழிற்சாலையை மீள இயங்க வைக்க எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த தொழிற்சாலைகளை மீள இயங்குவதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றிருக்கும் பலருக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க முடியும்.

எனவே குறித்த தொழிற்சாலைகள் இரண்டையும் மீள இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது அமைப்புகளும் ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-6)

## கொழும்பில் கடத்தப்பட்ட வாகனம் வவுனியாவில் மீட்பு

கொழும்பில் வைத்து கடத்தப்பட்ட வாகனம் வவுனியாவில் வைத்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது வாகனத்தைக் கடத்தியதான சந்தேகத்தின் பேரில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான வாகனமே இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் வவுனியா கோவில்குளம் பகுதியில் இருந்து அந்த வாகனத்தை மீட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார ஜெயதிலக மற்றும் பொலிஸ் பரிசோதகர் சிரிவர்த்தன தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். சந்தேக நபர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## செயற்கை அவயவங்கள் பொருத்துதல்

மன்னார், ஏப்.5

'மேத்தா' நிறுவன அனுசரணையுடன் செயற்கை அவயவங்கள் பொருத்தும் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை முல்லைத்தீவு, மாங்குளம் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கடந்த மாதம் கிளிநொச்சி 'கருணை இல்லத்தில்' செயற்கை கை, கால்களுக்காக அளவு கொடுத்தவர்கள் வருகை தந்து தமக்கான செயற்கை அவயவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேத்தா நிறுவனத்தில் முன்னர் பயன்பெற்றவர்களும் குறித்த தினத்தில் தமது செயற்கை உறுப்புக்களை புதுப்பித்துக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில்

# குற்றங்களைத் தடுப்பதற்கு பொலிஸார் விசேட நடவடிக்கை

ஒட்டுசுட்டான்,ஏப்.5

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் குற்றச் செயல்களைத் தடுக்கும் வகையில் பொலிஸார் விசேட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அதிகாரிகள் இணைந்து விசேட ரோந்து நடவடிக்கைகளில் இரவு, பகலாக ஈடுபட்டுள்ளனர். அத்துடன் அதிகரித்த வேகத்தில் பயணிக்கும் வாகன சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், வீதி விதிமுறைகளை மீறுவோரைக் கண்டித்தல், ஆவணங்களைப் பரிசீலித்தல், சட்ட விரோத கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துதல், பெண்கள், குழந்தைகளை வன்முறைக்கு உட்படுத்துவோரை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்துதல், அனுமதி இன்றி மரம் தறித்தல், மணல் ஏற்றுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பிலும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மை நாள்களாக அதிகரித்த கசிப்பு உற்பத்தி ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அதனை முற்றாக ஒழிக்க தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-500)

## நட்டாங்கண்டல் கிராமத்தில்

# மின்சாரத்தின் வருகைக்காக காத்திருக்கும் குடும்பங்கள்

துணுக்காய்,ஏப்.5

நட்டாங்கண்டல் கிராமத்துக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாததால் 300 வரையான குடும்பங்கள் இரவில் இருளில் வாழ்ந்து வருகின்றன.

நட்டாங்கண்டல் கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மின்சார கம்பங்கள் நடும் வேலைகள் நிறைவடைந்து நீண்ட நாள்கள் ஆகியும் அடுத்த கட்ட வேலைகள் எவையும் நடைபெறவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மின்சாரம் இன்மையால் தமது அடிப்படைத் தொழிலான விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வசதிகள் போதாமல் உள்ளதாகவும் இதனால் அவர்கள் கல்வியில் பின்னடைவைச் சந்திக்க வேண்டி உள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலை இருந்தும் அங்கு மின்சாரவசதி இன்மையால் இரவு நேரச் சிகிச்சைகளை நடத்த முடியாதுள்ளதாகவும், மின்சார உதவியுடன் பேணிப் பாதுகாக்கும் மருந்து வகைகளை வைத்திருக்க முடியாதுள்ளதாகவும் வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். (ஐ-415)

# ஊற்றுப்புலம் பாலத்தை புனரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.5

கிளிநொச்சி ஊற்றுப்புலம் திருவள்ளுவர் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தின் பழைய குடியிருப்புக்குச் செல்லும் திருவள்ளுவர் வீதிப் பாலம் புனரமைக்கப்படாமல் தற்காலிகமாக அமைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இந்தப் பாலம் அமைந்துள்ள வீதியூடாக மழை காலங்களில் போக்குவரத்து துண்டிக்கப்படுகின்றது. மேலும் கடந்த ஆண்டு இந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான கட்டுமானப் பொருள்களை எடுத்துச் செல்வதில் சிரமங்களும் காணப்பட்டன.

இந்த நிலையில் அண்மையில் இந்தப் பகுதிக்குச் சென்ற கரைச்சிப் பிரதேச சபையினரிடம் இந்தப் பாலத்தை புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. (க-6)

# நட்டாங்கண்டல் - பாண்டியன்குளம் வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

நட்டாங்கண்டல், ஏப்.5

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் - பாண்டியன் குளம் பிரதான வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமையால் தாம் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எஸ்.ஆர் சந்தியில் இருந்து நட்டாங்கண்டல் கிராமம் வரையான 3 கிலோமீற்றர் வீதியே நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகின்றது.

இந்த வீதியே நட்டாங்கண்டல்-பாண்டியன் குளம் ஊடாக பல்வேறு இடங்களுக்கு போக்குவரத்துச் செய்வதற்கான முக்கிய வீதியாக உள்ளது.

இந்த வீதியூடாக பஸ் சேவைகளும் சீரான முறையில் நடைபெறாமையினால் மக்கள் தனியார் வாகனங்களையே பயன்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு வசதியற்றவர்கள் கால்நடையாகச் சென்றே தமது பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது.

அத்துடன் நட்டாங்கண்டல் கிராமத்தில் 15 கிராமங்களுக்கென ஒரு மகப்பேற்று மருத்துவமனை, நோயாளர் சிகிச்சை நிலையம் என்பனவே காணப்படுகின்றன.

வீதி சீரின்மை காரணமாக அவசர சிகிச்சை பெறுவதற்கு மக்கள் வெளியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கும், பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தமது வாழ்வாதார அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு குறித்த வீதியைப் பயன்படுத்த முடியாதுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளதுடன், தமது இடம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுள்ளனர். (ஐ-415)

# பஸ் சேவை இன்மையால் மாணவர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஏப்.5

முல்லைத்தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பஸ் சேவை இடம்பெறாததால் தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அந்த வழியே வரும் உழவு இயந்திரங்களிலும், டிப்பர் வாகனங்களிலுமே மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் பாதுகாப்பில்லாத வாகனங்களில் ஏறுவதாலும், வீதிகள் சீரின்மையாலும் விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களின் போக்குவரத்தில் கல்விச் சமூகம் அக்கறை கொண்டு பாடசாலை பஸ் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-500)

# இலங்கை அரசு இந்தியா மீது கோபம் கொள்வதில் அர்த்தமில்லை

## ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.5

இந்தியாவின் மீது இலங்கை அரசு கோபம் கொள்வதில் அர்த்தமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் பிழைகளுக்கு இந்தியாவையோ அல்லது வேறும் நாடுகளையோ குற்றம் சுமத்துவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

நாடு தற்போது எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலைமைகளுக்கு அரசே பொறுப்புச் சொல்ல வேண்டும். அரசு சர்வதேச சமூகத்துக்கு பல்வேறு வாக்குறுதிகளை அளித்த போதிலும் அவை உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாக அரசு பல்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குறுதி அளித்த போதிலும், அந்த வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை - என்றார். (ச)



தமிழ் - சிங்கள புதுவருடத்துக்கான சுபவேளையை அறிவிக்கும் சம்பிரதாயபூர்வ பத்திரம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. அருகில் கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க உட்பட பலர் காணப்படுகின்றனர்.

# நடைமுறை அரசியலுக்கு ஒருபோதும் வரமாட்டேன்

## அத்தகைய எதிர்பார்ப்பும் இல்லை என்கிறார் சந்திரிகா

கொழும்பு,ஏப்.5

நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் மீண்டும் நடைமுறை அரசியலுக்கு வரப்போவதில்லை. அத்தகைய எதிர்பார்ப்பும் எனக்குக் கிடையாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'மவ்பிம' சிங்களப் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-



தற்போது நிலவும் அரசியல் முறைமையை மாற்ற எவராலாவது செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டால், அத்தகைய பொதுப்படையான செயற்பாடுகளுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பு வழங்குவேன்.

நாட்டின் சட்டம் மற்றும் நீதிமன்றத்தின் சுதந்திரமான இயக்கம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

நான் ஆரம்பத்திலிருந்தே அதற்காக என்னை முன்னிலைப்படுத்திக் கொண்டேன். அந்த நோக்கில்தான் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவரின் பதவியேற்பு வைபவத்திலும் பங்குபற்றினேன். - என்றார். (ச-22)

# பொதுபல சேனாவின் மற்றொரு அடாவடி

## இஸ்லாம் மத பாடசாலையை மூடிவிடுமாறு மிரட்டல்

கொழும்பு,ஏப்.5

அனுராதபுரம் ,மல்வத்துஓயா, டிக்சன் ஒழுங்கையில் நடத்தப்பட்டு வரும், இஸ்லாமிய மத பாடசாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்காதுவிட்டால், அது பலவந்தமாக அகற்றப்படும் என்று பொது பல சேனா அமைப்பு அறிவித்துள்ளது என்று அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்று அனுராதபுரம் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் மஹேஷ் சேனாரத்ன தெரிவித்தார்.

பொது பல சேனா அமைப்பினர் அனுராதபுரத்தில் உள்ள இஸ்லாமிய அறநெறிப் பாடசாலைகளை அகற்றினால், நகரத்தில் உள்ள சிங்களம் மற்றும் முஸ்லிம் பொது மக்கள் இடையில் பதற்றமான நிலைமை ஏற்படும் என்று அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னரும் குறித்த முஸ்லிம் அறநெறிப் பாடசாலை மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்திச் சேதப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரசிலிருந்து மு.கா. வெளியேற வேண்டும்

## உயர்மட்ட கூட்டத்தில் அழுத்தம்

கொழும்பு,ஏப்.5

முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாதத்தைக் காட்டிநிற்கும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புக்கள், தாக்குதல்கள் ஆகியவற்றை நிறுத்துவதற்கு அரசு இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

அதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உடனடியாக அரசிலிருந்து வெளியேற வேண்டும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைப்பாளர்களும் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்

கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற கட்சியின் உயர்மட்டக் குழுவின் கூட்டத்தில் வைத்தே அவர்கள் இவ்வாறு அழுத்தம் கொடுத்துள்ளனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சபீக் ராஜாப்தீன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் 'மவ்பிம' சிங்கள ஊடகத்துக்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த உயர்மட்டக்குழுவின் கூட்டத்துக்கு கட்சியின் அனைத்துத் தொகுதி அமைப்பாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமிடம், முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகள் மற்றும் அடக்கு முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசிலிருந்து வெளியேற வேண்டும்.

அத்தோடு அரசுக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள பலத்தை அகற்றி விடுவதற்கும் செயற் பட வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தனர்.

தற்போது முஸ்லிம்களுக்கு எதிராக உருவாகியிருக்கும் பிரச்சினைகள் குறித்து அமைச் சரவையில் கலந்துரையாடி, சம்பந்தப்பட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கிறேன் என்று தேசிய அமைப்பாளர்களுக்கு ரவூப் ஹக்கீம் உறுதி வழங்கியுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் முஸ்லிம் மக்கள் மிகப் பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும் பொது பல சேனா அமைப்புக்கு இயற்கையான இறப்பு ஏற்படும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எனினும் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறும் பிரச்சினைகள் குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அமைச்சர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.-என்றார். (ச-22)

**வேலையாள்கள் தேவை**

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவ முள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை.
தொடர்பு: த.குமாரசாமி அன்சன்ஸ்
248/1, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(c/8048)(6.7.11)

**Vacancy**
**Sanken Construction (Pvt) Ltd.**

Having the following Vacancies in Jaffna Branch.

Asst.Engineers - N.D.T/ HNDE Civil Eng. Candidates Only

Quantity Suveyors - B.Sc(Q.S) from University of Moratuwa or N.D.T.(Civil)

*Details to be Sent*

The Manager,
Sanken Construction (Pvt) Ltd.,
31,Wyman Road, Nallur,Jaffna.
Email:jayanthi@sankenconstruction.lk
(C/8083)(5.6)

# மரண அறிவித்தல்

## திருமதி ரூத்பூமலர் சிவப்பிரகாசம்



கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரூத்பூமலர் சிவப்பிரகாசம் 03.04.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், மேசி (மலர்-கனடா), ரமணி (UK), நேசன், பட்டு (கனடா), குஞ்சு (UK), காலஞ்சென்ற பபி ஆகியோரின் தாயும், கேபேட் (கனடா), யசோதரா, யசிந்தா, அருள்மொழி (கனடா), அருள் (UK) ஆகியோரின் அன்பு 'மாமியும் ஜோய்ஸ் - இலோடி (கனடா), ஒட்றி (கனடா), பேசி (UK), மேசியா (UK) சார்ளி, மனோச் - கரோலி, அனோசன் (அபுதாபி), கொன்ரன்ஸ் (அபுதாபி), விசாளினி, டானியல் (கனடா), சேரா (கனடா), டனுக்கா (கனடா), சனூஜன் (UK), சகானா(UK) ஆகியோரின் பேர்த்தியும், ஜெறுசாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.04.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் 2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

'பாலஜீவனம்'
கற்கோவளம்,
பருத்தித்துறை.

தொ.பே. 077 6225 033 (நேசன்),
4162 9860 69 (ஜீவா - கனடா),
9054 6009 70 (மேசி),
2084 7057 36 (குஞ்சு - (UK).

(35624) (45.6)

# ஆரம்ப நிகழ்வும் நிர்வாகிகள் தெரிவும்

## சமூக சேவை தொழிற்சங்கத்தில்

தென்மராட்சி,ஏப்.5

நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்கள் இணைந்த தேசிய சமூக சேவைகள் அலுவலர்கள் தொழிற்சங்க ஆரம்ப நிகழ் வும் நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம் பெற்றது.

கொழும்பு பன்னிப்பிட்டியவில் உள்ள மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஆரம்பக் கூட்டத்தில், ஒன்பது மாகா ணங்களின் சமூக சேவைகள் அலுவலர் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் பின்வருமாறு:

தலைவர் - சமன் கபில, பிரதித் தலைவர்கள்- வே.தபேந்திரன், ஜீவன் வீரக்கோன் செயலாளர்- சந்துன் குணசிங்க, பிரதிச் செயலாளர்கள் - றொசான் அமரவன்ஸ, ஜயந்த பிரேம்லால், பொருளாளர்- ஜே.ஜீ.ர.குமார.

ஒன்பது மாகாணங்களில் இருந்தும் தலா ஒரு பிரதிநிதி நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

வடக்கு மாகாணத்திற்கு யாழ். பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் வ.சுரேஸ்குமார், கிழக்கு மாகாணத் திற்கு வாழைச்சேனை பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் இ.ஜெயசேகர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் சமூக சேவைகள் அலுவலர்களின் சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் தொடர்பாக ஆணைக்குழு வினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு சங்கத்தினால் எதிர்ப்பு தெரிவிப்பதெனவும் அலுவலர்களின் உயரிய நலன்களைப் பாதுகாப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ-9)

# மணிவிழா ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 5

பல்துறை வல்லோன் கலாநிதி த.கலாமணியின் மணிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரைகளை சிவஸ்ரீ சோமஸ்கந்தராஜக் குருக்கள், பேராசிரியர் ஞா.பிலேந்திரன், அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார், பேராசிரியர் க.சின்னத்தம்பி ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் , பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி, பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி க.யோகநாதன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வி.விசாகரூபன், பிரபல எழுத்தாளர் தெணியான், நெல்லியடி மத்திய ம.வி. அதிபர் எஸ்.சேதுராஜா, கல்வியியற்றுறை தலைவர் கலாநிதி அனுஷியா சத்தியசீலன், கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா, அல்வாய் மனோகரா சனசமூக நிலையத் தலைவர் ந.துரைராஜா, கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலஷ்மி இராசநாயகம், முன்னாள் பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (எ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 06.03.1946 மறைவு 06.03.2013



## அமரர் முருகுப்பிள்ளை இரத்தினம்

கடந்த 06.03.2013 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து உதவிகள் புரிந்தோருக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவிகள் புரிந்த அன்புள்ளங்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (05.04.2013) வெள்ளிக்கிழமை காலை 5.00 மணிக்கு திக்கம் பள்ளந்தண்ணி ஆலயத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரி,அல்வாய் மேற்கு,
திக்கம்.

குடும்பத்தினர்.

(35537) (6.7.11)

# பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம்,ஏப்.5

வடமராட்சி வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள பழைய மாணவர்கள் விழா ஏற்பாட்டாளரான செ.சுரேந்திராவுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் கோயில் வீதியில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 497 7019

(35577)(6.11)


# நிர்வாக சபை தெரிவு

கிளிநொச்சி,ஏப்.5

இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளிநொச்சிக் கிளையின் கரைச்சிப் பிரிவிற்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. தலைவர்-தி.சிவரூபன், செயலாளர்-த.சேதுபதி, பொருளாளர்-சி.பசுபதிப்பிள்ளை மற்றும் ஐந்து பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (உ- 405)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 5

யாழ். கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவும், விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும், புதுக்குடியிருப்பு இலங்கை வங்கி முகாமையாளருமாகிய ந.குணபாலனும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

☎ 0215671111
advt@uthayan.com

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள் - 2011

1. இசைமாணி/ நடனமாணி முதலாம் வருடத் தேர்வு
2. இசைமாணி/ நடனமாணி இரண்டாம் வருடத் தேர்வு
3. இசைமாணி/ நடனமாணி மூன்றாம் வருடத் தேர்வு
4. இசைமாணி/ நடனமாணி நான்காம் வருடத் தேர்வு

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை 02.05.2013 வியாழக்கிழமை தொடக்கம் 10.05.2013 வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு மண்டபத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இசைமாணி/ நடனமாணி முதலாம் வருடத் தேர்வு<br>இசைமாணி/ நடனமாணி மூன்றாம் வருடத் தேர்வு | 02.05.2013 - 06.05.2013 |
| இசைமாணி/ நடனமாணி இரண்டாம் வருடத் தேர்வு<br>இசைமாணி/ நடனமாணி நான்காம் வருடத் தேர்வு | 07.05.2013 - 10.05.2013 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 29.04.2013 திங்கட்கிழமை தொடக்கம் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*முக்கிய குறிப்பு:* செய்முறைப் பரீட்சைகள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

(சி/8076) (45.6)

பதிவாளர்.

# மரண அறிவித்தல்

## கதிரவேலு பஞ்சாட்சரம் [ஆசாரியார்]



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பஞ்சாட்சரம் (ஆசாரியார்) 01.04.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு நாகம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும்,சின்னத்துரை-பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ருக்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் சிறிறஜனி, பவனீதரன்,சிறீரதன், சிறீரதி (யூனியன் அஷ்யூரன்ஸ்), சிறீறஞ்சனா, சாந்தகுமார்(சவுதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கணேஷராசாவின் அன்புச் சகோதரனும், சந்திரமோகன், மனோஜ்சித்திரா, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், லக்ஷனா, சஜீவன், சந்துஜன்,அபிஷனா, றம்மியா, மதுமிதா,டினோஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி, மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.(மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கை)

(35647)(5.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஓராண்டு சென்றதுவோ.......



தோற்றம் 07.04.1926 மறைவு 17.03.2012

திருமதி

## இரத்தினம் பஞ்சாபிகேசன்

ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகன்றிடுமோ அம்மா!

எமது குடும்பத் தலைவியின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (05.04.2013) எமது இல்லத்தில் நடைபெறும். இந்தப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்களை அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/9242)(5-8)

சங்கம் ஒழுங்கை,
சங்கத்தானை, சாவகச்சேரி.

'இசைப் பேரறிஞர்'
கலாநிதி கே.எம். பஞ்சாபிகேசன்
குடும்பத்தினர்.

### ஹெரோயின் வைத்திருந்தவருக்கு தூக்கு

கொழும்பு,ஏப்.5
ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றவாளிக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சுரசேன நேற்றுமுன் தினம் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

பொரளை, சேர்வன் டைன் பாதையில் கொழும்பு குற்றப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போதே குறித்த நபர் சிக்கியுள்ளார்.

அவர் கைதான போது 5800 மில்லி கிராம் போதைப் பொருள் அவரிடமிருந்து மீட்கப்பட்டது. அரச பகுப்பாய்வாளரின் விசாரணையில் 2.4 கிராம் ஹெரோயின் இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. அதனால் சந்தேகம் இன்றி குற்றம் நிரூபிக்கப் பட்டுள்ளது என்று நீதிபதி தெரிவித்தார்.

தான் ஹெரோயின் விற்பனையாளர் இல்லை என்றும் அருந் துவதற்காக போதைப் பொருள் பைக்கட் ஒன்றைக் கொள்வனவு செய்யும் போது தான் கைதானார் எனவும் குற்றம்சாட்டப்பட்டவர் தெரிவித்தார்.

முறைப்பாட்டாளர் சாட்சிகளை சமர்ப்பித்த போது குற்றம் சுமத்தப்பட்டவரால் அவற்றுக்கான காரணங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# பட்டதாரி நியமனங்களில் பாரபட்சத்துக்கு இடமில்லை

## தலைமைத்துவப் பயிற்சியே வழங்கப்படுகிறது என்கிறார் அமைச்சர் ஜோன் செனவிரத்ன



கொழும்பு,ஏப்.5
பட்டதாரிகளுக்கான அரச சேவை நியமனத்தில் கட்சி, இனம், மொழி, பிரதேசம் என்ற எந்தப் பாகுபாட்டுக்கும் இடமில்லை. சகலருக்கும் கட்டம் கட்டமாக நிரந்தர நியமனம் வழங்கப்படுவது உறுதி என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன் தினம் புதன்கிழமை தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு வருட பயிற்சிக் காலத்தை நிறைவுசெய்யும் சகலருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் 10,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் நிரந்தர நியமனத்தின் பின்னர் அவர்களுக்கு 23,000 ரூபா சம்பளம் வழங்கப்படும்.

முதல் கட்டமாக 5,491 பட்டதாரிகளுக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு வருடப் பயிற்சியை முடித்துக் கொண்ட மேலும் 9,380 பட்டதாரிகளுக்கு இந்த வாரம் நிரந்தர நியமனம் வழங் கப்படவுள்ளது.

அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுகிறது என்று கூறப்படுகின்றமை முற்றிலும் பொய்யான பிரச்சாரமாகும். அவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சியே வழங்கப்பட்டு வருகிறது.

வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் அரசு ஒரே தடவையில் 52,000 பட்டதாரிகளுக்கு அரச துறையில் தொழில் வழங்கத் தீர்மானித்துள்ளது.

பட்டதாரிகள் நிரந்தரமாக்கப்பட வில்லை. அவர்களுக்கு நிரந்தர சம்பளம் வழங்கப்படவில்லை என்று சிலர் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர். அவர்களின் முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. ஏனெனில் அரசு ஒருவருட பயிற்சியை முடிக்கும் பட்டதாரிகளுக்கு உரிய காலத்தில் நிரந்தர நியமனம் வழங்கி வருகின்றது.

இதே வேளை, 35 வயதுக்குக் கூடிய பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட வில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. எனினும் நாம் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்துள்ளோம். அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் அவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப் படும்.35 வயதுக்குக் கூடிய பட்டதாரிகளில் 453 பிக்கு பட்டதாரிகளும் உள்ளனர்.

மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுக்கு கல்வி, புத்த சாசனம், கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சுக்களில் தொழில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.-என்றார்.(ச)

## பட்டதாரிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் ஆரம்பம்

### 9 இல் நிறைவு வைபவம்

கொழும்பு,ஏப்.5
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்ட 15,596 பட்டதாரிகளுக்கான இரண்டு வார தலைமைத்துவ பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

இரண்டு வாரங்களைக் கொண்ட இந்த தலைமைத்துவ பயிற்சி 16 நிலையங்களில் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றன. அதன் நிறைவு வைபவம் எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

51,000 பட்டத்தாரிகளை ஒரே தடவையில் அரச சேவையில் இணைத்துக்கொண்டமை அரச செலவினங்களுக்கு சுமையாக அன்றி வளமாக அமைந்துள்ளது.

எனவே அவர்களை உரிய முறையில் வழிநடத்தி நாட்டின் அபிவிருத்திக்காக உரிய முறையில் ஈடுபடுத்த வேண்டியது அரச உயர் அதிகாரிகளின் பொறுப்பாகும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

கிராமிய மட்டத்தில் நியமிக்கப்பட உள்ள குறித்த பட்டதாரிகள் சவால்களுக்கு முகம்கொடுத்து அதனை வெற்றி கொள்வதற்கான தலைமைத்துவ பயிற்சிகள் இராணுவத்தினரின் உதவியுடன் வழங்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் கூறினார். (ச)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி கணேசஐயர்



காரணவாய் கிழக்கு, சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கணேசஐயர் 03.04.2013 புதன்கிழமை இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதிகுருக்கள் - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், கணேசஐயரின் (இரத்தினஐயர், கரணவாய் சிவன் கோயில் ஆதீன கர்த்தாவும் பிரதமகுருவும்) அன்பு மனைவியும், சிவனேசகுருக்கள் (பிரதம குரு, பருத்தித்துறை சிவன் கோயில்), வதனமலர், அனுஷியாதேவி, ரேணுகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரியதர்சினி, நாகேஸ்வரக்குருக்கள், கிருஷ்ணபவானந்த குருக்கள், சோமஸ்கந்த சர்மா (பண்பாட்டலு வல்கள் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், சரண்யா (லண்டன்), மோதிலால் (லண்டன்), நாகேந்திரசர்மா, சங்கீதா, சுப்பிரமணியசர்மா, நரேந்திரன், கணேசன், ஆருத்திரா, அருஷ்னிகா, துளசிகா, கீதாம்ருத சர்மா, சுபிருத்திரசர்மா, கிருஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.04.2013) வியாழக்கிழமை கிராய் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயிலடி,
கரணவாய் கிழக்கு,கரவெட்டி. (35650)(6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## மாணவர்களில் 15 வீதமானோருக்கு நீரிழிவு நோய்

கொழும்பு,ஏப்.5
பாடசாலை மாணவர்களில் 15 சதவீதமானோர் தற்போது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் சுகாதார நலனில் அக்கறை செலுத்தும் வகையில் புதிய திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதனால் தொற்றாத மற்றும் ஏனைய நோய்கள் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுபடுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டம் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப் படவுள்ளது.

அதன் முதல் கட்டமாக இத்திட்டம் கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1969, நட்சத்திரம் மூலம், லண்டன் PR உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
தொடர்பு: 077 3648 798
(35648) (45.6)

### வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
56 - XXXX இலக்கமுடைய
டொல்பின் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 3001 119
(35649) (45.6)

"கர்த்தராலே ஆயிற்று. இது நம்முடைய கண்களிற்கு ஆச்சரியமாயிருக்கிறது"
சங்கீதம் 118:23

10th Year Anniversary www.icmmsinhla.com
CHURCH OF CHRIST
10 ஆம் ஆண்டு நிறைவு நன்றி துதி ஆராதனை

ஆராதனை :
05 ஏப்ரல் வெள்ளி மாலை 6.00 மணி
வேதாகமக் கருத்தரங்கு :
06 ஏப்ரல் சனிக்கிழமை காலை 8.00 தொடக்கம் மாலை 6.00 வரை மற்றும் விசேஷ ஆராதனை மாலை 8.00 மணி
ஆராதனையும், சுகமளிக்கும் ஆராதனையும் :
07 ஏப்ரல் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி




இடம் : கிறிஸ்துவின் சபை (I.C.M.M)
அனைத்து சபை போதகர்களும், ஊழியர்களும், விசுவாசிகளும் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெறுக..!
(45662) (8)
418, நாவலர் வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 6821, 9141

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24.02.1923 — மறைவு 07.03.2013

அமரர்
### சுப்பையா கமலம்

கடந்த 07.03.2013 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி சுப்பையா கமலம் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், மலர் வளையங்கள் செலுத்தி துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இன்று (05.04.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வேரற்கேணியடி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (35651) (10.6)
குடும்பத்தினர்.



# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே......




இன்றைய சமுதாயத்தில் நவநாகரிக மோகத்தால் நாட்டம் செலுத்துவதும், அதில் நேரத்தை வீண்விரயம் செய்வதும் ஆண்களே. முன்னைய காலத்தில் வீரம், குடும்பப்பொறுப்பு, வேலை, அன்பு, கட்டளை என்பவற்றுக்கு உதாரணம் ஆண்கள்தான். ஆனால் இந்தக் காலகட்டத்தில் ஆண்கள் முற்றிலும் வேறுபட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். நவநாகரிகம் என்ற போர்வையில் கூந்தலை குறைத்து வெட்டுவதற்கு பதிலாக அவர்களில் பலர் பெண்களைப் போன்று கூந்தலை வளர்த்துக் கொண்டும் ஒரு பக்கச் செவியில் கடுக்கன் போட்டுக் கொண்டு திரிகிறார்கள்.

நவீன காலத்தில் ஆண்கள் பேஸ்புக், தொலைபேசி போன்றவற்றால் சீரழிந்து போகிறார்கள். கைபேசியில் ஆபாச படங்களைக் காட்டி பெண்களை பாலியல் பலாத்கார இம்சைக்கு உட்படுத்துகிறார்கள். முன்னைய காலத்தில் ஓர் ஆணின் பாதுகாப்பில் வீட்டிலோ, கோவில்களிலோ பாடசாலைகளிலோ எங்கென்றாலும் பெண்களைப் பாதுகாப்பாக விட்டுச் செல்வார்கள். ஆனால் இந்தக் காலத்திலேயோ எந்தவொரு ஆண்களையுமே நம்ப முடியாதுள்ளது. அது ஒரு தந்தையாக இருக்கட்டும். சகோதரனாக இருக்கட்டும், உறவினர் எவரையுமே நம்ப முடியாமல் பெண்கள் தவிக்கிறார்கள்.

முன்பிருந்த ஆண்கள் அழகாய் வேட்டி, சால்வை உடுத்தி கலாசாரத்தை பேணி வந்தார்கள். ஆனால் இன்றைய ஆண்கள் இறுக்கமான உடைகளையும் சில ஆண்கள் தங்கள் உள்ளாடை தெரியும் அளவுக்கு அசிங்கமாக உடை கூட உடுக்கிறார்கள். இன்னும் சில காலம் போனால் அரை நிர்வாணமாகவும் போகத் தயங்கமாட்டார்கள்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் சேட் போடும்போது ஜீன்ஸ்க்குள் உள்ளே விட வேண்டிய சேட்டை வெளியில் தான் விடுவார்கள். ஆசிரியரின் பேச்சையோ, பெற்றோரின் பேச்சையோ மதிக்கமாட்டார்கள். தாம் நினைத்தபடி தான் நடப்பார்கள். சில ஆண்கள் பாடசாலை போகிறோம் என்று பெற்றோரை மட்டுமல்லாமல் தங்களைத் தாமே ஏமாற்றிக் கொண்டு சினிமாவுக்கோ கூல்பார்களுக்கோ சென்று பொழுதைப் போக்குவதன் மூலம் தவறான பாதைக்கு செல்கிறார்கள். எந்த வீதியில் பார்த்தாலும் ஆண்கள் மதுபோதையாலும், சிகரெட் பாவனையாலும் வெவ்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். ஆகவே எனது கணிப்பின்படி ஆண்கள் தான் நவநாகரித்தை அதிகம் நாடிச் செல்பவர்களாக இருக்கிறார்கள்.

ரி.யாமினி, இணுவையூர்.

# சுதந்திரத்தின் விடிவு எப்போது...?

இன்று இலங்கை சுதந்திரம் அடைந்து
அறுபத்து ஐந்து ஆண்டுகள் ஆன போதும்
ஒரு நிம்மதியான சுதந்திரத்தை
அடையவில்லையே ஏன்? மாறாக
தனி ஆட்சி - அத்துடன்
சிங்களக் குடியாட்சி
கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில்
தோற்றம் பெற்ற நம் தமிழை
பறைசாற்றும் மறவர் தமிழரின்
அகதிப் பட்டம், குற்றம் புரியா பல்கலை மாணவரின்
கல்வியை பாதிக்கும் சிறையிருப்பு
இதற்கும் மத்தியில் எத்தனையோ சிறுவர் பெண்களின்
பாலியல் பலாத்காரம்
ஊடகத் தாக்குதல் - அது மட்டுமா
இவைக்கும் அப்பால் எத்தனையோ நிகழ்வுகள்
இவை அனைத்துக்கும் விடிவு
பிறக்கும் அந்நாளே
நம் தாய் நாடான இலங்கை
சுதந்திரம் அடையும் பொன்னாள்
அதுவரை காத்திருப்போம்

- மீனா



# விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :-......................................................

..................................................................

.........................  .........................
திகதி  கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# தாய் மண்ணின் நினைவுகள்......



வேப்பமரக் குயிலே கேட்கிறேன் சொல்
என் வீடு இன்னும் இருக்கிறதா?
அதன் சுவரில் நான் வரைந்த ஓவியங்கள்
இன்னும் நிலைக்கிறதா?

யன்னலைத் திறந்தால் வரும் தென்றல்
இன்னும் ஓயவில்லையா?
நான் ஆடிய ஊஞ்சல் இன்னும்
ஆடிக் கொண்டிருக்கிறதா?

வேப்பமரக் குயிலே கேட்கிறேன் சொல்
என் மண்மேல் நான் வைத்த பாதத் தடங்கள்
இன்னும் அழியவில்லையா?
நான் வைத்த ரோஜாச் செடி
வாடவில்லையா?

அனைத்தும் யுத்தத்தால் சிதறிப்போனாலும்
என் மண்ணில் என் நினைவுகள் சிதறிப்
போகவில்லை

வேப்பமரக் குயிலே என் மண்ணுக்குச் சொல்
யுத்த மழையானது என்றோ ஒரு நாள்
நிற்கும் அன்று வருவேன்
உன் மடிமீது தலைசாய்த்து நான் உறங்க

க.யாழினி, நவாலி

# பொன்மொழிகள்....



- அன்பினால் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் ஆனந்தத்தைக் கொடுத்தே தீரும்.
- அமைதியின் ஆழத்தில் மாத்திரமே இறைவனின் குரலைக் கேட்க முடியும்.
- அவசர புத்தியும், அடங்கா முன்கோபமும் அன்பின் பலனைக் கெடுக்கும். சாந்தமும், சற்குணமும் எப்போதும் பயனைக் கொடுக்கும்.
- அரைகுறை நண்பரானாலும், அப்போது தான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாகப் பேசிக் கொள்ளுங்கள்.
- உலகத்தையோ, மற்றவர்களையோ திருத்துவதற்கு உன்னால் முடியாது. உன்னையே நீ திருத்து.
- உண்மையானாலும், பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளிவிடாதீர்கள்.

**உதயன்** தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை வேம்படி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விநியோக முகவர்கள்: 'சதா வொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'ஜோதி புக் சென்ரர்' - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# கல்லெறியும், காய்க்கும் மரமும்

அந்த பாலைவனப் பூமியில் தகிக்கும் வெப்பத்தைமீறி, எந்தவொரு தாவரமும் முளைத்துவிட முடியாது. தப்பித் தவறி தாவரங்கள் வளர்ந்துவிட்டால் வெம்மையின் ஆட்சி மெல்ல மெல்ல சரிந்துவிடும். அதனால் மண்ணின் தாவரங்களில் சிறிய முளை தோன்றியவுடனேயே தன் அக்கினிக் கரங்களால் அவற்றைக் கருக்கிவிட்டுத்தான் வெப்பத்தின் அரசன் ஓய்வான்.

வெப்பத்தின் கண்காணிப்பையும் மீறி ஓரிரண்டு மரங்கள் எப்படியோ முளைத்துவிட்டன. அவற்றில் சில மரங்களை தான் இளைப்பாறுவதற்காக வெப்பத்தின் அரசன், நட்டிருந்தான். அவற்றை தனது தேவைக்காகவே பயன்படுத்தினான். மக்களுக்கு அந்த மரங்கள் ஒருபோதும் நிழல் தந்ததில்லை.

பாலைப்பூமியில் தாமாகவே வளர்ந்திருந்த மரங்களில் சில காய்க்கவும் செய்தன. அவற்றின் கனிகள் அங்கிருந்தோரின் பசி தீர்க்க உதவின. அத்தோடு, இன்னும் நிறைய மரங்கள் பாலையில் முளைத்தெழுந்து வெம்மையை விரட்டுவதற்காக, விதைகளையும் அந்தக் காய்க்கும் மரங்கள் உற்பத்தி செய்யத் தொடங்கின. இதை அறிந்ததும் வெம்மையின் அரசனுக்கு இருப்புக்கொள்ளவில்லை.

இருப்பதிலேயே நன்றாக காய்த்துக் குலுங்கும் மரத்தை கல்லெறிந்து, வீழ்த்தும்படி தன் சேனைகளுக்கு கட்டளையிட்டான். அந்த மரத்துக்கு அடிக்கடி கல்லெறிகள் கிடைத்தன. காயங்களோடு நிற்கும் மரத்துக்கு மக்கள் மருந்திட்டார்கள். முன்னரைவிட அதிக பசளையிட்டார்கள். அதனால், அந்த மரம் ஒவ்வொரு கல்லெறிக்குப் பின்னும் முன்னரைக்காட்டிலும் அதிக கனிகளைக் கொடுக்கத் தொடங்கிற்று.

காய்க்கும் மரத்துக்குப் பக்கத்தில் இன்னொரு மரம் நின்றது. ஆனால், கனிகள் அற்ற அந்த மரத்தை நாடுவோர் மிகமிகக் குறைவு. "அடிக்கடி கல்லெறி வாங்குவதால் தான் பக்கத்துமரம் காய்த்துக் குலுங்குகிறது. அதேபோன்று எனக்கும் விழுந்தால் நானும் நிறையக் காய்ப்பேன்" என்று எண்ணிக்கொண்டு தனக்கும் கல்லெறி விழ வேண்டும் என்று தவமிருந்தது.

ஒருநாள் பறவை ஒன்றைக் கலைப்பதற்காக யாரோ எறிந்த கல் காய்க்காத மரத்தின்மீதும் விழுந்தது. கல்லெறி வீழ்ந்ததால் தானும் கனிகளைப் பிரசவித்து நிறையப் பேரை தன்னிடத்தே ஈர்க்கலாம் என்று அது எண்ணியது. ஆனாலும் கடைசிவரை ஒரு பிஞ்சுகூடத் தோன்றவில்லை. ஆற்றாமையால், அது காய்க்கும் மரத்தை வசைபாடுவதையே தொழிலாகக் கொள்ளத் தொடங்கிற்று. "அது உள்ளூர் மரம்" என்று சொல்லிச் சொல்லி தனக்குள் திருப்திப்பட்டுக் கொண்டது.

ஆனாலும், காய்க்கும் மரம் இதையெல்லாம் கண்டுகொள்ளவில்லை. தன்பாட்டுக்கு பூக்களும், பிஞ்சுகளும், கனிகளுமாக கிளை பரப்பி எல்லோருக்கும் நிழல் கொடுத்துக் கொண்டேயிருந்தது. இப்படியே விட்டால், தனது அதிகாரம் சரிந்துவிடும்என்பதை உணர்ந்து கொண்ட வெம்மையின்அரசன் தன் வெப்பக் கதிர்களை இன்னொரு முறை அதிகப்படுத்தி, கல்லெறி வீச்சையும் நிகழ்த்திப் பார்த்தான். கல்லெறிகளை வாங்கிக்கொண்டே அது இன்னமும் காய்க்கும்; நிழல்கொடுக்கும்.

# சிறுவரின் உணர்வு வெளிப்பாடுகளில் பெற்றோரின் அக்கறை அவசியம்

■ அ.அஜந்தன்

பொதுவாக சிறுவர்களின் உடல்சார்ந்த அபிவிருத்தியையே நாம் அதிகம் கருத்தில் கொள்வதுண்டு. ஆனால் அவர்களின் உணர்வுகளின் முக்கியத்துவம் தொடர்பாக நாம் ஓரளவாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும். பிள்ளைகளின் உணர்வுரீதியான அபிவிருத்திப் படிமுறைகளை நாம் அறிந்துகொள்வதன் மூலம் அவர்களின் நடத்தைகள் தொடர்பான சிந்தனையை அவர்கள் மத்தியில் வளர்க்க முடியும்.

குழந்தையொன்று பிறக்கும் பொழுதே அழுகிறது. இதுவே பிள்ளை முதலில் வெளிப்படுத்தும் உணர்வாகும். குழந்தைகள் மற்றவர்களின் உணர்வுகளுக்கு உடனடியாக மறுதாக்கத்தைக் காண்பிக்கின்றனர். அதனால்தான் ஒரு குழந்தை அழுதால் மற்றைய குழந்தைகளும் சேர்ந்து அழுகின்றன. குழந்தைகள் பொதுவாகவே நேர் உணர்வுகளை அதிகம் விரும்புவர். அத்துடன் எதிர்மறையான உணர்வுகளுக்கு பெரியவர்கள் பிரதிபலிப்பை காட்டாவிட்டால் தமது எதிர்மறை உணர்வைக் கட்டுப்படுத்திக்கொள்வர்.

சிறுபிள்ளைகள் தம் வாழ்வில் தாம் சந்தித்த அனுபவங்களை நன்கு உள்வாங்கி தமக்குள் ஜீரணிப்பதில் வல்லவர்கள். சிறுவர்கள் தமது சிறுவயது வாழ்வில் தாம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள், மற்றவர்களால் தமக்குக் கிடைத்த உதவிகள் என்பன அவர்கள் தமது உணர்வுகளை கையாளும் முறையில் செல்வாக்குச் செலுத்தும். வீட்டு வன்முறைகள், போர், அனர்த்தம், இடப்பெயர்வு ஆகியவை இடம்பெறும்பொழுது சிறுவர்களும் பெண்களுமே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இவர்களில் பாடசாலை செல்கின்றவர்களும் பெற்றோரில் தங்கியுள்ளோரும் அதிகளவு உணர்வு ரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் புரிந்துணர்வு இருப்பதுடன், அவர்களது உணர்வுகளையும் அந்த உணர்வு வெளியிடப்படும் சந்தர்ப்பங்களையும் கவனத்திற் கொண்டால் தமது பிள்ளைகளின் தேவைகளான அடிப்படைத் தேவைகள், அன்புத் தேவை, பாதுகாப்புத் தேவை, கணிப்புத் தேவை மற்றும் சுயதிறன் நிறைவுத் தேவை என்பவற்றைப் பூர்த்தி செய்யவும், அவர்கள் எந்த நேரத்தில் என்ன விதமான உணர்வை வெளிக்காட்டுகின்றனர் என்பதைஇலகுவில் அறிந்து அவர்களுக்கு உதவும் பெற்றோருக்கு வாய்ப்புக்கிட்டும். அத்துடன் அவர்களின் ஆளுமை விருத்திக்கும் உணர்வுகளின் சீரான அபிவிருத்தி பெரும் பங்காற்றுகிறது.

பிள்ளைகள் மத்தியில் பயம், சந்தோசம், துக்கம், ஆச்சரியம், ஆர்வம், வெறுப்பு மற்றும் கோபம் என்பவை அடிப்படை உணர்வுகளாக உள்ளன. அதேபோல் அவற்றை பிள்ளைகள் அதிகமாக முகபாவத்தால் வெளிப்படுத்துவர். ஆனால் அது ஒரு வழிமுறைதான். அவற்றைவிட உடலியல் மாற்றங்கள் மற்றும் அதீத நடத்தையினூடாகவும் வெளிக்காட்டுவர்.

0-5 வயது வரையான பிள்ளைகள், பெற்றோர்களிடத்திலும் தாம் வாழும் சூழலிலும் முழுமையாகத் தங்கி வாழ்பவர்களாக உள்ளனர். தமது உடலியல், உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவர்களுக்கு பெற்றோர்களது அல்லது பாதுகாவலரின் உதவி தேவைப்படுகிறது. அனேகமாக தமது தேவைகளை உணர்வுகளின் வாயிலாகவே வெளிப்படுத்துகின்றனர். சிறுவர்களின் உணர்வுகளையும் அதன் அபிவிருத்திப் படிமுறைகள் குறித்தும் அறிந்துகொள்வது அவசியமாகும்.

### 0-5 வயது வரையான பிள்ளைகளின் உணர்வுரீதியான அபிவிருத்தி

ஒரு மாதக் குழந்தை கருவறையிலிருந்து வெளிவந்த மறுகணமே தனது வெளியுலக வாழ்வுக்கான உணர்வுகளை ஒழுங்குபடுத்துகிறது. சாதாரணமாக தனது அழுகையை வெளிக்காட்டுகிறது, அமைதியையும் பாதுகாப்பு தேவைகளையும் உணரத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கிறது.

2-3 மாதத்தில் பல்வேறுபட்ட உணர்வுகளின் கலவைகளையும், மனவெளிச்சிகளையும் வெளிக்காட்டுவதோடு, சிரித்தல், கோபமாக முகம் சுழித்தல் மற்றும் உடல் அசைவுகளைக் காண்பிக்கிறது, உணவை ஊட்டும் பொழுதும், கட்டித்தழுவும் பொழுதும் நன்றி உணர்வை வெளிக்காட்டுகிறது. வழமையான காரியங்களுடன் இணைந்து செல்ல ஆரம்பிப்பதோடு மாற்றங்களைக் கண்டு மகிழ்வதும், தெரிந்த நபர்களை சிரித்து அடையாளம் காண்பதும் இந்த மாதங்களில் இடம்பெறும்.

4-6 மாதம் அருகில் அறிமுகமில்லாத நபர்களைக் கண்டால் முதன் முறையாக பயத்தை வெளிப்படுத்துதல், பெரிதாக சிரித்தலும், சந்தோசமான ஒலிகளை எழுப்புதலும் மற்றும் ரேடியோ, தொலைபேசி, தொலைக்காட்சி ஆகியவற்றின் சத்தத்துக்கும் தெரிந்தவர்களின் குரலுக்கும் அமைதி அடையும் உணர்வை வெளிப்படுத்துகிறது.

6-12 மாதத்தில் வெளியில் இருந்து எவராவது புதிதாக வீட்டுக்கு வருகை தந்தால் திடமான பிரதிபலிப்பை வெளிக்காட்டலுடன் தனது பெற்றோர் மீது அதிக பற்று உணர்வையும் வெளிக்காட்டும். எப்பொழுது மகிழ்ச்சியாகவில்லையோ அப்பொழுது மகிழ்வாக இருக்க ஏதாவது முயற்சி செய்கிறது. மகிழ்ச்சியை அனுபவிப்பதில் ஆர்வம் காட்டுகிறது. அறிமுகமான விளையாட்டுப் பொருள்களைக் கண்டதும் அமைதியடைதல், விரல் சூப்புதல். பயம், துக்கம் போன்ற மனவெழுச்சி வெளிப்பாடுகள் அதிகரிக்கின்றன.

12-18 மாதத்தில் எதிர்மறையான உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதோடு நித்திரையையும் சில உணவு வகைகளையும் புறக்கணித்தல், கோபத்தை வெளிக்காட்டல், ஒழுங்கு முறையான விளையாட்டைப் புரிந்து கொள்ள முற்படல், ஒரு ஆறுதல் தேவைப்படுவதோடு பெற்றோர்களின் ஆதரவையும் எதிர்பார்த்தல். பெற்றோர் விலகி இருந்தாலோ அல்லது அவர்கள் வெளியேறுவதைப் பார்த்தாலோ அழ ஆரம்பித்தல் போன்றவை இடம்பெறும்.

2 வயதில் அதீதமான நடத்தைகளைக் காண்பித்தல், ஏதாவது செயலில் ஈடுபட்டிருக்கும்பொழுது அது பாதுகாப்பற்றது என்பதை உணர்ந்து பெரியவர்கள் தடுத்தால் அதிக கோபத்தை வெளிக்காட்டல், அத்தோடு அழுதல், கத்துதல், உதைத்தல், அடித்தல், மற்ற சிறுவர்களுடன் சண்டையிடல் போன்றவை இடம்பெறும். அத்தகைய சந்தர்ப்பங்களில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் எது சரி, எது பிழை என்பதை எடுத்துக் கூற வேண்டும்..

குறுகிய சிந்தனை ஆற்றல் இருப்பதால் இலகுவில் குழம்பி விடுவார்கள், தமது மன உணர்வை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவர், மற்றப் பிள்ளைகளுடன் வெளியில் சென்று விளையாட முற்படுவர். பரிவு, வெட்கம், சுய கவனிப்பு, அவதானம் ஆகியவற்றை வெளிக்காட்டத் தொடங்குவர். விருந்தினரைக் கண்டு பயப்படும் தன்மையும் குறைந்துவிடும்.

3 வயதில் பிள்ளைகள் தமது சூழலில் வழமையாக உள்ள பிரசித்தமான விளையாட்டை விளையாடுவர், மகிழ்ச்சியினதும் திருப்தியினதும் சமநிலையை வெளிப்படுத்துவர். கோபமும் குழப்பமும் குறைந்தாலும் அவற்றிற்கான காரணங்கள் தெரியாது. சுய கவனிப்பு இருக்கும். அத்துடன் எது நடந்ததோ அதற்கு பொறுப்புள்ளவர்களாக இருப்பர். கற்பனை செய்பவர்களாகவும் கற்பனையான நட்பும் கொண்டிருப்பர். அத்துடன் பயங்கரமான சம்பவங்களை நினைத்துப் பயப்படும் தன்மையும் இவர்களில் காணப்படும்.

4 வயதில் மற்றவர்களது விநோதமான செயல்களை மகிழ்வுடன் அனுபவித்தல், சிறிய விளையாட்டுக்களில் ஈடுபடல், என் விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். கடந்த கால மற்றும் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பர். பால்நிலைமாறுபட்ட பெற்றோருடன் அதிகம் பழகுவர், ஒரே பால்நிலை பெற்றோருடன் முரண்படுவர். உதைத்தல், கோபப்படல், அடித்தல், மற்றவர்களைச் சாட்டுதல், வயோதிபர்களோடு குறும்பு செய்தல் போன்ற செயற்பாடுகளை இந்த வயதினரிடத்தில் காணலாம்.

5 வயதில் சுதந்திரமாக இருப்பர். உண்மைத் தன்மையையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்திருப்பர். கதவுக்கு அடித்தல், உணவைத் தட்டிவிடுதல் போன்ற வெறுப்புணர்வை வெளிப்படுத்துவர், நட்புறவுடனும் சரளமாகவும் பழகுவதுடன் அதீத கோபத்தையும் காட்டுவர். ஏதாவது நடைபெற்றிருந்தால் அது தொடர்பான தாக்கத்தில் இருப்பர், பெற்றோர்களின் பிரிவு இவர்களை வெகுவாகப் பாதிக்கும். தாய் அல்லது தந்தை தன்னுடன் இல்லையே என்று வருத்தப்படுவர்.

### பிள்ளைகளின் உணர்வுகளை மேம்படுத்த சில வழிகள்

★உணர்வுகளை விளங்கிக் கொள்ளவும் அதில் நல்ல தீய விடயங்களை உணரவும் கற்றுக்கொடுத்தல்.

★ஓய்வாக இருப்பதையும் அதன் சௌகரியத்தையும் கற்றுக் கொடுத்தல்

★தன்னையும் மற்றவர்களையும் அறிந்துகொள்ள உதவுதல்

★ஆர்வத்துடன் இதமான தொடர்பாடலை கற்றுக்கொடுத்தல்

★உணர்வுகளைத் தெளிவாக வெளிப்படுத்த உதவுதல்

★பிறரை அன்பு செய்யவும் ஆதரவு வழங்கவும் கற்றுக்கொடுத்தல்

★மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொடுத்தல்

★இழப்பை ஏற்றுக்கொள்ள கற்றுக்கொடுத்தல்

★உணர்வுகளுடன் வாழக் கற்றுக் கொடுத்தல்

★சிந்திப்பதற்குக் கற்றுக்கொடுத்தல்

சிறுவர்களின் உணர்வுகளில் நாம் அதிகம் அக்கறை கொள்வதற்கு காரணம், அவர்கள் வீட்டிலும், பாடசாலையிலும் சமூகத்திலும் அதிகளவில் உணர்வு ரீதியாக துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றனர். பாலியல் ரீதியான சுரண்டல்கள், உணர்வுகளை அனாவசியமாக தூண்டுதல், அதட்டல், தேவைகளைப் புறக்கணித்தல் மற்றும் செவி சாய்க்காமை போன்றன இவற்றில் உள்ளடங்கும். இதன் விளைவுகளாக ஒதுங்கி இருத்தல், குறைவான சுயகணிப்பு, உணவருந்துவதில் ஒழுங்கின்மை, ஆளுமையில் ஒழுங்கின்மை, உறவுமுறையில் சிக்கல் என்பன ஏற்படும். ★

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். கையில் பணம் தேவையான அளவு இருக்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிட்டும். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்:** நீண்ட நாள் எண்ணங்களைப் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். கணவன் -மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். பிள்ளைகளின் உடல்நலத்தில் அக்கறை காட்டுவீர் கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் உள்ளவர்கள் த்ன்னைச் சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை என்று நினைப்பீர்கள். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பண விஷயத்தில் கறாராக இருங்கள். அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடுவதால் வீண் பழிக்கு ஆளாவீர்கள்.

**கடகம்:** கணவன் -மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. குழந்தைகளின் எண்ணங்களைக் கேட்ட றிந்து பூர்த்தி செய்வீர்கள். தந்தையின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் வருமதிகள் வசூலாகும். வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.

**சிங்கம்:** புது முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. கணவன் -மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து ப்பொழுதைக் கழிப்பீர்கள்.

**கன்னி:** உங்களது வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கணவன் -மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**நாளை**

பங்குனி-24 சனிக்கிழமை 06.04.2013
திதி: ஏகாதேசி மா.05.52வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ. 09.03 வரை
சுபநேரம்: 03.08- 04.38 வரை
இராகுகாலம்: 09.08- 10.38 வரை

**துலாம்:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்னியோயம் பிறக்கும். கடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலம் உண்டு. வீடு, வாகனச் செலவுகள் குறையும்.

**விருச்சிகம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள்.

**தனுசு:** முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். கணவன் -மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும் . வாகனத்தை சீர்செய்வீர்கள். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**மகரம்:** குடும்பத்தினரைப் பற்றி யாரிடமும் குறைவாகப் பேச வேண்டாம். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வெளிப்படையாகப் பேசுவது கூடாது என்பதை உணர்வீர்கள். உத்தி யோகத்தில் மற்றவர்களை விமர்சித்துக் கொண்டிருக்காதீர்கள்.

**கும்பம்:** விடாப்பிடியாக செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். உடல் அசதி, சோர்வு வந்து நீங்கும். தாழ்வும்மனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. வருங்காலத் திட்டங்களைப்பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். தாயாரின் உடல்நிலை சீராக இருக்கும். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 8 | | | | | 2 | 6 |
| 7 | 6 | 4 | | | 5 | 9 | | |
| | 9 | | | | 8 | | | 7 |
| 4 | 2 | | | 8 | | 7 | | |
| | 1 | | 3 | | 7 | | 6 | |
| | | 7 | | 1 | | | 8 | 9 |
| 5 | | | 9 | | | | 7 | |
| | | 1 | 5 | | | 6 | 4 | 2 |
| 3 | 7 | | | | | 1 | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 2 | 6 | 4 | 1 | 9 | 5 | 3 |
| 1 | 6 | 3 | 9 | 2 | 5 | 8 | 4 | 7 |
| 5 | 4 | 9 | 8 | 7 | 3 | 6 | 2 | 1 |
| 3 | 2 | 7 | 5 | 1 | 8 | 4 | 9 | 6 |
| 4 | 9 | 8 | 3 | 6 | 7 | 2 | 1 | 5 |
| 6 | 1 | 5 | 4 | 9 | 2 | 3 | 7 | 8 |
| 7 | 3 | 4 | 1 | 8 | 9 | 5 | 6 | 2 |
| 2 | 5 | 6 | 7 | 3 | 4 | 1 | 8 | 9 |
| 9 | 8 | 1 | 2 | 5 | 6 | 7 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





புதுவருடத்தை முன்னிட்டு இன்று(05.04.2013) முதல் - (14.04.2013) வரை
தம்ரோ, பியெஸ்டா பொருள்களின் ஏக விநியோகஸ்தர்களான எம்மிடம் அலுமாரி வகைகள், கொம்பியூட்டர் ரேபிள்கள், பிளாஸ்ரிக் கதிரை வகைகளை 5% - 10% வரையிலான விற்பனைக் கழிவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
இங்கு Stand fan, Rice cooker, Gas Cooker, Innovex TV போன்றவைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

* நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடன் 7000/= பெறுமதியான Preethi Mixer Grinder ஒன்று இலவசம்.
* நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Steel அலுமாரிகளுடன் ஒரு Iron Box இலவசம்.
* நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மெத்தைகளுடன் ஒரு பிளாஸ்ரிக் Teapo இலவசம்.

25000/= பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்தால் இலவச விநியோக சேவை.

ஐமுனா பர்னிச்சர், 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 2829
ஐமுனா பர்னிச்சர், 181,நாவலர் வீதி,யாழ்ப்பாணம். 021 222 1092

(C/8082)(2.6)



சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினரின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு அப்துல் மஜீத் நகர மண்டபத்தில் இடம்பெற்றபோது, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் கலந்துகொண்டு பார்வையிட்டார்.

# அரசுக்கு வழங்கும் ஆதரவை முஸ்லிம்கள் மீள் பரிசீலனை

## அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் எச்சரிக்கை



மட்டக்களப்பு,ஏப்.5

அரசு தொடர்ந்தும் மௌன மாக இருந்தால் முஸ்லிம் சமூகம் அரசுக்கு வழங்குகின்ற ஆதரவை மீள் பரிசீலனை செய்ய வேண்டி ஏற்படும்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த சில மாதங்களாக பொது பல சேனாஅமைப்பினர் முஸ்லிம், சிங்கள மக்களுக்கு இடையில் குழப்பங்களையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு செயலர், அரசின் உயர் அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் ஆகியோரிடம் தொடர்ச்சியாக நாம் பேசி வருகின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறுவது கட்டுப்படுத்தப்படும் என்று அவர்கள் உறுதி மொழிகளை வழங்கியுள்ளனர். எனினும் அந்த உறுதி மொழிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பொது பல சேனாவினுடைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அரசு பொது பல சேனா இயக்கத்தின் பின்னால் இருந்து அதன் நடவடிக்கைகளுக்கு ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கின்றதா? இவ்வாறு ஆதரவு வழங்குவதன் காரணமாகத்தான் அவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றாங்களா? எனும் சந்தேகங்கள் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கின் றன.

எனவே தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கு எதிராக பொது பல சேனா எடுத்துவரும் நடவடிக்கைளுக்கு எதிராக எவ்வித செயற்பாடுகளையும் அரசு எடுக்காமல் இருப்பது மன வேதனையை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்; முஸ்லிம்களின் பொருளாதாரம், கலாசாரம், சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும்.

பொது பல சேனா அமைப்பு சட்டபூர்வமற்ற பொலிஸ் என்று தங்களை பிரகடனப்படுத்திக்கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

அடிப்படை மனித உரிமைகளை மீறி முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை காவி உடை அணிந்த ஒரு சிலர் தாக்குவதை சிசிடிவி கெமரா பதிவு செய்துள்ளபோதிலும் இதுவரை அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதை தவிர்த்து, இரு தரப்பினரையும் சமாதானப்படுத்துகின்ற முயற்சியே தொடர்ந்து இடம்பெறுகின்றன.

எனவே அரசு உடனடியாக இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்; பொது பல சேனா அமைப்பின் நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்; சட்டத்துக்கு முன்னால் அனை வரும் சமம் என்னும் அடிப்படையைப் புறம்தள்ளி சட்டத்தை தங்களது கைகளில் எடுத்துக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுகின்றயாராக இருந்தாலும் கைது செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொடர்ந்தும் அரசு மௌனமாக இருந்தால் முஸ்லிம்கள் அரசில் தொடர்ந்து செயற்படுவது பற்றி மீள் பரிசீலனை செய்ய வேண்டி ஏற்படும் .-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## உள்ளூராட்சிச் செயலாற்றுகை; இலங்கை பிரதிநிதிகள் பங்கேற்பு

காத்தான்குடி,ஏப்.5

இந்தியாவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி செயலாற்றுகை தொடர்பான செயலமர்வில் காத்தான்குடி மற்றும் ஓட்டமாவடி உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் இந்தியாவின் டில்லியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கலந்துகொள்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து காத்தான்குடி நகரசபை தலைவர் எஸ்.எச்.எம்.அஸ்பர், ஓட்டமாவடி பிரதேச சபையின் தலைவர் எஸ்.ஐ.ஹமீட் ஆகியோர் எதிர்வரும் 16ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர். இந்தச் செயலமர்வு எதிர்வரும் 17ஆம் திகதி காலை ஆரம்பமாகி 18ஆம் திகதி மாலை நிறைவு பெறவுள்ளது.

உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சின் ஏற்பாட்டில் இந்த செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளதாக காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தெரிவித்தார்.(ச)

## கஞ்சா வைத்திருந்தவர் செலுத்தினார் ரூ.10,000

அம்பாறை,ஏப்.5

கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை 10,000 ரூபா அபராதம் செலுத்துமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.பிரியங்கி உத்தரவிட்டார்.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். (ச)

எச். ஈ. டெனியல் எமல்ஷன் பானம்



·100 கிளாஸ் பழரசம் செய்முறை
2 1/2 கிலோ சீனியை ஒரு கலன் தண்ணீரில் கொதிக்க வைத்து அந்துடன் 1 1/2 அவுன்ஸ் சிட்ரிக் பவுடரையும் ஒரு அவுன்ஸ் எமல்ஸனையும் சோத்து கலக்கவும் மீண்டும் ஒன்றுக்கு ஐந்து விகிதப்படி தண்ணீரில் கலந்து பங்கிடவும்.
எச். ஈ. டெனியல் பழரச பானம் தோடம்பழம், அன்னாசி, திராட்சை, Rose, Mango மற்றும் பலவகைகளில் கிடைக்கும்.
கிடைக்கும் இடம்
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே - 021 2222567
Sole Agents,
BASIC FOODS
244, Bankshall St,
Colombo - 11.
Phone :- 2325529
(இ/7059)(6.7)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
அகில இலங்கை விஸ்வ கர்ம குல சங்கம்
பொதுக் கூட்டம் பிற்போடல்
07.04.2013 உடுப்பிட்டியில் நடைபெற இருந்த பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை விஸ்வ கர்மகுல மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
அகில இலங்கை விஸ்வ கர்ம குல சங்கம்.
213/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 236 7494
(35659)(6.7.11)
செயலாளர்
ஜெ.மனோகர்.

வாகனம் விற்பனைக்கு
TATA Single/Cap
207 Ex, PS xxxx, K/M 23,000
தொடர்பு: 077 600 4454
(35654)(6.7.11)

விற்பனைக்குண்டு
நல்ல நிலையில் பாவனையிலுள்ள (8×7) நீள அகலம் கொண்ட அடைப்பு சுருக்குக் கேற் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 311 1066
(35662)(6.7.11)



பரந்தன் மூன்றாம் வாய்க்கால்
பன்னங்கண்டி
திருவருள் மிகு பன்னங் கண்டிப்
பிள்ளையார் தேவஸ்தானம்
மகோற்சவ விஞ்ஞாபனம்-2013
விநாயக அடியார்களே! நிகழும் மங்களகரமான நந்தன வருடம் பங்குனி மாதம் 24 ஆம் நாள் நாளை (06.04.2013) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்ற வைபவமும் (துவஜாரோகணம்) நடைபெற்று சர்வ மங்கள விஜய வருடப் பிறப்புத் திருநாளில் (14.04.2013) இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.
இக் காலங்களில் அடியார்கள் வந்து விநாயகப் பெருமானை தரிசித்தும் தங்களால் இயன்றளவு சரியைத் தொண்டுகளைச் செய்தும், நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் மகேஸ்வரப் பூசையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
ஆலய பரிபாலன சபையினர்.
(26270)(6.7.11)

ஈராண்டு நினைவிலே
அமரர்
இரத்தினம் கிருபானந் (பவன்)



மலர்வு
24.08.1981
உதிர்வு
29.03.2011
சீமையிலே சீமானாய் சிங்கார வாழ்வு கண்டு
சீரிய வாழ்வதனை சிறப்புடனே வாழ்ந்திடவே
சொந்தம் பந்தம் அயல் சூழ
சொக்கத் தங்கம் பெயர் சூட
எல்லோர்க்கும் ஏற்றவனாய் ஏற்றமுடன் வாழ்கையிலே
கூற்றுவன் கண்பட்டு கொண்டானே உன்னுயிரை
நூறாண்டு போனாலும் நீறாக உம் நினைவு
எம்முடன் வாழ்ந்திடுமே!
10/6 A, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.
குடும்பத்தினர்.

வியப்பூட்டும்
விலைக்குறைப்பு
தினசரி சென்னை சேவை
இச்சலுகை
15-04-2013 வரை



சென்னை 7,900/= (செல்ல மட்டும்)
சென்னை 15,500/= upwards (சென்று திரும்ப)
(all inclusive) Upwards
Baggage allowance 37 kgs.
Complementary Meals provided
AIR - INDIA express
Groups fares offer only over 15 passengers.
Contact for further information: www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818
or Contact your nearest Travel Agent

எண்பதாவது அகவை காணும்
அன்னைக்கு
வாழ்த்துக்கள்



Best Wishes
எமது அன்னை
திருமதி சாம்பசதாசிவக்குருக்கள் கௌரியம்மா
அவர்கள் அகவை எண்பது காணும் நடமாடும் தெய்வம்
அவர்களின் ஆசீர்வாதத்தை வேண்டி பணிவதோடு
அவர் நீண்ட ஆயுளோடும் திடகாத்திரத்தோடும் வாழ
இறைவனை இறைஞ்சுகின்றோம்.
வாழ்த்துவோர் :
சகோதரர்கள், மக்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.
அரசகேசரி பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி.
[35658][5.6]

## தாக்குதலில் இளைஞன் காயம்

தென்மராட்சி,ஏப். 5

வீதியில் நடந்து சென்ற இளைஞனை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் ஹெல்மெட் மற்றும் கைகளால் தாக்கினர். இதில் குறித்த இளைஞன் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை பகல் அல்லாரைப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கணேசமூர்த்தி பிரகாஸ (வயது -19) என்ற இளைஞனே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-9)

## வடமராட்சி வலய மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி, ஏப்.5

வடமராட்சி வலய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 23, 24, 26 ஆகிய தினங்களில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று வலயக் கல்விப் பணிமனை தெரிவித்துள்ளது. (ம-ரி)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப்.5

கொட்டைக்காடு இந்து மயான அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (ந)

## இளம் புத்தாக்குநர்கள் தொடர்பான கலந்துரையாடல்

தென்மராட்சி,ஏப்.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கான இளம் புத்தாக்குநர்கள் (கண்டுபிடிப்பாளர்கள்) தொடர்பான கருத்தரங்கு நேற்று வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள போட்டி தொடர்பாக வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.கா.கஜபதி, நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் கருணாநிதி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இந்த வருடம் நடைபெறவுள்ள புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான போட்டிகள் சம்பந்தமான அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (ந-9)

# மனிதனின் மன மாற்றத்தால் பெண் எதிர் வன்முறை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 5

மனிதனுடைய மனப்பாங்குகள் இன்று மாற்றம் அடைந்து வருவதால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சர்வதேச ரீதியில் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டு வருகிறது என்று வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் கடந்த 8 ஆம் திகதி யாழ்.தியாகி அறக்கொடை நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதேச செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடம் ''பெண்களுக்கு எதிரான வன்முறைகள்'' எனும் தலைப்பில் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. சர்வதேச ரீதியில் சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்கள்வரை பெண்கள் நாளாந்தம் வன்முறைகளுக்கு ஆளாகிறார்கள். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல்வேறுபட்ட வகைகளில் நடத்தப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது.

சர்வதேச ரீதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. குடும்ப வன்முறைகள் காரணமாக தானும் பாதிப்படைவது மட்டுமல்லாது தனது பிள்ளைகளது வாழ்வையும் பாதிப்படையச் செய்ய வேண்டிய நிலையை பெண்கள் எதிர் கொள்கிறார்கள்.

இந்த வகையில் தினம் தினம் ஏதோ ஒரு பிரச்சினையில் பெண்கள் சிக்கித் தவிக்கிறார்கள். குடும்பச் சூழல் பிள்ளைகளின் நலனைக் கருத்தில் கொண்டு வன்முறைகளை வெளிப்படுத்துவது இல்லை.

பண்பாடு, கலாசாரம் மாறாத வகையில் பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டும். வன்முறைகளைப் புரியாத வகையில் தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உளவள ஆலோசனைகளையும், வன்முறைகளைப் புரிந்தவர்கள் தப்பித்துக் கொள்ளாத வகையில் சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

சட்ட நடவடிக்கைகள் வன்முறை புரிந்தவர்களுக்கு போதுமானதாக இல்லை. இதனால் மேலும் தவறுகளைப் புரிகிறார்கள். எனவே சட்ட ஏற்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் வன்முறைகளைக் கட்டுப்படுத்தலாம் என்றார். (எ-14)

## மாதுமை மழலைகள் கல்விப்பூங்கா

## பரிசில் நாள் நிகழ்வும் நினைவுநாள் நிகழ்வும்

தென்மராட்சி,ஏப்.5

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் பரிசில் நாள் நிகழ்வும், பண்டிதமணி வே.கணபதிப்பிள்ளை நினைவுநாள் நிகழ்வும் கடந்த புதன்கிழமை பூங்கா மண்டபத்தில் இடம்பெற்றன.

சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் கணபதிப்பிள்ளை கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவும் மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் த.கணேசபாலேந்திரனும் கலந்து கொண்டனர்.

பண்டிதமணி வே.கணபதிப்பிள்ளையின் நினைவுப் பேருரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்தினார். (ந-9)



# தமிழ்த் தின போட்டிகளில் வெற்றிபெற்ற மருதங்கேணி கோட்டத்தின் மாணவர்கள்

வடமராட்சி கல்வி வலய மருதங்கேணி கல்விக் கோட்ட தமிழ்த் தினப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் எழுத்தாக்கப் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**பிரிவு-3 பாவோதல்**

சா.அபிலாஜினி- மருதங்கேணி இ.த.க.வித்தியாலயம், றொ.மரியதர்சா- மணற்காடு றோ.க.த.க.பாடசாலை

**பிரிவு-4 பாவோதல்**

க.சுரேஜனா-மணற்காடு றோ.க.த.க.பாடசாலை, வே.ரனிஸ்ரெலா-நாகர்கோவில் ம.வி.

**பிரிவு-1 இசையும், அசைவும்**

சி.மேரிமதுசா- செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை, ஜெ.பிரியங்கா- மருதங்கேணி இ.த.க.வித்தியாலயம்

**பிரிவு-2 இசை-தனி**

க.விதுசா-உடுத்துறை ம.வி., யோ.பிரியங்கா- கட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை

**பிரிவு-3 இசை-தனி**

ச.துஜில்-ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, க.யதுர்சன்-வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்

**பிரிவு-4 இசை-தனி**

ந.டியூசா-மணற்காடு றோ.க.த.க.பாடசாலை, க.டக்சனா-செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை.

**பிரிவு-2 நடனம்-தனி**

சி.கிருசங்கர்-ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை.

**பிரிவு-3 நடனம்-தனி**

க.மதுலா-மருதங்கேணி இ.த.க.வித்தியாலயம்.

**பிரிவு-4 நடனம்-தனி**

உ.கிருபாகினி- ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை.

**நடனம்- குழு**

மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை.

**இசை-குழு**

அம்பன் அ.மி.த.க.பாடசாலை, நாகர்கோவில் அ.மி.த.க.பாடசாலை.

**திறந்த போட்டிகள்**

**நாட்டார் பாடல்கள்**

அம்பன் அ.மி.த.க.பாடசாலை, செம்பியன் அ.த.க. பாடசாலை.

**இலக்கிய நாடகம்**

உடுத்துறை ம.வி.

**வில்லுப் பாட்டு**

மணற்காடு றோ.க.த.க. பாடசாலை.

**விவாதம்**

உடுத்துறை ம.வி . (ஒ-8)

## தமிழ்த்தினப் போட்டிகள்

தென்மராட்சி, ஏப். 5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான இந்த வருடத்துக்கு உரிய தமிழ்த் தினப் போட்டிகளின் எழுத்தாக்கல் தவிர்ந்த ஏனையப் போட்டிகள் எதிர்வரும் 7, 9, 10 ஆகிய தினங்களில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

ஏழாந்திகதி ஞாயிற்றுக்கிழமை வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, பாவோதல், வில்லுப்பாட்டு ஆகிய 16 போட்டிகளும் ஒன்பதாம் திகதி செவ்வாய்கிழமை இசையும் அசைவும், இசை (தனி), குழு இசை திறந்த போட்டிகளாக தமிழறிவு வினாவிடை, நாட்டார் பாடல், இலக்கிய நாடகம் ஆகியவையும் பத்தாம் திகதி புதன்கிழமை நடனம் (தனி), நடனம் (குழு), திறந்த போட்டிகளாக விவாதம், முஸ்லீம் நிகழ்ச்சி, நாட்டிய நாடகம் ஆகியவையும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## குடிதண்ணீர் நீர்க் கம்பத்தை சேதமாக்குகின்ற விஷமிகள்

கொழும்புத்துறை, ஏப். 5

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள பொது நீர்க்கம்பம் சில விஷமிகளால் தொடர்ந்து சேதமாக்கப்பட்டு வருகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். மாநகரசபையால் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் பொது நீர்க் கம்பம் கடந்த ஒரு மாத காலத்தில் 3 முறை சேதப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இவ்வாறான விஷமிகளின் சமூக விரோத செயற்பாடுகளால் பொது மக்கள் நீரைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொள்வதாக கவலைத் தெரிவிக்கின்றனர்.

முதலில் குடி தண்ணீர் எடுப்பதைத் தடுக்க உடைத்தவர்கள் பின்பு மூடப்பட்டிருந்த குழாயையும் உடைத்து நீரை விரயமாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். (ம-135)

## மயான அபிவிருத்தி கூட்டம்

தென்மராட்சி, ஏப். 5

மட்டுவில் நெணியன் சின்னத்தூ மயான அபிவிருத்தி தொடர்பான கூட்டம் நாளை சனிக்கிழமை மட்டுவில் மத்தி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்துக்கு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர், செயலாளர் ஆகியோர் வருகை தரவுள்ளதால் அப்பிரிவு மக்களைக் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# வளர்ப்பு நாய்களுக்கு நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். கரையோரப் பகுதியில் சுமார் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர் பிரதேசங்களில் இவ்வாறு அதிகளவிலான வளர்ப்பு நாய்களுக்கு இந்த முறை ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

தற்போதைய கடும் வறட்சி வெப்பத்தால் விலங்குகளுக்கு விசர்நோய் ஏற்படலாம் என்ற அச்சத்தால் மக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்கு இந்த தடுப்பூசிகளை ஆர்வத்துடன் போடுவித்து வருகின்றனர்.

இந்தத் தடுப்பூசி மருந்துகள் பொது இடங்கள் மற்றும் நடமாடும் சேவை மூலமாக ஏற்றப்பட்டது. (ம-17)

## காசநோய் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஏப்.5

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு குருநகர் தொடர்மாடி பகுதியில் நேற்று காசநோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்தத் தொடர்மாடிக் கட்டடத்தில் குடியிருக்கும் மக்கள் மற்றும் அதனை அண்டிய சுற்றாடல் பகுதியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இந்த விழிப்புணர்வுக் கருத்தமர்வில் கலந்து கொண்டனர் என்று மாநகராட்சி மன்றத்தின் குருநகர் பிரதேச சுகாதார பரிசோதகர் கே.ராஜா தெரிவித்தார்.

கரையோரப் பிரதேசத்தில் காசநோயின் தாக்கம் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார பகுதியினர் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று தொடர்மாடியில் இடம்பெற்ற விழிப்புணர்வு நடவடிக்கையின் போது காசநோய் எவ்வாறு மக்கள் மத்தியில் ஏற்படுகின்றது, அதைக் கட்டுப்படுத்துவது குறித்த வீதி நாடகமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு இலகு கடன் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.5

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் இலகு கடன்வழங்கும்திட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றது.

வெற்றிலைக்கேணி, செம்பியன்பற்று, போக்கறுப்பு, ஆழியவளை, தாழையடி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்காக இந்தக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்ட மீளக்குடியமர்ந்த மக்களின் சுயமுயற்சிக்காக இந்தக் கடன் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் மீள ஆரம்பிக்கப்பட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இந்த சுய தொழில் முயற்சிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.


மக்களின் வாழ்வாதார சுயமுயற்சிக்காக அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவரை கடன் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## மீளாய்வுக் கூட்டம்

வடமராட்சி, ஏப்.5

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரால் ஆசிரியர் ஆளணி, கல்விசாரா ஆளணி பற்றிய விடயங்கள் பிரதானமாக முன்வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-ரி)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## பிற்போடப்பட்டது

யாழ். மாவட்ட தொழில் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெறவிருந்த சமூகக் கலந்துரையாடலும் ஆலோ சனைச் சபைக் கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத் தினால் பிற்போடப் பட்டுள் ளது.

அந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு குறித்த இடத்தில் நடைபெறும்என உதவித்தொழில் ஆணையாளர் நீ.ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ந)

## கருத்தரங்கு

தென்மராட்சி, ஏப்.5

வரணி தாவளை - இயற்றாலைப் பகுதியி சர்வதேச குடிதண்ணீர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

தாவளை- இயற்றாலைப் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் தனி நபர் சுகாதாரம் தொடர்பாகவும், நீர்ச் சுகாதாரம் தொடர்பாகவும் கருத்துரை வழங்கப் பட்டது. (ஐ-9)

## ஊடகப் படிகள் அறிமுக நிகழ்வு

சூரியன் எவ்.எம். செய்தி முகாமையாளர் எம். இந்திரஜித்தின் ''ஊடகப் படிகள்'' நூல் அறிமுக நிகழ்வு ரட்னசிங்கம் பூரணசற்குணலிங்கம் தலைமையில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றம் கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## பேச்சுத் திறன் காணும் நிகழ்வு

யாழ்.பாலர் கல்விக் கழக நிர்வகிப்பில் இயங்கும் ஞானக் குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலை மாணவர்களின் பேச்சுத்திறன் காணும் வைபவம் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி, ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை அதிபர் திருமதி பரிமளம் பத்மநாதன் கலந்துகொள்வார். (ந)

### 20 ஆம் திகதியில் இருந்து

# 7 வீதத்தால் உயர்கிறது தனியார் பஸ் கட்டணம்

**புத்தாண்டு முடிவுறும் வரையில் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டோம்.**

யாழ்ப்பாணம்,ஏப்.5


பஸ் கட்டணங்கள் 7 வீதத்தால் உயர்த்தப்படவுள்ளன. எதிர்வரும் 20 ஆம் திகதியிலிருந்து இது நடை முறைக்கு வரும் என்று இலங்கை தனியார் பஸ் வண்டி உரிமையாளர்கள் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் அஞ்ஜன பிரியஙஜித் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் 20 ஆம் திகதி வரை எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் இறங்கமாட்டோம்.

குறிப்பிட்ட தினத்தில் அதிகரிக்கப்பட்ட பஸ் கட்டண மட்டங்கள் தமக்குக் கிடைக்காது போனால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்குவது என ஏற்கனவே பஸ் சங்கங்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை தனியார் பஸ் வண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னவிடம் கேட்டபோது;

புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் பயணிகளை அசௌகரியத்துக்கு உள்ளாக்க விரும்பாததால் புத்தாண்டு முடிவுறும் வரையில் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையிலும் இறங்காதிருப்பதற்கு சங்கம் தீர்மானித்துள்ளது-என்றார். (ந-22)



வலிகாமம் தென்மேற்கு இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு, ஆனந்தபுரம் பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா மற்றும் வலிகாமம் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் அ.ஜெபநேசன் ஆகியோரும், கழகத்தின் ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ந-130)

## 'பல்ஸர்' 'ஸ்கூட்டிபெப்' மோதியதில் இளைஞன் காயம்

தென்மராட்சி, ஏப்.5

ஏ-9 வீதியில் வேகமாக வந்த பல்ஸர் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து அதே திசையில் சென்ற ஸ்கூட்டிபெப் மோட்டார் சைக்கிளுடன் மோதியது. இந்தச் சம்பவத்தில் பல்ஸரை செலுத்தி வந்த இளைஞர் தூக்கி வீசப்பட்ட நிலையில் தலையில் காயம் அடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளைக்கு முன்பாக இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த நுணாவில் மேற்கைச் சேர்ந்த சரவணபவன் சஞ்ஜீவன் (வயது-22) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-9)

### 4 மில்லியன் மரக்கன்று நடும் திட்டம்

## தென்மராட்சி கல்வி வலயத்தில் அடையாள நிகழ்வு இன்று

தென்மராட்சி, ஏப்.5

எதிர்வரும் தமிழ்- சிங்கள புத்தாண்டு தினத்தில் நான்கு மில்லியன் பயன் தரு மரக்கன்றுகள் நடும் தேசிய வேலைத்திட்டம் நடைபெறவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயத்தினால் முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டத்தின் வலய மட்ட அடையாளநிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினும், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும் கலந்துகொள்வர். (ந-9)

## மெய்வன்மைப் போட்டி

வட்டுக்கோட்டை, ஏப்.5

வட்டு கார்த்திகேய வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## 20 இலங்கை அகதிகள் நாடு கடத்தப்பட்டனர்

ஆஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட மேலும் 20 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரண்டன் ஒ கொன்னர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் புகலிடம் நிராகரிக்கப்பட்டவர்கள் நாடு கடத்தப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி கடந்த வருடம் ஒகஸ்ட் 13ஆம் திகதியில் இருந்து இதுவரை 936 இலங்கை அகதிகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 756 பேர் சுய விருப்பின் பேரில் நாடு திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் வர விரும்பும் அகதிச ... க்கு நாடு கடத்தல் விடயம் ஒரு அபாய செய் ... ா ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரண்ட ... கொன்னர் தெரிவித்துள்ளார். (ந)

## முன்பள்ளி மாணவருக்கு போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.5

உலக புத்தக தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.சந்திராதேவி தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் சொல்வதெழுதல், வாசிப்பு, பேச்சு, கதை கூறல், படம் பார்த்து கதை கூறுவோம் ஆகிய போட்டிகளும், ஆங்கில மொழிப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமையும் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ந-14)

## பேராசை பெருநஷ்டம்

கடவுளை நோக்கி தவமிருந்தான் ஒரு பக்தன். அவன் பக்கத்திலேயே பேராசைக்காரன் ஒருவனும் கொட்டக் கொட்ட விழித்தபடி உட்கார்ந்திருந்தான். பக்தனுக்குத் தரிசனம் தர இறைவன் வரும்போது, தவம் செய்யாமலே தானும் தரிசனம் செய்துவிடலாம் என்ற பேராசை அவனுக்கு.

பக்தனுடைய தவ வலிமையால் கடவுள் அவன் முன்பு தோன்றினார். பேராசைக்காரனுக்கும் தரிசனம் கிடைத்தது. இருவருக்கும் எதிரில் இரண்டு குடங்களை வைத்து, யாருக்கு எது தேவையோ அதை எடுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு மறைந்தார் கடவுள். ஒன்று ஜொலிக்கும் தங்கக் குடம். இன்னொன்று மண் பானை.

பேராசைக்காரன் அவசரமாகத் தங்கக் குடத்தை எடுத்துக் கொண்டு ஓடினான். பக்தன் மண் பானையே போதும் என திருப்தியடைந்தான்.

ஞானக்கதிர்

பிறகுதான் விவரம் தெரிந்தது பக்தனிடம் இருந்த குடம் தங்கத்தால் ஆனது. ஆனால், மேலே களிமண் பூசப்பட்டிருந்தது. பேராசைக்காரன் எடுத்துக்கொண்டு போன குடம் களிமண்ணால் ஆனது. ஆனால், வெளிப்புறம் தங்க முலாம் பூசப்பட்டது.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்ப்பாணம் அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதுவருடத் தினத்தன்று காலை 8மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ந-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.5

ஆனைக்கோட்டை கண்ணகைபுரம் ஸ்ரீஇராஜரா ஜேஸ்வரி அம்பாள் ஆலயத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட ஆராதனைகளைத் தொடர்ந்து அம்பாளின் கிராம ஊர்வலம் நடைபெறும். எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு அம்பாளுக்கு திருக்குளிர்த்திப் பூசைகள் நடைபெற்று நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ந)

★ ★ ★

தென்மராட்சி, ஏப்.5

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி , தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் திருவிழாவில் 14 ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ந-9)

## வெப்ப மிகுதியால் அவலப்படும் குடாநாடு



கொழும்புத்துறை, ஏப்.5

யாழ்.குடாநாட்டில் நிலவும் கடும் வெப்பமான காலநிலையால் பல்வேறு வெப்ப நோய்களால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

வெப்ப மிகுதியால் ஏற்படும் கண்நோய், கூகைக் கட்டு, சின்னம்மை, காய்ச்சல், இருமல், தலையிடி, சளித் தொல்லை போன்ற நோய்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன.

இந்த நோய்களால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலைகளுக்கு வருவது திடீரென அதிகரித் துள்ளது.

இந்த அதிக வெப்பமான காலநிலை இன்னும் ஓரிரு வாரங்கள் நீடிக்கும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதி யாழ்ப்பாணத்துக்கு சூரியன் உச்சம் கொடுக்கும் நாள்களாகும்.

வெப்ப மிகுதியைத் தாங்க முடியாது மக்கள் சிரமம் அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-23-17-135)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் முறைசாரா பயிற்சி ஆரம்பம்

தென்மராட்சி,ஏப்.5

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் ஐந்து பாடசாலைகளில் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகள் பயிற்சிநெறி நடைபெறும் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு இணையமுடியும்.

அல்லாரை அ.த.க. பாடசாலையில் கணினிப் பயிற்சி நெறியும், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் உடையமைத்தல் மற்றும் கணினிப் பயிற்சி நெறியும், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் மணப்பெண் அலங்காரம் மற்றும் ஐசிங் கேக் பயிற்சி நெறியும், கைதடி-நுணாவில் அ.த.க.பாடசாலையில் ஆங்கில மொழிப் பயிற்சி நெறியும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# அறிவுலகின் தலைமை தமிழர் வசம் இருந்ததற்கு வள்ளுவமே சிறந்த சான்று

## திருக்குறள் மன்ற நிகழ்வில் லலீசன்

யாழ்ப்பாணம், ஏப்.5

அறிவுலகின் தலைமை தமிழரிடம் இருந்தது என்பதற்கு வள்ளுவமே சிறந்த சான்று. இன்று உலகில் அதிகளவில் மொழி பெயர்க்கப்பட்ட பொதுநூலாகத் திருக்குறளே விளங்குகின்றது என்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவித்தார்.

கோப்பாய் திருக்குறள் மன்றம் நடத்திய திருவள்ளுவர் விழா மன்றத் தலைவர் த.தர்மராஜா தலைமையில் அண்மையில் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' எனவும் 'பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும்' எனவும் இன்றைய உலகம் விதந்து பாராட்டும் கருத்துக்களை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே முன்வைத்த பெருமை தமிழருக்கு உரியது. இது அறிவு உலகின் தலைமைக்குரிய வர்கள் தமிழர்களே என்பதை உணர வைக்கிறது. இவ்வாறு நாம் பெருமை கொள்வதற் கான அடிப்படையை வழங்கி யவர் வள்ளுவப் பெருந்தகை ஆவார்.

தமிழருக்கு ஒழுக்கத்தைப் போதிக்க வேண்டிய தேவை எழுந்தபோதே திருக்குறள் எழுதப்பட்டது. இது எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய நூலாக அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். திருக்குறள் எழுந்த காலத்துக்கு ஒப்பான பிறழ்வுகள் இன்று எம்மைச் சுற்றியும் காணப்படுகின்றன. இந்தப் பிறழ்வுகளில் இருந்து சமூகத்தை விடுவித்து நெறிப்படுத்துவதற்கு திருக்குறள் பற்றிய சிந்தனைகள் இளையோரிடம் விதைக்கப்பட வேண்டும்.

ஊருக்கு ஊர் வள்ளுவர் விழாக்கள் நடைபெற வேண்டும். இதன் மூலம் தமிழுணர்வுமிக்க சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும். உலகுக்கு வாழும் வழி சொன்ன தமிழ்க் குடி இன்று வாழ வழி தேடிக் கொண்டிருப்பது வேதனைக்குரியது என்றார்.

இந்த நிகழ்வில் மன்றக் காப்பாளர் த.இராஜரட்ணம், தமிழறிஞர் கே.வி.குண சேகரம் ஆகியோரும் உரையாற்றினர். இசை ஆசிரியர் சிவதர்சினி சோதிரூபனின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றது. (எ)



யாழ்.மாவட்ட சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாச மகளிர் குழு நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றன. யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சமாசத்தின் மகளிர் குழுத்தலைவி ஜெயமணி யோசப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி வசந்தகுமார் மதுமதி, யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டனர். (ம-13)

## ஐந்து பாடசாலைகள் அபிவிருத்திக்கு தெரிவு

நெல்லியடி, ஏப்.5

5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளை புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 5 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளன.

அல்வாய் வடக்கு இ.த.க. பாடசாலை, கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலயம், விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை என்ற ஐந்து ஊட்டப் பாடசாலைகள் மேற்படி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ஒ-ரி)

### சாவகச்சேரி நகர சபையில்

## கணினி மயப்படுகிறது வருமான வரி நடவடிக்கை

வடமராட்சி, ஏப்.5

சாவகச்சேரி நகர சபையின் வருமானப் பகுதி நடவடிக்கைகள் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று முதல் கணினி மயப்படுத்தப்படவுள்ளன.

இதனால் சபையின் ஆதன வரி செலுத்துவோருக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ள வரி இலக்கங்கள் மூலம் வருடா வருடம் இலகுவாக பணம் செலுத்தமுடியும்.

இது தொடர்பாக வருமானப் பகுதியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான கணினி செயற்பாடு தொடர்பான பயிற்சிகளும் நடைபெற்றுள்ளன. (ந-9)

### மின் தடைப்படும் வேளையில்

## ஜெனறேற்றர் இல்லாததால் நோயாளர்கள் அசௌகரியம்

தென்மராட்சி,ஏப்.5

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் மின்சாரம் தடைப்படும் வேளைகளில் விடுதியில் நோயாளர்கள் இருளில் இருக்க வேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இரவில் மின்சாரம் தடைப் படும் வேளையில் விடுதிக்கு ஒரு லாந்தர் விளக்கு வைக்கப்படுவதாகவும் இதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஆயுள்வேத வைத்திய சாலையில் நோயாளர்கள் நீண்ட நாள்கள் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதால் மின் தடை ஏற்படும் வேளைகளில் இருளில் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வைத்தியசாலை விடுதிகளில் தங்கி யிருக்கும் நோயாளர்கள் நலன்கருதி இந்த வைத்தியசா லைக்கு மின் தடை ஏற்படும் வேளைகளில் பயன்படுத்தக் கூடிய ஜெனறேற்றர் வழங்க சம்பந்தப் பட்ட அதிகாரிகள் முன் வர வேண்டும் என் றும் நோயாளர்கள் தெரிவித்தனர். (ந-9)

## தரம் 10 மாணவருக்கான போட்டி

வடமராட்சி, ஏப்.5

தரம் 10 மாணவர்களுக்கான "உங்களுக்குத் தெரியுமா?" போட்டியை பாடசாலை மட்டத்தில் நடத்துமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

பாடசாலைகள் தாமே வினாக்களைத் தயாரித்து பாடசாலை மட்டத்தில் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி அதி கூடிய புள்ளிகளைப் பெறும் முதல் 5 மாணவர்களது பெயர் விவரங்களை வடமராட்சி கல்வி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கவேண்டும். கோட்டமட்ட போட்டிக்கான வினாத்தாள்கள் வடக்கு மாகாணத் திணைக்களத்தால் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ம-ரி)


**விற்பனைக்கு**

யாழ்.நகரில், பலவைகந்தரிய கதிரைகள், மேசைகள் வீட்டுப் பொருள்கள் (சில்வர் தண்ணீர் பில்ரர் உட்பட) விற்பனைக்குண்டு. மிகக்குறைந்த விலையில். தொடர்பு: 0779562360 (35666)(2.6)

**வீடு வாடகைக்கு**

கந்தர்மடம் அம்மன் வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0717511875 (35685)(2.6)

**பெயர்மாற்றம்**

சேந்தாங்குளம், இளவாலையைச் சேர்ந்த **லாசறஸ்ப்பிள்ளை செல்வம்** ஆகிய நான் இன்றிலிருந்து **லாசறஸ்ப்பிள்ளை இருதயநாதர்** என பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
தகவல்: லா.இருதயநாதர் (35661) (6.7.11)

**மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியும் மரதன் ஓட்டப்போட்டியும்**



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மூளாய் மனிதவள அபிவிருத்தி சனசமூக நிலையத்தினரால் யாழ். மாவட்ட ரீதியிலான 10 கி.மீ. மரதன் ஓட்டப்போட்டியும் (18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்குமானது) மற்றும் ஆண்களுக்கான 60 கி.மீ. சைக்கிள் ஓட்டப்போட்டியும் நடத்தப்படவுள்ளன.



பங்கு பற்ற விரும்பும் போட்டியாளர்கள் 07.04.2013 ஆம் திகதிக்கு முன்னர்

1. வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம், மாவடி, மூளாய்.
2. உதயன் விடுதி. யாழ்ப்பாணம்.
3. உதயன் பணிமனை. நெல்லியடி.
4. உதயன் பணிமனை, சாவகச்சேரி.
5. மனித வள அபிவிருத்தி நிலையம், மூளாய்.

ஆகிய இடங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்கவும்.

பிரவேசக் கட்டணம்: மரதன் ஓட்டப்போட்டி ரூபா 200/=, சைக்கிள் ஓட்டப்போட்டி ரூபா 300/=

**சித்திரைப் புத்தாண்டு சிறப்புச் சலுகை**
20.04.2013 வரை மட்டுமே




10.04.2013 முதல் 20.04.2013 வரை
TOSHIBA மடிக்கணனிகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் Samsung Laser Printer இலவசம்
சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்
021 4920 555/ 0779975532
IIS OFFICE AUTOMATION
254, Stanly Road, Jaffna. (சி/8087)(2.6)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
முகாமைக் கற்கைகள் வணிக பீடம்
மனிதவள முகாமை/ சந்தைப்படுத்தல் முகாமை/ நுண்நிதியியல் டிப்ளோமாக் கற்கைநெறிகளுக்கான பரீட்சைகள் - ஏப்ரல் 2013

மேற்படி கற்கை நெறிகளுக்கான பரீட்சைகள் 2013 ஏப்ரல் மாதம் 19, 20, 21, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் அவற்றுக்கான விண்ணப்பங்களை இதுவரை கையளிக்காதவர்கள் தத்தமது கற்கைநெறி இணைப்பாளர்களுடன் அலுவலக நேரத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகளை இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக மேற்கொள்ளும்படி கற்கை நெறிகளுக்குத் தம்மை ஏற்கனவே பதிவு செய்து கொண்ட மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இப் பரீட்சைகளுக்குரிய நேர சூசியைப் பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடவும்.

(சி/8085)(2.6) - பதிவாளர்.

# சிக்கன கடன் கூ.சங்கங்களை புனரமைக்க துரித நடவடிக்கை

**பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இந்தச் சங்கங்களை மீளப் புனரமைத்து அவற்றைச் செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ். மாவட்டத்தில் மேலும் முப்பது வரையிலான சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் அபிவிருத்தி சம்பந்தமான செயலமர்வு ஒன்று அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றது.

இந்த செயமலர்வில் வடக்கு மாகாணத்தில் 150 வரையிலான சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை புனரமைப்பதற்கும் மேலும் சில சங்கங்களைப் புதிதாக அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்தில் குறைந்தது முப்பது வரையிலான சிக்கன கடன் வழங்கும் சங்கங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த சிக்கன கடன் வழங்கும் சங்கங்களைப் புனரமைப்பதற்கு உரிய சகல உதவிகளையும் வழங்குவதற்கு கனேடிய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் கடந்த கால போரால் அநேகமான சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காமல் செயலிழந்து உள்ளன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இந்தச் சங்கங்களை மீளப் புனரமைத்து அவற்றைச் செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீளப் புனரமைத்து இந்தச் சங்கங்களை ஆரம்பிப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களை, கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

இந்தக் கடன் திட்டம் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்துக்கான சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புக் கிட்டும்.- என்றார்.

இந்தச் செயலமர்வில் வடக்கு மாகாண சிக்கன கடன் வழங்கும் சமாசங்களின் தலைவர்கள், வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கனேடிய நிறுவன பிரதிநிதிகள் மற்றும் இலங்கை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சம்மேளன பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-17)

## பசு மாட்டு இறைச்சி விற்றவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஏப். 5

பசு மாட்டு இறைச்சியை கடையில் விற்பனை செய்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கொடிகாமத்தில் இடம்பெற்றது. பொது மக்கள் கொடுத்த இரகசியத் தகவலை அடுத்து கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.ஜே. றொனால்ட் மற்றும் கொடிகாமம் பொலிஸார் இணைந்து கொடிகாமம் சந்தையில் உள்ள இறைச்சிக் கடையில் சோதனை நடத்தினர்.

இதன்போது சுகாதாரமற்ற நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 கிலோ இறைச்சியை மீட்டனர்.

இது தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதலின் போது மிருசுவில் வடக்கு காடு என்னும் இடத்தில் பற்றை மறைவில் வைக்கப்பட்டிருந்த ஆர்.எஸ். என்ற குறியுடனான பசு மாட்டுத் தோல் மற்றும் கழிவுப் பொருள்களைக் கண்டெடுத்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து இனிமேல் இவ்வாறு குற்றம் இழைப்பின் கடுமையான தண்டனை வாங்கப்படுமென எச்சரிக்கையும் விடுத்தார். (ம-9)

## ஊட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி ஆரம்பம்

தென்மராட்சி,ஏப். 5

தென்மராட்சி கல்வி வலயத்தில் ஊட்டப் பாடசாலையை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகளில் அபிவிருத்தி வேலைகள் இன்று காலை 8 மணிக்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறும் ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் உட்பட கல்வித் திணைக்கள அலுவலர்களாளும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

ஒவ்வொரு ஊட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## பச்சை மிளகாய் நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம், ஏப்.5


யாழ். குடாநாட்டில் பச்சை மிளகாய் இந்த முறை விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது.

தீவுப் பகுதி மற்றும் தெல்லிப்பழை பிரதேசங்களில் விவசாயிகள் கூடுதலாக இந்த மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டனர். தீவுப் பகுதியில் உள்ளூர் பச்சை மிளகாய் உற்பத்தியில் விவசாயிகள் அதிக விளைச்சலை பெற்றுள்ளனர்.

தற்போது இவை அறுவடை செய்து சந்தைக்கு பெருமளவில் எடுத்து வரப்படுகின்றன.

அதனைவிட இந்த மிளகாய் தென் பகுதிக்கும் கூடுதலாக எடுத்து செல்லப்படுகின்றது.

தீவுப் பகுதியில் விவசாயிகள் உள்ளூர் மிளகாய்ச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கான மிளகாய் விதைகளை விவசாய திணைக்களத்தினர் தெரிவு செய்யப்பட்ட விசாயிகளுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் அரசறிவியல் ஒன்றியத்தின் வெளியீடான அரசியலாளன் இதழ்-4, கடந்த முதலாம் திகதி கைலாசபதி கலையரங்கில் வெளியீட்டு வைக்கப்பட்டுள்ளது. அரசறிவியல் ஒன்றியத் தலைவர் சி.பிரசாத் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக விஞ்ஞான பீடாதிபதியும் பதில் துணைவேந்தருமான பேராசியர் க.கந்தசாமி, சிறப்புவிருந்தினராக வரலாற்றுத்துறை தலைவரும் கலைப்பீட பதில் பீடாதிபதியுமான பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், அரசறிவியல் துறைத்தலைவர் வே.மணிவாசகர் ஆகியோர் கலந்துகொண்டனர். நூலின் ஆய்வுரையை பேராசிரியர் செ.கிருஷ்ணராசா நிகழ்த்தினார். இதன்போது புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அரசியலும் மதமும் தொடர்பான கட்டுரை தொடர்பில் கருத்துக் கூறும்போது நாட்டின் தற்போதைய நிலைதொடர்பாக விளக்கமாகக் குறிப்பிட்டார். மேலும் நாட்டில் பேச்சுச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதையும் அவர் எடுத்துக் காட்டினார். வாழ்த்துரைகளை நிகழ்த்திய பேராசிரியர்கள் வே.மணிவாசகர், க.கந்தசாமி, புஷ்பரட்ணம் ஆகியோர் மாறிவரும் உலக சூழலுக்கேற்ப ஆங்கிலத்தின் அவசியம் தொடர்பில் வலியுறுத்தினர். இந்த நிகழ்வில் பேராசிரியர் ச.சத்தியசீலன், பேராசிரியர் கா.குகபாலன், பேராசிரியர் ரகுநாதன், பேராசிரியர் வேதநாதன், பேராசிரியர் கி.விசாகரூபன் மற்றும் விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-5)

## அரச வைத்தியசாலைகளில் நோயாளர் நலன்புரி சங்கம்

அச்சுவேலி, ஏப். 5

அரச வைத்தியசாலைகளில் வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் நிறுவப்படவுள்ளன. நலன்புரிச்சங்கத்தை உரிய முறையில் செயற்பட வைப்பதற்கு சங்கத்தின் விதிகளை உள்ளடக்கிய யாப்பும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் உரிய முறையில் செயற்படுவதன் மூலம் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு முழு ஆதரவு வழங்கல், நோயாளரின் நலனில் கூடிய கவனம் செலுத்துதல், வைத்தியசாலையின் சேவையை மேம்படுத்த உறுதுணையாக இருத்தல், நோயுற்ற வயோதிபர் விசேட தேவை உடையோருக்கான நடமாடும் மருத்துவ சேவையை வழங்குதல், வறிய மக்களுக்கான மருத்துவ உதவியை வழங்க ஏற்பாடு செய்தல் முதலிய நோக்கங்களை நிறைவு செய்ய வேண்டும் என்று சங்க யாப்பு விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நலன்புரி சங்கத்தின் உறுப்பினராக 18 வயதுக்கு மேற்பட்டவர்கள், நன்நடத்தை உடைய சமூக ஆர்வலர்கள் , பொதுப் பணிகளில் ஈடுபடுவோர் சேர்ந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி சங்கத்தின் பதவிக்காலம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதியை கொண்ட நிதியாண்டு காலமாகும்.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய வைத்தியசாலைகளில் நோயாளர் நலன்புரி சங்கம் நிறுவப்பட்டு வருகின்றது. இதுவரை காலமும் செயற்பட்டு வந்த வைத்தியசாலை அபிவிருத்திச் சபைகளுக்குப் பதிலாக எதிர்காலத்தில் வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் செயற்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது. (ம-11)

## வேலணையில் புதுவருடச் சந்தை

வேலணை பிரதேச சமுர்த்திச் சங்கத்தின் புது வருடத்துக்கான சந்தை எதிர்வரும் 11 .ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறும். உள்ளூரின் உற்பத்திப் பொருள்களுடன் பனம் பொருள்கள், இந்தப் பகுதி சுயதொழிலாளர்களால் தைக்கப்பட்ட ஆடைகள் போன்றவை புதுவருடச் சந்தையில் முக்கிய இடம் பிடிக்கவுள்ளன.

வேலணை, புங்குடுதீவு கமநல சேவைகள் மற்றும் விவசாய திணைக்களங்கள், புங்குடுதீவு சர்வோதய அமைப்பு, புங்குடுதீவு வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள் கடற்றொழிற் சங்கம் ஆகியவை இதில் கலந்து கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## இரவில் பணியாற்றும் மருத்துவர் அனைவருக்கும் விடுதி வசதிகள்

யாழ்ப்பாணம், ஏப்.5

பிற்பகல் மற்றும் இரவில் வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களைப் பார்வையிடும் மருத்துவர்கள் அனைவருக்கும் விடுதிகள் வழங்கப்பட வேண்டும் என்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மருத்துவர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் செவ்வாய்க் கிழமை முற்பகல் மருத்துவர் சங்கக் கூட்டம் நடைபெற்றது. மருத்துவர்களின் நலன்கள் குறித்து அதில் கலந்துரையாடப்பட்டது.

பிற்பகல் மற்றும் இரவு வேளைகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிடும் மருத்துவர்கள் வைத்தியசாலையில் தங்கியிருப்பது தவிர்க்க முடியாத விடயம். அவர்களுக்கு வைத்தியசாலை நிர்வாகத்தினால் விடுதிகள் வழங்கப்பட வேண்டும்.

இதுதவிர வைத்தியசாலைக்குள் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் தமது வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்றும் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மருத்துவ நிபுணர்கள் அவ்வாறு செல்வதன் மூலம் மருத்துவர்களுக்கான விடுதிப் பற்றாக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்யலாம்.

கொழும்பு போன்ற இடங்களில் மருத்துவ நிபுணர்கள் தனி இடம் எடுத்தே தங்குகிறார்கள். இங்கு மட்டுமே நிபுணர்கள் விடுதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளனர்.

எனவே அந்த விடுதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் கூட்டத்தில்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த-4)

## படையினர் அமைத்த வீடு பயனாளிகளிடம்



கடற்படையினரின் முழுமையான பங்களிப்புடன் நயினாதீவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மூன்று வீடுகளுள் ஒரு வீடு கடந்த மார்ச் 27 ஆம் திகதி நயினாதீவு மேற்கில் வசிக்கும் ஜே.விஜயகுமார் என்பவருக்கு கடற்படையினரால் கையளிக்கப்பட்டுள்ளது.

வடபிரதேச கடற்படைமையத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக நலன் சேவையின் கீழ் இந்த நிர்மாணங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் கடற்படைக் கட்டளைத் தளபதி எலார, நயினாதீவுக்குப் பொறுப்பான கடற்படை அதிகாரி, வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ம-8-22)

## பொங்கல் விழா

அளவெட்டி, ஏப். 5

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு அர்த்த சாமப் பூசையுடன் பொங்கல் விழா நிறைவடையும்.

அன்றைய தினம் முற்பகல் 11.30 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் வசந்த மண்டபப் பூசையும் சுவாமி உள்வீதியுலா வருதலும் இடம்பெறும். (ம-36)

## தகவல் தொழில்நுட்ப கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றமும், அரச தகவல் தொடர்பாடல் முகவர் நிறுவனமும் இணைந்து நடத்தும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் சுற்றுலா விடுதியில் இடம்பெறவுள்ளது. (ம-14)

## திருவாசகம் முற்றோதல்

நீர்கொழும்பு சைவத் திருமுறை அடியார் சங்கத்தால் ஆண்டுதோறும் பேராதனை குறுஞ்சிக் குமரன் ஆலயத்தில் நடத்தப்படும் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(ம)

## நெடுந்தீவில் உள்ளூர் போக்குவரத்து ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஏப்.5

நெடுந்தீவு உள்ளூர் பஸ் போக்குவரத்துச் சேவை கடந்த இரண்டு தினங்களாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இங்கு இரண்டு பஸ்களைச் சேவைக்கென இலங்கை போக்குவரத்துச் சபை வழங்கியுள்ளபோதும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு பஸ் பழுதடைந்து சேவையில் இருந்து ஒதுங்கிக் கொண்டது.

மற்றைய பஸ் காற்றுப் போன நிலையில் கடந்த இரண்டு நாள்களாக சேவையில் ஈடுபடுத்தப்படாததால் படகுப் பயணிகள், நோயாளர்கள் துறைமுகத்துக்கும் வைத்தியசாலைக்கும் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சேவையில் இருந்த ஒரேயொரு பஸ்ஸும் பழுதடைந்தது குறித்து பஸ் ஊழியர்கள் யாழ். சாலைக்கு உடனடியாகவே தெரியப்படுத்தியபோதும் அதனைத் திருத்தியமைத்துச் சேவையைத் தொடரக் கூடியதான நடவடிக்கைகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாக இ.போ.ச. அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுப்பார்களா என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-7)

# தமிழர் மீதான தாக்குதலுக்கு அனைத்துலகமே பொறுப்பு

### அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவை தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.5

தமிழ் மக்கள் மீது தொடர்ந்து இடம்பெறும் தாக்குதல்களுக்கு அனைத்துலகமே பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்வாறு அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

65 வருட காலமாக தொடரும் ஈழத் தமிழர்களின் இன அழிப்பில் 2009 ஆம் ஆண்டு மே 18 மாபெரும் அழிப்பின் ஒரு குறியீடாக விளங்குகின்றது.

இருந்தும் ஈழத் தமிழர்கள் மீதான இன அழிப்பு பல்வேறு வடிவங்களில் இன்று வரை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

தமிழர்களின் தாயகத்தில் போர் நடந்த காலத்தை விட இன்று அதிகமான இராணுவம் நிலை கொண்டுள்ளது. அத்துடன் தமிழர்களின் பாரம்பரிய பூமி பறிக்கப்பட்டு சிங்கள பௌத்த கலாசாரம் ஏவிவிடப்படுள்ளது. கடந்த பலகாலமாக தமிழ் மக்கள் நேரடியாக சிங்கள அரசின் திட்டமிட்ட சதியால் தாக்கப்படுகின்றனர்.

கடந்த ஒரு வாரத்துக்குள் மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் உதயன் பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதல்கள் இடம்பெற்றன அடுத்தடுத்து இடம்பெற்றுள்ளன.

### இருந்தும் ஈழத் தமிழர்கள் மீதான இன அழிப்பு பல் வேறு வடிவங்களில்

என்றும் இல்லாதவாறு ஈழத் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரும் சர்வதேச சமூகத்தின் கண் முன்னே இவ்வாறான தாக்குதல்கள் இன்றும் தொடர்கின்றன.

கடந்த ஆண்டைப் போல் இந்த வருடம் 22 ஆவது ஐக்கிய நாடு மனித உரிமை அமர்வில் நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானம் எந்த விதத்திலும் ஈழத்தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதாக அமையவில்லை என்பதை இவ்வாறான ஈழத்தமிழர்கள் மீது தொடரும் சிங்கள அரசின் தாக்குதல்கள் தெளிவாக கோடிட்டுக் காட்டுகின்றன.

2009 இறுதி நேரத்தில் குறைந்தபட்சம் 80, 000 மக்கள் கொல்லப்பட்டு இருக்கலாம் என்று ஐ.நா. பிரதிநிதிகளே கூறும் வேளையில், கடந்த ஆண்டை போல் இந்த வருடமும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் சிங்கள அரசு தன்னைத் தானே விசாரிக்கச் சொல்லும் உள்ளக விசாரணை மற்றும் நல்லிணக்கமே. இதனை தமிழ் மக்களை சர்வதேசம் மீண்டும் ஏமாற்றியதாகவே கருத வேண்டியுள்ளது.

தொடர்ந்தும் சர்வதேசம் தனது பூகோள அரசியல் நலம் சார்ந்து மௌனம் காப்பதும், இலங்கை அரசுக்குத் துணை போவதுமாக இருப்பதும் மீண்டும் ஒரு முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கு ஈழத்தமிழர்கள் தள்ளப்படுவதுக்கே வழிகோலும்.

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கச் சர்வதேசம் அனைத்துலக சுயாதீன விசாரணையை மற்றும் உலகம் முழுக்க பரந்து வாழும் ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசையான தமிழீழத்தை ஐ.நாவில் அங்கீகரிக்க வேண்டும்.

இதுவே ஈழத் தமிழர்களின் நிரந்தரப் பாதுகாப்புக்கும் இனத்தின் இருப்புக்கும் தீர்வாக அமையும்.- என்றுள்ளது. (ம)

## பளை நடமாடும் சேவையில் 300 க்கும் மேற்பட்டோர் பயன்

பளை,ஏப் 5

பளை மாசார் பிரிவு மக்களுக்கான நடமாடும் சேவை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாசார் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

பளைப் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற நடமாடும் சேவையில் பளைப் பிரதேச செயலகத்தின் அனைத்துப் பிரிவுகளும் பங்குபற்றின. தொலைந்த அடையாள அட்டை, சாரதிய அனுமதிப் பத்திரம், போன்றவற்றுக்கான அறிக்கை வழங்கல், பிறப்பு, இறப்பு விவாகப் பதிவுச் சான்றிதழ்கள் போன்றவைகளின் பதிவுகள் என்பனவும் அந்தப் பிரிவில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன.

அங்கு நடைபெற்ற கண் பரிசோதனை முகாமில் பார்வையில் குறைபாடு காணப்பட்டவர்களுக்கு குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.டி. ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் 300க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பளைப் பொலிஸார் மாதம் ஒரு கிராம அலுவலர் பிரிவில் நடமாடும் சேவை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ந-9)

# இந்திய மீனவர் மீது மீண்டும் தாக்குதல்

சென்னை, ஏப். 5

கச்சதீவு கடற்கரையின் அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களை, இலங்கைக் கடற்படை நேற்றுமுன்தினம் அடித்து விரட்டியுள்ளதாக மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் கச்சதீவு கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சுமார் நூறு படகுகளை இலங்கைக் கடற்படையினர் விரட்டித் தாக்குதல் நடத்தினர் என்று அவர்கள் கூறினர். ஆனால் இலங்கை கடற்படையினர் இந்தக் குற்றச் சாட்டுக்களை நிராகரித்துள்ளனர்.

கடந்தமாத நடுப்பகுதியில் ரமேஸ்வரம் மீனவர்கள் 19 பேர் எல்லை தாண்டி வந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு கோரி ராமேஸ்வர மீனவர்கள் கடந்த இரண்டு வாரங்களாக போராட்டம் நடத்தினர். இதனால் 500 இற்கு மேற்பட்ட படகுகள் தொழிலுக்குச் செல்லவில்லை.

கடந்த திங்கட்கிழமை முதல் புறக்கணிப்பைக் கைவிட்டு மீண்டும் மீனவர்கள் தொழிலுக்குச் சென்றனர்.

திங்கட்கிழமையும் இலங்கை கடற்படையினர் தங்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று ராமேஸ்வரப் பகுதி மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் தொழிலுக்குச் சென்ற தாம் கச்சதீவு கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தங்களைத் தொழில் செய்ய விடாமல் துரத்தினர் என்று ராமேஸ்வரப் பகுதி மீனவர்கள் தெரிவித் தனர். (உ-5)

### 30 அடி உயரத்திலிருந்து

## வீழ்ந்த 'கொங்கிறீற்' கலவைக்குள் சிக்கிய இருவர் படுகாயம்

தென்மராட்சி, ஏப். 5

சுமார் 30 அடி உயரத்தில் இருந்து 'கொங்கிறீற்' கலவை நிரப்பட்ட பெரும் வாளி வீழ்ந்ததில் அதனால் நசியுண்டு இரு தொழிலாளர்கள் படுகாயமடைந்தனர்.

சம்பவம் நேற்று சாவகச்சேரி அஞ்சலக வீதியில் இடம்பெற்றது.

மூன்றாவது மாடிக் கட்டடத்துக்கு 'கொங்கிறீற்' இடும்பணி இடம்பெற்றுக்கொண்டிருந்தது. சிமெந்து கலவையை கீழே இருந்து எடுத்துச் சென்ற வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த நடராசா சகிக்குமார் (வயது -28), ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தைச் சேர்ந்த தம்பையா நாகேஸ்வரன் (வயது-50) ஆகியோரே காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-9)

# முடிவேயில்லாது தொடர்கிறது ஊடகங்கள் மீதான தாக்குதல்

### வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் கண்டனம்

கிளிநொச்சியில் அதிகாலை வேளை, 'உதயன்' பத்திரிகை அலுவலகம் அடித்து நொருக்கப்பட்டு பணியாளர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டு அதன் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டமை, ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் முடிவில்லாது தொடர்வதையே காட்டுகின்றது. இது போன்ற தொடர் சம்பவங்கள் கண்டிக்கத்தக்கதும், நிறுத்தப்படவேண்டியதுமாகும்.

தமிழ் பேசும் மக்களின் குரலாக இருந்து தமிழ் மக்களின் அரசியல், சமூகப்பிரச்சினைகளை மக்களுக்கும், உலகுக்கும் வெளிக்கொணர்ந்து ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுவதும் அவர்களது சொத்துக்கள் நாசமாக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் அதிகரித்துள்ளன. இவற்றை ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளாகவே பார்க்கவேண்டியுள்ளது.

ஜனநாயகத் தன்மை கொண்ட நாட்டின் தூண்களில் ஒன்றான ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் பாதுகாக்கவும் அதனூடாக ஊடக சுதந்திரத்தையும் மக்கள் தமது கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தவும் அரசு ஆவன செய்யவேண்டும்-என்று தெரிவித்துள்ளார் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன்.

## மனைவி மற்றும் பிள்ளைக்கு போதையில் கொட்டன் அடி

### நபருக்கு விளக்க மறியல்

தென்மராட்சி, ஏப். 5

மனைவியையும் பிள்ளையையும் கொட்டனால் தாக்கிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

கொடிகாமத்தில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

கடந்த முதலாம் திகதி இரவு மதுபோதையில் வீட்டுக்கு வந்த நபர் மனைவியையும் பிள்ளையையும் கொட்டனால் தாக்கி காயம் ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் கணவனும் தந்தையுமான நபரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (உ-9)

# விபத்தில் காயம்

அளவெட்டி, ஏப்.5

கீரிமலை நகுலேஸ்வரம் வீதியில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் விபத்தில் காயமடைந்தார்.

பொலிஸ் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இரத்தினசிங்கம் சிவரஞ்சினி (வயது 43) என்பவரே காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டவராவார். சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ம-36)

# தனித் தமிழீழத்துக்கு திடீர் ஆதரவு கொள்கையை மாற்றியது பா.ஜ.க.

## ராஜபக்ஷ அரசு திருந்தவேண்டும் என்கிறார் யஷ்வந்த் சின்ஹா

ஈழத் தமிழர்களுக்குத் தனி ஈழம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு தமிழகத்தில் ஆதரவு வலுத்துவரும் நிலையில், இலங்கையில் தமிழீழம் விரைவில் மலரும் என்று இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான யஷ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த இலங்கையை இதுவரை பா.ஜ.க. வலியுறுத்தி வந்தது. தற்போது அந்த முடிவைக் கைவிட்டு தமிழீழத்தை ஆதரிக்கும் முடிவை எடுத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழக பா.ஜ.க. சார்பில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான சிறப்புக் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட யஷ்வந்த் சின்ஹா கூறியவை வருமாறு:-

காங்கிரஸின் தவறான அணுகுமுறை, இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பொது மக்கள், மாணவர்கள் நடத்திய போராட்டம் நாடு முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

கொல்லப்பட்ட பாலச்சந்திரனின் படத்தைப் பார்க்கும்போது யாருக்குத்தான் துன்பம் வராது? ரொட்டி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் குழந்தை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். அந்தக் குழந்தை குண்டுகளை முதுகில் வாங்கவில்லை. நெஞ்சில் வாங்கியிருக்கிறது.

வாஜ்பாய் தலைமையிலான அரசு இலங்கைப் பிரச்சினையை பேச்சுகளின் மூலம் தீர்க்கப் பார்த்தது. ஆனால் காங்கிரஸ்தான் ஆரம்பத்தில் இருந்தே இலங்கைப் பிரச்சினையில் தவறான அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது.

2009 இல் இறுதிப் போர் நடந்தபோது ராஜபக்ஷ அரசுக்கு காங்கிரஸ் அனைத்து வகையிலும் உறுதுணையாக இருந்தது. இந்தியாவின் உச்ச பட்ச தலைமை வரை எங்களுக்கு உதவியிருக்கிறது என்று இலங்கை அரசு கூறுகிறது. அப்படியென்றால் மன்மோகன் சிங் வரை ஆதரவு என்றுதானே அர்த்தம்?

இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் இந்தியாவே தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினேன். ஆனால் காங்கிரஸ் அரசு, அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தையே நீர்த்துப் போகச் செய்து ஆதரித்துள்ளது.

தமிழர் பகுதியில் இருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும் என்றும் கோரினேன். ஆனால், செவிமடுக்கப்படவில்லை. இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் விரைவில் தேர்தல் நடத்த வேண்டும். அந்தத் தேர்தல் சர்வதேச கண்காணிப்பின் கீழ்தான் நடத்தப்பட வேண்டும்.

இதற்கு இலங்கை அரசு ஒத்துக்கொண்டால்தான் தமிழர்கள் பற்றிய சிந்தனையில் இலங்கைக்கு மாற்றம் வந்துள்ளது என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.

அடக்குமுறையின் மூலமாக ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்க முடியாது. அடக்குமுறை அதிகரித்தால் அப்பகுதியில் உள்ள மக்களின் சுதந்திர உணர்வும் அதிகரிக்கும். பாகிஸ்தானின் அடக்குமுறையால்தான் பங்களாதேஷ் உருவானது. சூடான்- வடக்கு சூடான், தெற்கு சூடான் என பிரிந்திருப்பதற்கு ஆட்சியாளர்களின் அடக்குமுறைதான் காரணம். எனவே, மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு நான் சொல்வது, அடக்குமுறையைச் செலுத்தினால் ஈழம் அமைய வெகு நாள் ஆகாது. ஆனால் இன்னும் காலம் இருக்கிறது. அதனால் ராஜபக்ஷ அரசு திருந்திக்கொள்ள வேண்டும்.

வருங்காலத்தில் பா.ஜ.க. ஆட்சி அமையும். அப்போது தமிழர்கள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்த்துவைக்கப்படும் என்றார் அவர். (ஜ-சி)

# சீன உதவி பாதுகாப்பு அமைச்சரை வியக்கவைத்த கரும்புலி படகு!

கடற்புலிகளால் வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல் படகு ஒன்றைப் பார்த்த சீனாவின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் வியப்புத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீனாவின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் சோயு யகுய்ங் தலைமையிலான சீனப் பாதுகாப்பு அதிகாரிகள் குழு கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் பாதுகாப்பு நிலைகளை பார்வையிட்டுள்ளது.

இலங்கைக்கடற்படையின் கிழக்குத் தலைமையகம் அமைந்துள்ள டொக்யார்ட்டுக்கு சென்ற இந்தக் குழுவினர், திருகோணமலைத் துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டுள்ளனர்.

படகு மூலம் இவர்கள் திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றிப் பார்வையிட்டதுடன், அங்குள்ள இலங்கை கடற்படை அருங்காட்சியகத்துக்கும் சென்றனர்.

கடற்புலிகளின் படகுகள் வடிவமைப்பு மற்றும் அவர்கள் கையாண்ட தாக்குதல் உத்திகள் குறித்தும் சீனப் பாதுகாப்பு அமைச்சர், இலங்கை கடற்படையின் கிழக்கு பிராந்தியத் தளபதியிடம் கேட்டறிந்துகொண்டார் என்றும், கடற்புலிகளால் வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல் படகு ஒன்றை பார்த்த சீனாவின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் வியப்புத் தெரிவித்துள்ளார் என்றும் தெரியவருகிறது. (சி-400)

# மாட்டிறைச்சி பறிமுதல்

சட்டவிரோதமாக இயங்கி வந்த விலங்குவதை நிலையமொன்றை நேற்று முற்றுகையிட்ட விசேட அதிரடிப் படையினர், அங்கிருந்து ஆயிரம் கிலோ மாட்டிறைச்சியைக் கைப்பற்றியுள்ளனர்.

செட்டிக்குளம் - ஆண்டியபுளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருக்கள்புதுக்குளம் முகாம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கென செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் 'சோழியவத்தை' நி.பர. 09 குளி 11 விஸ் தீரணமான காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-0771349125

**தேவை**

காஞ்சிபுரம் வித்து (எட்டிக்கொட்டை) தொகையாகத் தேவை.
வன்னி, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கும்.
EK & Co
55/1, ஸ்ரீ மகிந்த தர்ம மாவத்தை, கொழும்பு-09.
Tel: 011-2677077

# பொதுபலசேனாவுக்கு பதிலடி கொழும்பில் நாளை கூட்டம்

## தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாடு

கொழும்பு, ஏப்.5

நாடு பூராகவும் பொது பலசேனா மேற்கொண்டு வரும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான பிரசாரங்களுக்கு பதில் கொடுக்கும் வகையில் இலங்கை தவ்ஹீத் ஜமா அத் கொழும்பில் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருமாறு அந்த அமைப்பு அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இக்கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு கொழும்பு கொம்பனித் தெரு ஹொலி ரோஸரி மஹா வித்தியாலயத்துக்கு முன்னால் இடம்பெறவுள்ளது.

இலங்கை தவ்ஹீத் ஜமா அத்தின் செயலாளர் ஆர்.அப்துல் ராசீக் 'முஸ்லிம்களின் மரபுரிமையைப் பாதுகாப்போம்' என்ற தலைப்பிலும், துணைச் செயலாளர் எவ்.எம். ரஸ்மின் 'வஹாபிஸம் தீவிரவாதமா?' என்ற தலைப்பிலும் மற்றும் துணைத்தலைவர் எம்.ரி.எம்.பர்ஸான் 'சதி வலையில் சிக்குமா முஸ்லிம் சமுதாயம்?' என்ற தலைப்பிலும் இக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

இது தொடர்பில் துணைச் செயலாளர் எவ்.எம்.ரஸ்மின் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இனக்கலவரத்தை ஏற்படுத்தி முஸ்லிம்களின் உயிர்களையும் சொத்துகளையும் அழித்தொழிக்கும் நாசகாரத் திட்டத்துடன் இன்று பொது பலசேனா நாடு பூராகவும் முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்துச் செல்கின்றது.

சிங்கள மக்களுக்கு இதைத் தெளிவுபடுத்தி இரண்டு சமூகங்களினதும் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். அதற்கான ஏற்பாட்டில் நாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

இந்நடவடிக்கையின் ஒருகட்டமாக கொம்பனித் தெருவில் சனிக்கிழமை பொதுக்கூட்டம் ஒன்றை எமது அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உண்மை நிலைமையை விளங்கிக்கொள்ளுமாறு நாம் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம்- என்றார். (சி)

# தமிழக ஆர்ப்பாட்டங்கள் குறித்து பொருட்படுத்த தேவையே இல்லை

## அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா

கொழும்பு, ஏப்.5

வை.கோவின் உரையை நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்திய மத்திய அரசும் அதனை உதாசீனப்படுத்தி விடும் என்று கூறினார் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா.

தமிழ் நாட்டில் இருக்கும் இலங்கைக்கான உதவித் தூதுவதர் பிரசாத் காரியவசத்தை உடனடியாகத் திருப்பி அனுப்ப வேண்டும் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி டில்லி அரசை வற்புறுத்தியுள்ளார். தமிழ் நாட்டில் தொடங்கிய போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உதவித் தூதுவர் பிரசாத் காரியவசம் திருப்பி அழைக்கப்படுவாரா என செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர்," நாம் இந்திய மத்திய அரசுடனேயே நேரடியாக இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ளோம். தமிழ் நாட்டைப் பற்றி அ[illegible]டிக் கொள்ள வேண்டி[illegible]சியம் இல்லை. வை.கோ உட்பட தமிழ் நாட்டில் உள்ளவர்கள் வெட்டித்தனமான ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

யாருக்கு எதிராகவும் அவர்கள் போராட்டம் நடத்துவார்கள். நாளை நீங்கள் அங்கு சென்றாலும் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வார்கள்.

எனவே வை.கோ வின் அர்த்தமற்ற உரைகளைப் பற்றி அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றார் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா. (ஐ-2)

உ
விநாயகர் துணை

**விவாஹ சுப முகூர்த்த அழைப்பு**

அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான நந்தன வருஷம்

**சமாவர்த்தனம்**

பங்குனி 24 ஆம் நாள் [06.04.2013] சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

பங்குனி மாதம் 25ஆம் நாள் [07.04.2013] ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிமுதல் பி.ப 12.30 மணிவரையுள்ள மீன லக்கினமும் சதய நட்சத்திரமும், சித்தயோகமும், துவாதசித்திதியும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

காரைநகர் பாலாவோடை
பாரத்வாஜ ஹோத்திரம்
பிரம்மஸ்ரீ ப.இரகுநாதசர்மா தம்பதியரின்
பௌத்திரியும்,
சிவஸ்ரீ இ.உலகேஸ்வரக்குருக்கள்
தம்பதியரின் குமாரியுமாகிய
சௌபாக்கியவதி
**கர்ணிகாவினை**

மாதகல்
காசிப ஹோத்திரம்
சிவஸ்ரீ க.செல்லப்பா குருக்கள்
தம்பதியரின் பௌத்திரனும்,
சிவஸ்ரீ செ.நகுலேஸ்வரக் குருக்கள்
தம்பதியரின் குமாரனுமாகிய
சிரஞ்சீவி
**கஜநேச சர்மாவிற்கு**

கன்னிகாதான, மாங்கல்யதாரண, பாணிக்கிரகணம் செய்வதற்கு மாதகல் அரசடி சித்திவிநாயகர், பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி, மாதகல் பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன், பாலாவோடை முத்துமாரி அம்மன் மற்றும் பிரான்பற்று பெரியவளவு முத்துமாரியம்மன் திருவருளினாலும், பிரான்பற்று பெரியவளவ் முருகன் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள மணமகள் இல்லத்தில் நிகழ்த்துவதற்கு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வதூவர கிரஹப்பிரவேசம்**

பங்குனி 25ஆம் நாள் [07.04.2013] ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவினை
இனிதே விரும்பும்

(35669)

சிவஸ்ரீ இ.உலகேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி செண்பகவல்லி தம்பதிகள்,
முருகன் கோயிலடி, பிரான்பற்று
பண்டத்தரிப்பு.

சிவஸ்ரீ செ.நகுலேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி யாழரசி தம்பதிகள்
"முருகனகம்"
மாதகல் கிழக்கு, மாதகல்.

இருவீட்டார் அழைப்பு

## ஸ்ரான்லி - வித்தியானந்தா துடுப்பாட்டச் சமர்

# 6 இலக்குகளால் வென்றது ஸ்ரான்லி

யாழ்ப்பாணம், ஏப்.5

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கும் யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டம் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியாணந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியினர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தனர்.

அதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி 24.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

**தமது கன்னிப் போட்டியில் களம் கண்ட முல்லை. வித்தியானந்தா வீரர்கள் துணிச்சலுடன் ஸ்ரான்லிக் கல்லூரியை எதிர்கொண்டனர். இந்தப் போட்டியில் அவர்கள் தோல்வி அடைந்தபோதும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.**

அதில் விதுஷன் 22 ஓட்டங்களையும், ஆஞ்சேயன் 21 ஓட்டங்களையும் அருணா 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சார்பில் கலைச்செல்வன் 3.1 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், கம்சிகாந் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 5 ஓட்டங்களுக்கு 2 இலக்குக்களையும் விதுர்ஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினார்.

90 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கனகரத்தினம் மகா வித்தியாலய அணி 19.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மதன் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் கம்சிகாந் 21 ஓட்டங்களையும் கலைச்செல்வன் 18 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி அணிசார்பில் அஞ்சேயன் 5 பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் விதுஷன் 4.3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

கனகரத்தினம் மகா வித்தியாலய அணி வீரன் கலைச்செல்வன் ஆட்டநாயகன், சிறந்த பந்துவீச்சாளர் என்பற்றுக் கான விருதுகளைப் பெற்றுக் கொண்டார்.

சிறந்த களத்தடுப்பாளராக முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி வீரன் இவாஸ் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக கனகரத்தினம் மகா வித்தியாலய அணி வீரன் மதனும் அதே கல்லூரியைச் சேர்ந்த கம்சிகாந் சகலதுறை வீரனாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ற-23)

## நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணம்

# இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.5

நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ண '20/20' கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் மற்றும் இறுதியாட்டம் இன்று வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன.

அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தப்படும் இந்த ஆட்டங்களில், வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஓர் அரையிறுதி ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லுரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மேதவுள்ளது.

மற்றைய அரையிறுதி ஆட்டம் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மட்டக்களப்பு பெரிய கல்லாறு மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

அரையிறுதியில் வெற்றி பெறும் அணிகளுக்கான இறுதி ஆட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் பி.ப.2 மணியளவில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (ற-23)

# டி.எவ்.சி.சி. அணி வென்றது

யாழ்ப்பாணம் ஏப்.5

டி.எவ்.சி.சி. வங்கி மற்றும் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டசங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் டி.எவ்.சி.சி. வங்கியின் கூடைப்பந்தாட்ட அணிக்கும் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான கூடைப்பந்தாட்டப்போட்டி நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ்.மத்தியகல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மின்னொளியில் இடம் பெற்றது. இதில் டி.எவ்.சி.சி.வங்கியின் கூடைப்பந்தாட்ட அணி 66:63 என்றபுள்ளிஅடிப்படையில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியை வெற்றி கொண்டது.(ற-23)

## இமையாணன் மத்திய வி.க. உதைபந்தாட்டம்

# அரையிறுதி ஆட்டத்துக்கு அணிகள் தெரிவு



கரணவாய், ஏப்.5

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் வதிரி பொமர்ஸ், கொற்றாவத்தை சிவானந்தா, நவிண்டில் கலைமதி, சக்கோட்டை சென்.சேவியர் ஆகிய விளையாட்டுக் கழக அணிகள் அரையிறுதி ஆட்டங்க ளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்தத் தொடரில் முதல் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடத்தப்பட்டன.

அவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எட்டு அணிகளிடையே லீக் முறையில் போட்டிகள் நடத்தப்பட்டன

அந்தப்போட்டிகளில் அணிகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு 'ஏ' பிரிவிலிருந்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும், சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகமும் அரையிறுதிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன.

'பி' பிரிவில் இருந்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும், வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகமும் அரையிறுதி ஆட்டங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.


இந்த அரையிறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் இமையாணன் மத்திய விளையாட்டுக் க்ழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன. (ற-400)

# 'நாயகர்களின் போர்' இன்று

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொள்ளும் 'நாயகர்களின் போர்' சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது. 13 ஆவது வருடமாக நடைபெறவுள்ள இந்தக் கிரிக்கெட் சமர் இன்றும் நாளையுமாக இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டிகளில் இரு அணிகளும் தமது அபார திறமையை வெளிப்படுத்தியிருந்த நிலையில் நடைபெறவுள்ள நாயகர்களின் போரில் விறுவிறுப்புக்குப் பஞ்சம் இருக்காது. (ற-36-23)

**மகாஜனக் கல்லூரி**



இருப்பவர்கள் (இ.வ): எஸ்.கமலமோகன் (விளையாட்டுத்துறை பொறுபாசிரியர்), சு.சிறிதரன் (பயிற்றுவிப் பாளர்), மு.தினக்சன் (அணிஉபதலைவர்),ஆ.மணிசேகரம் (பிரதி அதிபர்),எஸ்.வேல்சிவானந்தன் (அதிபர்).
எஸ்.சயந்தன் (பிரதி அதிபர்), மு.டிலோசன் (அணித்தலைவர்), புனித தயாபரன் (விளையாட்டுத்துறை இணைப்பாளர்)
முதலாவது நிரை (இ.வ)
எஸ்.ரமேஸ்குமார், கௌசிகன், ஏ.பிரசாத், ரி.சுலதீபன், ஜெ.ஜனந்தன், எம்.ரசிகன், எஸ்.சஜந்தன், பி.ரிஷோத்
இரண்டாவது நிரை (இ.வ)
எஸ்.பிரசாத், ஜெ.மயூரன், ரி.சுராங்கன், எஸ்.அனுராஜ், ஏ.நவராஜா, எம்.பவன்

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**



இருப்பவர்கள் (இ.வ)
திரு.து.ஜெயமோகன் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), திரு.ரி.தவராஜா (பிரதிஅதிபர்), ரி.சிந்துஜன் (அணித் தலைவர்), ஆர்.ஈஸ்வரதாசன் (அதிபர்), கெ.றெட்பேட்ரிசான் (அணி உபதலைவர்), கே.பென்ஜோய் (பயிற்றுவிப்பாளர்), ரி.சிவகுமார் (பொறுப்பாசிரியர்).
முதலாவது நிரை (இ.வ)
ரி.தனுசன், ரி.கானுஜன், ஜே.ஜனக்சன், ரி.நிறோஜன் ,ஆர்.ரவிக்காந்தன், ஏ.றொசான் .சுஜிதரன், ஜெ.ஜெயபிரதாப், ரொ.ஜெரோம்
இரண்டாவது நிரை (இ.வ)
ஆர்.ரஜிதரன், கே.பிரசாத், கே.துவாரகன், கே.சயந்தன், பி.ஐங்கரன்



# பூப்பந்தாட்டப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப். 5

யாழ்.மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் 11வயது, 13வயது, 15 வயது, 17வயது, 19 வயதுப் பிரிவுகளுக்கான ஆண், பெண் இருபாலருக்குமான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் 16ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றவுள்ளவர்கள் விண்ணப்ப படிவங்களை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் மோகனிடமும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி ஹரிகரனிடமும் பெற்று அதனை 8ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-23)

## யாழ். கல்வி வலய பூப்பந்து, மேசைப்பந்து போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது 19 வயது பிரிவுகளுக்கு உட்பட்ட பெண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

இதேவேளை, 15வயது 19வயது ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப் பந்தாட்டப் போட்டி 10ஆம் 11ஆம் திகதியில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (ற-23)

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது பெங்களூர்

ஐ.பி.எல். சீஸன் 6 ஆவது தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பெங்களூர் அணி 2 ஓட்டங்களால் பரபரப்பான வெற்றியைத் தனதாக்கியது.

பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் நடைபெற்ற இவ்வாட்டத்தில் பெங்களூர் றோயல் சலெஞ்சர்ஸ் அணியும் மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற



மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார்.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது றோயல் சலெஞ்சர்ஸ். அந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக திலகரட்ண டில்ஷான், கிறிஸ் கெய்ல் ஆகியோர் களமிறங்கினர். 8 பந்துகளை எதிர்கொண்ட நம்பிக்கை நட்சத்திரமான டில்ஷான் ஓட்டமெதனையும் பெறாது அரங்குக்கு நடையைக் கட்டினார்.

இவரது ஆட்டமிழப்பையடுத்து கெய்லுடன் இணைந்தார் விராட் ஹோக்லி. இவர்கள் இருவரும் பங்களூர் பந்துவீச்சை இலாவகமாக அடித்தாடினர். அணி 28 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, ஒரு 6 ஓட்டங்கள் அடங்கலாக 24 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஹோக்லி ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் துடுப்பாட்டைகளைத் தோற்கவிடாது அச்சுறுத்தினர் மும்பை இந்தியன்ஸ் பந்துவீச்சாளர்கள். இதனால் இலக்குகள் சீரான இடைவெளியில் சரியத்தொடங்கின. ஒருமுனையில் இலக்குகள் சரிந்தாலும், மறுமுனையில் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் அசைச்சதும் கண்டார் கிறிஸ் கெய்ல்.

இவர் இறுதிவரை ஆட்டமிழக்காது 58 பந்துகளைச் சந்தித்து ஐந்து 6 ஓட்டங்கள், பதினொரு 4 ஓட்டங்கள் அடங்கலாக, 92 ஓட்டங்களைப் பெற்று அணியை வலுவான நிலைக்கு இட்டுச்சென்றார். இவருக்கு பின்கள வீரர்களான அருண்கார்த்திக் நல்ல ஒத்துழைப்பு வழங்கினார். அவர் தனது பங்குக்கு 19 பந்துகளுக்கு 19 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இதனால் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் பெங்களூர் அணி 5 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மும்பை இந்தியன்ஸ் பந்துவீச்சு சார்பாக பும்றோ 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 32 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

157 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரிக்கி பொண்டிங், சச்சின் டெண்டுல்கார் ஆகியோர் களமிறங்கினர். இவ்விருவரும் முதலாவது இலக்குக்காக 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை, துரதிர்ஷ்டவசமாக சச்சின் 23 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்'



முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இவரைத் தொடர்ந்து களம் புகுந்த கார்த்திக் பொண்டிங்குடன் இணைந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். ரிக்கி பொண்டிங் 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், கார்த்திக் வீசிய பந்தில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இவரைத் தொடர்ந்து களமிறங்கிய றோகித் சர்மா சோபிக்கத் தவறினார். வெறும் 11 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இச்சூழ்நிலையில் 14.5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றுத்தடுமாறியது மும்பை இந்தியன்ஸ்.

ஒரு கட்டத்தில் றோயல் சலெஞ்சர்ஸ் அணியின் பக்கமே வெற்றிக்காற்று வீசியது. ஆனால் அடுத்து இணை சேர்ந்த ராயுடு, தினேஸ் கார்த்திக்குடன் சேர்ந்து அதிரடியாக ஆடி பெங்களூர் அணியைத் திக்குமுக்காடச் செய்தார்.

இவர்கள் இருவருமே மும்பை இந்தியன்ஸை வெற்றி இலக்குவரை கொண்டுசெல்வார்கள் என்றிருந்த வேளையில், பெங்களூர் அணியின் வேகப்பந்துவீச்சாளர் வினய்குமார் இருவரையும் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழக்கச் செய்தார். இதன்பின் மீண்டும் பெங்களூர் அணியின் பக்கம் வெற்றி திரும்பியது. அதிரடியாகத் துடுப்பெடுத்த தினேஸ் கார்த்திக் 30 பந்துகளில் நான்கு 6 ஓட்டங்கள் அடங்கலாக 67 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஹர்பஜன்சிங், பொலார்ட் இருவரும் கடுமையாகப் போராடியபோதும் வெற்றியைச் சுவைக்க முடியவில்லை. இருவரும் முறையே 1 ஓட்டம், 5 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இறுதியில் 2 ஓட்டங்களால் பெங்களூர் அணியே வெற்றிபெற்றது. பந்துவீச்சில் வினய்குமார் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றிக்கொண்டார்.

ஆட்ட நாயகனாக பெங்களூர் றோயல் சலெஞ்சர்ஸ் அணியின் அதிரடி ஆட்ட நாயகனான கிறிஸ் கெய்ல் தெரிவானார்.

(த 400)

# றொனால்டோ அதிரடி ரியல் மட்ரிட் வெற்றி

சாம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் காலிறுதிக்கான முதல் சுற்றுப் போட்டியி... ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றது.

ஐரோப்பிய கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் யு.இ.எப்.ஏ., சாம்பியன்ஸ் ... கால்பந்து தொடர், ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் நடைபெற்று வருகிறது.



ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் நடந்த முதல் சுற்று காலிறுதிப் போட்டியில், ரியல் மாட்ரிட் (ஸ்பெயின்), கலடாசரே (துருக்கி) அணிகள் மோதின.

ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ முதல் கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய ரியல் மட்ரிட் அணிக்கு ... ஆவது நிமிடத்தில் கரிம் பென்ஜிமா, ஒரு கோல் அடித்துக் கைகொடுத்தார்.

இதற்கு கலடாசரே அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பா... முடிவில் ரியல் மாட்ரிட் அணி 2-0 என்று முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்தி... ரியல் மாட்ரிட் அணிக்கு ... ஆவது நி...டத்தில் கா...சலோ ஹி...யான் ஒ... கோ... அடித்... வலுவா... முன்னி... பெற்று... தந்தார்.



கண... நிமிட... வை... சேரா... கல... வீரர்க... ஒரு கோல் கூட அடிக்க முடி...வில்லை. ஆட்டநேர முடிவில் ரியல் மட்ரிட் அணி 3... என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இவ்விரு அணிகள் மோதும் இரண்டாவது சுற்று காலிறுதிப் போட்டி வரும் 9 ஆ...திகதி துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் நடக்கவுள்ளது. இதில் கலடாசரே அ... 4-0 என வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும்.

# அஜ்மலுக்கு குடலிறக்க நோய் இல்லை



பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மலுக்கு குடலிறக்க நோய் (ஹேர்ணியா) கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு குடலிறக்க நோய் காணப்படுவதாகச் சந்தேகங்கள் எழுப்பப்பட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த சயீட் அஜ்மல், தனக்கு குடலிறக்க நோய் ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த சில மாதங்களாக வலியை உணர்ந்து வருவதாகவும் தெரிவித்திருந்ததோடு, அண்மையில் நிறைவடைந்த தென்னாபிரிக்க அணியுடனான தொடரில் அந்த வலி அதிகமானதாகவும் தெரிவித்திருந்தார்.

சயீட் அஜ்மலைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவரை ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறும், அவருக்குச் சத்திரசிகிச்சை தேவைப்படுகிறதா என்பதை வைத்தியர்கள் மீண்டும் பரிசோதித்துத் தீர்மானிப்பார்கள் எனவும் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதன்படி சயீட் அஜ்மலுக்குக் குடலிறக்க நோய் ஏற்பட்டிருக்கவில்லையெனவும், அவருக்கான ஓய்வின் பின்னர் அவரால் போட்டிகளில் தடைகளின்றிப் பங்குபற்ற முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜூன் மாதத்தில் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் லீக் தொடரில் சயீட் அஜ்மல் முழுமையான உடற்தகுதியுடன் பங்குபற்றுவார் என அறிவிக்கப்படுகிறது.

# வீடு திரும்பினார் ரைடர்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் சர்ச்சைக்குரிய வீரரான ஜெசி ரைடர் மர்ம நபர்கள் சிலர் தாக்கியதில் தலை, நுரையீரல் பகுதியில் காயமடைந்து கோமா நிலைக்குத் தள்ளப்பட்டார்.



இதிலிருந்து விரைவில் மீண்ட இவர், மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினார்.

இது குறித்து ரைடரின் மேலாளர் ஆரோன் கூறுகையில், மருத்துவமனையிலிருந்து வெலிங்டனுக்கு விமானம் மூலம் வீடு திரும்பினார் ரைடர்.

சில நாள்கள் வீட்டில் தங்கி ஓய்வு எடுக்கத் திட்டமிட்டுள்ளார் என்றும் அவர் சோர்வுடன் காணப்பட்டாலும், வீட்டுக்குத் திரும்பியதில் அனைவருக்கும் மகிழ்ச்சி எனவும் கூறினார்.

ரைடருக்கு மற்ற விடயங்கள் நினைவில் உள்ளபோதும் இந்தத் தாக்குதல் சம்பவம் மட்டும் நினைவில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் முதலீடுகளுக்கு சீனக் குடியரசுக்கு அழைப்பு

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக சீன அரசுக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்துள்ளது. தற்போது நிலவும் முதலீட்டு வாய்ப்புக்களைப் பயன்படுத்தி இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருமாறு தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இலங்கையிலுள்ள சீனத் தூதுவர் ''வூ ஜி யென்ஹ ஓ'' விடம் கேட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் சீனாவில் நடைபெறவுள்ள சீனா-தென்னாசிய வர்த்தகக் கண்காட்சிக்கு இலங்கையிலிருந்து 150 க்கும் மேற்பட்ட ஏற்றுமதியாளர்கள் பங்கேற்றவுள்ளனர். இந்த ஏற்றுமதியாளர்களுக்கு நல்லதொரு வர்த்தக சந்தையாக அமையுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ-22)

## ஒருவருக்கு வாள்வெட்டு

பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர் வாள்வெட்டுக்கிலக்காகிய நிலையில் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினரும் வல்லிபுரக் கோயில் மகாசபை உறுப்பினருமான தி. மணிதரன் என்பவரே வாள்வெட்டுக்கிலக்கானவராவர்.


advt@uthayan.com
0215671111

**கணனி திருத்தம்**
மிகவும் நீண்ட அனுபவம் உடைய Technician னால் தங்கள் வீடு, அலுவலகம் என்பவற்றிற்கு வந்து கணனிகள் திருத்தித் தரப்படும்
அழையுங்கள்: 0774784381

**விக்னா**
**கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
2ஆம் தவணைக்கான வகுப்புக்கள்
**தரம் 6 - O/L**
ஆரம்பம்
இன்று (05.04.2013) 3.30 P.M
★புதிய அனுமதிகள் வழங்கப்படுகிறது.
★ ஆரம்பமாகும் O/L DAY CLASS இற்கான அனுமதிகள் இன்றுமுதல். -நிர்வாகி-

**SPOKEN ENGLISH**
**யாருக்காக ?**
- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-06.04.2013
1) காலை 8.00-10.00 2) மு.ப 10.00-12.00
3) பி.ப 1.00-3.00 4) மாலை 3.00-5.00
குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாத முடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
**SAAMSON** 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். TEL .0776214567

**வேலை வாய்ப்புக்களை அள்ளி வழங்கும் பிரித்தானிய உயர்கல்வித் தகமைகள்**
edexcel BTEC
HND
CIVIL ENGINEERING
SOFTWARE ENGINEERING
QUANTITY SURVEYING
BUSINESS MANAGEMENT
BUSINESS MARKETING
Leading to BSc.,BE,B.Com from UK,USA,Canada Universities
முந்துங்கள்.... வெல்லுங்கள்....
10.04.2013 ம் திகதி முதல் 20.04.2013 ம் திகதி வரை பதிவினை மேற் கொள்ளும் அனைத்து மாணவர்களும் Toshiba i3 Laptop கணனியுடன் மேலதிக கட்டணச் சலுகைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.
மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900
3rd Year BSc/BBA/BEng
2nd Year Higher National Diploma Edexcel ,UK
1st Year Higher National Certificate Edexcel ,UK
GCE A/L / London A/L
Foundation Programme
After O/L



**IIS CITY CAMPUS**
No. 200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933
Web: www.iis.edu.lk E-mail :info@iis.edu.lk

**இந்திய சாஸ்திரியார் வருகை**
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பாரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)

**சிங்கள வகுப்பு**
- அரச ஊழியர்களுக்கான தரம்1, தரம்2, தரம்3 பரீட்சைகளுக்கான சிங்கள வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
- இன்றே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
- பிரிவு 1 → 3.30, பிரிவு 2 → 4.30 } திங்கள், வெள்ளி

ஆசிரியர்: A.K. மூர்த்தி
(யாழ்.பிரபல ஆசிரியர்)
★தொ.பே. 0212221417
Sky Computers (Pvt) Ltd
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(c/7315)(8.6.7)

**G.A.Q, B.A PART I** யாழ்ப்பாண பல்கலைக்கழகம் (வெளிவாரி)
ஆங்கில இலக்கியம் - சோ.பத்மநாதன்
ஆங்கில மொழியியல் - திருமதி செ.முத்துக்குமாரசுவாமி
விரிவுரைகள் ஆரம்பம் - 06.04.2013 காலை 8 மணி
குறிப்பு: 1.) 1st in Com, G.A.Q யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகங்களுக்குரிய புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
2.) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பரீட்சை விண்ணப்பப் பதிவும் நடைபெறுகின்றன.
கவனிக்குக: எமது நிறுவனத்தினூடாக விரிவுரைகளில் பங்கேற்கும் வெளி மாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.
விவரங்களுக்கு-S.அருள்நங்கை (நிர்வாகி)
**புதிய உயர் கல்லூரி**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

**விசேட கருத்தரங்கு**
மே மாதம் 4ஆம் திகதி நடைபெற உள்ள
கிராமசேவகர் போட்டிப் பரீட்சைக்கு
ஒவ்வொரு ஞாயிறும் 12.30-4.30வரை.
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என கையாளப்படும்.
Excellent Teachers' Panel & Individual Attention

**Diploma in English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு

**Spoken English With Grammar-Quick Learning Course** (1½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிரத்யேக சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

**Advanced Diploma in English** (4 Months)

**IELTS** Academic / General Duration : (2½ Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**A1 Exam-Sponsor/Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

**B1 Exam-Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை
G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன்
Duration : 2 Months

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
University of Cambridge
- British Council உடன் பரீட்சைக்கான பதிவுகள் March
- பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் May

Batch I - 06.04.2013 Batch II - 08.04.2013 Batch III - 13.04.2013 Batch IV - 15.04.2013
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074



கல்வி மேம்பாட்டிற்குரியவை
**போட்டோக் கொப்பி**
இருபக்கம் : 2/= மட்டும்.
கலர்பிறிண்ட் : 10/= முதல்
யாழில் கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
666, கே.கே.எஸ் வீதி, யாழ். 0771974875

**THE SCIENCE CORNER**
Clock Tower Lane, Jaffna.
**CHEMISTRY**
புதிய பிரிவு பல ஆரம்பம்
2015A/L BASIC பிரிவு i : Sat, Sun : 9.30-11.00a.m
பிரிவு ii : Wed : 3.30 - 5 p.m
2014A/L
Organic : Sat, Sun : 8 - 9.30 a.m
Thermo : Sat, Sun : 12.30 - 2.p.m
Inorganic : Tue, Thu : 3.45 - 5 p.m
Organic (Eng) : Thu, Fri : 5 - 6.30 p.m
2013 A/L அவத்தை : Mon: 3.45-5.00p.m
சமநிலை Tue : 5 - 6p.m
Industrial : Mon : 5.00-6.00p.m
Fri : 4 - 5p.m
By : G.BENO B.Sc

**ABI BABY MART**
புது வருடத்தை முன்னிட்டு 05ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை
10% - 20% விலைக்கழிவு உண்டு.
வாடிக்கையாளர்களுக்கு சிறப்புத் தள்ளுபடிகள் உண்டு.



(C/8052) (23-6.16)
#267, Brown Road, Jaffna.

**NEW SCIENCE CENTER**
CHEMISTRY
A/L 2014, 2013 மற்றும் DAY பிரிவு மாணவர்களுக்கு
**கைத்தொழில் இரசாயனம்**
INDUSTRIAL (Sat, Mon)
ஆரம்பம்:- 06.04.2013 (12.30)
★Theory வகுப்புகளுடன் கடந்த கால வினாக்களுக்கான விளக்கங்களும் அளிக்கப்படும்.
By:- T.சுசாந்தன். Bsc.
(c/8094)(23-16,14)

**சர்வதேச புலவர் திருமண சேவை**
(10.05.1962 இல் இருந்து திருமண சேவையில்) நீங்கள் விரும்புகின்றபடி உள்நாட்டு, வெளிநாட்டுத் திருமணங்களைச் செய்து கொள்வதற்கு தொடர்பு கொள்ளவும்.
மதுரகானம்(வடக்கின் தலைமையகம்)
238, அரசடி வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 7147, 0758427395.
106, கச்சாய் வீதி, சாவகச்சேரி
021 490 0733, 0755287045
(35656) (8.6)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## மரண அறிவித்தல்

### செல்லம்மா யோசேப்



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா யோசேப் கடந்த (03.04.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான செபமாலை- மரியம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற யோசேப்பின் அன்பு மனைவியும் தேவமனோகரன் (லண்டன்), தேவமதி (பிரபல ஆங்கில ஆசிரியை, பிரபல எழுத்தாளர்) ஆகியோரின் பாசமிகு தாயும், மைதிலியின் (லண்டன்) மாமியும் டிலான்மயூரி, லெக்ரர் மயூரதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (05.04.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் மாகியப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாகியப்பிட்டி.
T.P-0779753822

(35673)(23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் அரியரட்ணம்

(ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர், யாழ்ப்பாணம்)



கக்கலாவோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அரியரட்ணம் நேற்று (04.04.2013) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லீலாதேவி மற்றும் சுபத்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் யோகேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் தர்சிகா, லலிதாராணி, யசோதா, சுகிதா, மயூரகுமரன், ஜெயக்குமார் ஆகியோரின் மாமனும் ரவிசங்கர், தாரணி, பவித்திரன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2013) வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணியளவில் வேம்படி காரைநகரில் உள்ள சகோதரியின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்துக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேம்படி, காரைநகர்.
0718015328.

தகவல்:
போ.மயூரகுமரன் (மருமகன்)

## MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பயின்று இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டமளிப்பு விழாவில் Diploma in IT, Higher Diploma in IT பட்டம் பெறும் மாணவர்களிற்கு வாழ்த்துக்கள்

~விரிவுரையாளர்களும் மாணவர்களும்



S.Theivamainthan,S.Sanjivkumar,T.Bakeerathan,R.Chithamparanathan,S.Kavitha,A.Puvanesan,M.kayathiri,T.Kuganithy, S.piriyatharsini,V.Saseekaran,R.Raguraam,J.Thayalini,,M.Kayathiri,R.Niroshini,,N.Senthuran,P.Kaitheki,P.Uthayanthy,S.Sangeetha

புதிய கல்வியாண்டிற்கான விரிவுரைகள் யாவும் 7 ஏப்ரல் 2013 ஆரம்பமாகின்றது. புதிய மாணவர்களிற்கான பதிவுகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும், சித்தியடையத் தவறியோர் **FIT** கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் இக்கற்கை நெறியை பயில முடியும். பல்கலைக்கழக மாணவர்களும் இக் கற்கை நெறியை மேலதிகமாக தொழில் வாய்ப்புக்கருதி பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. **MCS** நிறுவனத்தில் **BIT** கற்கைநெறியில் இணைந்து கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டதாரி ஆகுவதுடன் **Microsoft, Cisco, Oracle, BCS .IEEE** நிறுவனங்களின் அங்கத்துவத்தையும் பெற்று சிறந்த தொழில் வாய்ப்பை பெற முடியும். மேலதிக விபரங்களை 324. பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள **MCS ITCAMPUS** நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். .தொலைபேசி இலக்கம் 772395895

உடன் செய்திகளுக்கு :
www.onlineuthayan.com

# 361, KASTHURIYAR ROAD, JAFFNA.
# 70, DAVIDSON ROAD, COLOMBO - 04.

Editorial : 021 567 9933, 021 222 9933
Fax : 021 222 9944
Circulation : 021 567 7222
Advertisement : 021 567 1111, 021 567 6666
General : 021 567 7602, 021 567 7600
Fax : 021 222 9731

E-mail
News & Photographs : news@uthayan.com
Advertisement : advt@uthayan.com

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் காசிநாதர் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் காசிநாதர் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) UK இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தம்பதிகளின் அன்பு மகனும், லலிதாம்பாளின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன், பிறேமகுமாரி, பிறேமலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சோபனா, Dr.கனகரத்தினம், தேவநாதன் ஆகியோரின் மாமனும், ஷாமா, ஹரி, அபிராமி, கணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.04.2013 திங்கட்கிழமை Northwales, Wrexham, UK இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(35675)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

### திருமதி சங்கரப்பிள்ளை இரத்தினம் (அம்மாச்சி)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டிச் சந்தி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை இரத்தினம் நேற்றுமுன்தினம் (03.04. 2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னம்மா தம் பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, தங்கம்மா ஆகியோரின் சகோதரியும், பாஸ்கரன் (ஹொலண்ட் ), ஜெயரட்ணம் (லண்டன்), பத்மசேனன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும், சரஸ்வதி (ஹொலண்ட்), புவனேஸ்வரி (ராணி-லண்டன்), யோகலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயந்தி (வவி- லண்டன்), உதயகுமார்(சுவிற்சர்லாந்து), கிசோக் குமார் (ஹொலண்ட்), கோமதி(மாவட்ட செயலகம், கிளிநொச்சி), சுமதி(பிரான்ஸ்), ஜெயவிந்தன்(கனடா),ஜெவீந்திரன்(லண்டன்), ஜெனித்தா (லண்டன்), ஜெயப்பிரியன்(லண்டன்), பிரகலாதன்(கனடா), ராகவன்( கனடா), ஜனனி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மயூரி(லண்டன்), மேரிகிறிஸ்ரினா (லண்டன்), போல்ராஜ் (சுவிஸ்), பரேக்கா(சுவிஸ்), ஒலிவியா(சுவிஸ்), தமிழினி, நர்த்தகி, சரண்யா (பிரான்ஸ்), அனோஜா(பிரான்ஸ்), தனோஜன்(பிரான்ஸ்), மிதுஷியன்(கனடா), தாகிஷன்(கனடா), வினோதினி(கனடா), ஜெசிக்கா(லண்டன்), சஞ்சய்(லண்டன்), ஜெய்சனா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.10.00மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

தகவல்:
ச. பாஸ்கரன்(மகன்)
குடும்பத்தினர்.



## யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா - 2013

அடியார் பெருமக்களே!

மேற்படி திருக்கோயிலின் பெருந்திருவிழா நிகழும் நந்தன வருடம் பங்குனி மாதம் 24ஆம் நாள் (06.04.2013) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி சித்திரை மாதம் 04ஆம் நாள் (17.04.2013) புதன்கிழமையுடன் பூர்த்தி பெற எல்லாம் வல்ல பிள்ளையாரின் திருவருள் கூடியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 06.04.2013 சனிக்கிழமை | கொடியேற்றம் | ந.பகல் | 12.00மணி |
| 10.04.2013 புதன்கிழமை | தங்கரதம் | மாலை | 07.00 மணி |
| 13.04.2013 சனிக்கிழமை | வேட்டை திருவிழா | காலை | 07.30 மணி |
| 13.04.2013 சனிக்கிழமை | சப்பறம் | மாலை | 07.00 மணி |
| 14.04.2013 ஞாயிற்றுக்கிழமை | தேர் | காலை | 09.00 மணி |
| 15.04.2013 திங்கட்கிழமை | தீர்த்தம் | காலை | 11.00 மணி |
| 16.04.2013 செவ்வாய்க்கிழமை | பூங்காவனம் | மாலை | 07.00 மணி |

பகல் திருவிழாக்கள் வசந்த மண்டபப் பூசை காலை 11.00 மணி தொடர்ந்து உள்வீதி உலா நடைபெறும்.

மாலைத் திருவிழாக்கள் வசந்த மண்டபப் பூசை மாலை 06.00 மணி தொடர்ந்து உள்வீதி, வெளிவீதி உலா நடைபெறும்.

திருவிழா நாட்களில் தினமும் நண்பகல் 12.00 மணிக்கு கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்.

இங்ஙனம்
பிள்ளையார் பணியில் நிற்கும் கோயில் நிர்வாகம்.

விளம்பர அன்பளிப்பு:
நியூ பிரியங்கா நகைமாளிகை
02G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
69, யாழ் வீதி, (A9 வீதி) கச்சேரி முன், கிளிநொச்சி.

உங்கள்
தராதரத்தை
உயர்த்திக் கொள்வதற்கான
அரிய சந்தர்ப்பம் !



ஒளிமயமான எதிர்காலத்துக்கான முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் !!

காலம் : 03 மாதங்கள் /
120 மணித்தியாலங்கள்

USAID | SRI LANKA
FROM THE AMERICAN PEOPLE

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

துரித திறன்பெறுகை
நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள்,
கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள்
அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான
கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

ICDL
International Computer Driving Licence
Just 6,500/= ONLY

e - Citizen
Just 3,500/= ONLY

மேலதிக தகவல்களுக்கு :

GATEWAY
LANGUAGE & ICT CENTRE Nelliyady
55,Pointpedro Road, Nelliyady.
Phone:- 0212262395 / 0215677606

யாழ்.நகர மத்தியில்
# "உதயன் விருந்தினர் விடுதி"












- குடும்ப அறை வசதி உண்டு.
- குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் குளிரூட்டப்படாத அறைகள்.
- யாழ்ப்பாண உணவு வகைகள் தயாரித்து தரப்படும்.
- பரந்த வாகன நிறுத்துமிட வசதி.
- காலை உணவுடன் கூடிய அறை வசதி.

குழுமப் பதிவுகளுக்கு விசேட கழிவு உண்டு.

இன்றே ஒருமுறை வருகை தந்து பாருங்கள்

12, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 222 2330
021 567 7603
(c/6914)(8.14.16)

# புலமைப் பெற்றோர்களே!

இதோ புதுப்பொலிவுடன் வெளிவந்துவிட்டது
உங்கள் பிள்ளைகளின் வெற்றிக்கான கையேடு

புலமை 25




உள்ளே...
எதிர்பார்க்கை
வினாத்தாள்கள்
உள்ளடங்கலாக

தமிழ், கணிதம்,
சுற்றாடல்,
ஆங்கிலம்,
சிங்களம்,
தரம் 4, 5
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்,
மேலும் பல தகவல்களுடன்

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள
சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

# மரண அறிவித்தல்

## திருமதி மேரி கொண்சேக்கா சூசைப்பிள்ளை



பலாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி கொண்சேக்கா சூசைப்பிள்ளை நேற்று (04.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலஸ் ஞானப்பிரகாசம் - மேரியேசேப்பின் தம்பதியரின் அன்பு மகளும் யோசேப் ஆசீர்வாதம் - லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சூசைப்பிள்ளையின் (செல்வராசா) அன்பு மனைவியும் நியூட்டன் (செல்வன்)- (பிரான்ஸ்), கல்பனா (பிரான்ஸ்), றூபனா (பிரான்ஸ்), ஜீவனா, மெரீனா, டயானா, ஜென்சி, றைசன் (பிரான்ஸ்), மடோனா, டிலக் ஆகியோரின் அன்புத் தாயும் யூடிற்றா, திரேசா, அன்ரன் (பிரான்ஸ்), மாலா (பிரான்ஸ்), காலஞ்சென்ற கலா மற்றும் கோவி, குணசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கீதா (பிரான்ஸ்), ஜெயசீலன் (லண்டன்), றொக்சன் (பிரான்ஸ்), சகாயரூபன் (டோகா), ஜெயராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் இராஜேஸ்வரி, மரியநாயகம் (பிரான்ஸ்), இராசமணி, பாக்கியநாதன், அமுதநாயகம், ஆகியோரின் மைத்துனியும் டிலோ, நிலு, அபிஷேக், அபிநயா, அக்ஷயன், கீதன், நீதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (05.04.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு நெல்லியடி, கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ.செல்வராசா (கணவர்)

நெல்லியடி, கரவெட்டி



# முகம் இல்லாத மனிதர்

இந்தியாவில் பிறந்த முகமது லத்தீஃப் ஹதானா என்ற பெயருடைய 32 வயதான அவருக்கு இருக்கும் ஒரே குறை சாதாரண மனிதர்களைப் போன்று தமக்கு முகம் இல்லையே என்பதுதான்.

மிகவும் அரிதான தோல் நோயில் கொடிய தாக்கத்தால் இவர் முகமே இல்லாமல் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் வாழ்க்கையில் இடம்பெற்ற இன்னுமொரு சுவாரசிய சம்பவமே அவரது திருமணம். நிறத்தில் கறுப்பாக இருக்கும் ஆண்களையே வெறுக்கும் பெண்கள் கொண்ட இச்சமூகத்தில், இவரை மணதார விரும்பி மணம் முடித்திருக்கிறார் 25 வயதான சலீமா. அவருக்கு ஒரு கால் இல்லை என்பது வேதனைக்குரிய விடயம்தான்.

இருந்தபோதிலும் அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பாக வாழ்க்கை நடத்துகின்றனர். இதற்குச் சான்றாக அவர்களுக்குப் பிறந்துள்ளது அழகிய ஆரோக்கியமான ஒரு பெண் குழந்தை. சோதனைக்கடலில் தத்தளித்த அவர்களது மண வாழ்க்கையை மகிழ்ச்சிக் கடலில் நீந்தச்செய்தது அந்தக்குழந்தை. காரணம் தாய் அல்லது தந்தையிடம் இருக்கின்ற குறைபாடுகளுக்கு அப்பால் அந்தக்குழந்தை சாதாரணமான ஒரு ஆரோக்கியமான குழந்தையாகப் பிறந்தமையே.

முகமே இல்லாத கணவருடன் வாழ்க்கை நடத்துவது பற்றி அவரது மனைவி சலீமா கூறுகையில்:- ''நான் அவரை ஒரு வித்தியாசமான மனிதராகப் பார்க்கவில்லை. அவர் மீது நான் கொண்ட காதலே எங்கள் இணைவுக்குக் காரணம். பலர் அவரது முகத்தைப் பார்க்க விரும்பாதிருக்கலாம். ஆனால் நான் அவரது முகத்தையே கடவுளாகப் பார்க்கிறேன். மருத்துவர்கள் அவரது முகத்தைச் சரிசெய்வது கடினம் என்றனர். ஆனால் இப்போது நான் சொல்கிறேன்; அது முடியும், என்றாலும் தேவையில்லை. காரணம் எங்களுக்கு ஆரோக்கியமான பெண் குழந்தை பிறந்துள்ளது'' இனி அவளே எமது சந்தோசம் என்கிறார்.

பச்சைப்பசேலென பரந்த வயல்வெளிகள் வளம்பெற
வயல்களில் வளரும் வெங்காயச் செடிகள் வளம்பெற
வெங்காயம் பியிரிடும் பொற் கரங்கள் வளம்பெற
நெல்லியடி வாழ் அனைவரின் உள்ளங்கள் வளம்பெற



பழைய உறவுகளை புதுப்பித்துக் கொள்ளவும்
புதிய உறவுகளை வளர்த்துக் கொள்ளவும்

உங்களின் சகல நிதித் தேவைகளையும் பூர்த்தி செய்திடும் வகையில்
2013 ஏப்ரல் 5ஆம் திகதி முதல் நெல்லியடியில் நாம்

DFCC
வர்தன் வங்கி
உங்களுக்கு அதிநட்புறவான வங்கி

(C7284)


bates

இல. 30, தங்கஸ்தன், பருத்தித்துறை வீதி, நெல்லியடி. தொ. 021 2 264 706
அழையுங்கள் 011 2 663 888, இணையத்தளம்: www.dfcc.lk

DFCC வர்தன வங்கி ∴பிட்ச் ரேடிங் லங்காவின் AA- (lka) தரப்படுத்தலை பெற்றுள்ளது.
DFCC வர்தன வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

# மணல் சிற்ப விழாவில் ஹொலிவூட் கதாபாத்திரங்கள்





பிரிடனில் வெஸ்டன் எனும் இடத்தில் அமைந்திருக்கும் கடற்கரையோரங்களில்மணல்சிற்பவிழாகளைகட்டியுள்ளது.

வருடாவருடம் நிகழும் இவ் விழாவில் இவ்வருடத்திற்கான கருப்பொருளாக ஹொலிவூட் திரைப்பட கதாபாத்திரங்கள் அமைந்துள்ளன. உலகம் முழுவதும் இருந்து விருது பெற்ற 20 இற்கும் மேற்பட்ட மணல் சிற்பக்கலைஞர்கள் ஹரிபாட்டர், மர்லின் மன்றோ, ஸ்டார் வார்ஸ் போன்ற திரைப்பட கதாபாத்திரங்களை உருவாக்கியிருந்தனர். இவை புனித வெள்ளியன்று மக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டன. அதன் சில சுவாரஸ்யமான புகைப்படங்கள் இவை.

# குண்டர்களின் தாக்குதல்களை வேடிக்கை பார்க்கும் படைகள்

## கடுமையாக சாடுகிறார் விக்கிரமபாகு

கொழும்பு,ஏப்.5

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தும் போது மட்டும் கண்ணீர்ப் புகைக்குண்டுகள், குண்டாந்தடிகள் கொண்டு தாக்கி விரட்டியடிக்கும் பொலிஸாரும், இராணுவத்தினரும் அவர்களின் கண்முன்னே நடைபெற்ற கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காது வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தமை கண்டனத்துக்குரியது.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவோம்' என்ற அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தற்போது நாட்டில் அடாவடித்தனங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இது போன்ற செயல்களுக்குப் பொலிஸாரும், இராணுவத்தினரும் துணைபுரிகிறார்கள். அவர்களது கண்முன்னே தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றாலும் அதை வேடிக்கை பார்த்துவிட்டு, பின்னர் ''சந்தேக நபர்களைக் கைது செய்ய எமக்கு உதவுங்கள்'' என மக்களிடம் கேட்கிறார்கள். இது மிகவும் கேலிக்கிடமானதாகும்.



பெப்பிலியான வர்த்தக நிலையம் தாக்கப்பட்ட சம்பவமானாலும் சரி, கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலானாலும் சரி இரண்டுமே பொலிஸார், படையினர் முன்னிலையிலேயே நடைபெற்றவை. ஆனால் இவற்றுக்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்காது அவர்கள் இருந்தமைக்கு ஊடகங்களும் சாட்சி.

இதேபோன்று எதிர்க்கட்சிகளாகிய நாம் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கி எந்தவொரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டாலும் அவர்கள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும், குண்டாந்தடிகளையும் கொண்டு எம்மைத் தாக்கி விரட்டியடிக்கின்றனர்.

இவ்வாறு நடந்துகொள்கின்ற இந்தப் படையினரும், பொலிஸாரும் அப்பாவி மக்களையும் அவர்களின் உடைமைகளையும் குண்டர்கள் தாக்கும்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் வெட்கக்கேடான செயலாகும். இதுபோன்ற பொலிஸார், இராணுவத்தினர் வேறு எந்த நாட்டிலும் இருக்கமுடியாது. - என்றார்.

# ஜனநாயக வழிமுறைகளுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

ஊடக தர்மத்தை மதித்து ஜனநாயக வழிமுறைகளுக்கூடாக பயணிக்கும் ''உதயன்'' பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த நாட்டில் வெளிவருகின்ற பத்திரிகைகளுள் தமிழ் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கும் பத்திரிகையாக ''உதயன்'' பத்திரிகை விளங்குகின்றது என்பதனை உலகம் முழுவதும் அறிந்துள்ள நிலையில், உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீதான தாக்குதல்- ஜனநாயக வழிமுறைகளுக்குத் தொடர்ந்தும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் ஒன்றாக அமைகிறது.

**இந்த நாட்டில் வெளி வருகின்ற பத்திரிகைகளுள் தமிழ் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கும் பத்திரிகையாக ''உதயன்'' பத்திரிகை விளங்குகின்றது**

இந்த வழிமுறைகளை கையாள்பவர்கள் தயவு செய்து அதனைக் கைவிட்டு ஜனநாயக வழிமுறைகளை மதித்து நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

இது போன்ற செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உரிய தரப்பினரை வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது. (த)

# ஊடகங்கள் மீதான தாக்குதல் வடக்கில் கட்டுமீறிச் செல்கிறது

## தென்கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் கண்டனம்

அம்பாறை,ஏப் 5

''வடக்கில் ஊடகங்கள் மீதான அராஜகம், அடக்குமுறை, அடாவடித்தனங்கள் கட்டுமீறிச் சென்று கொண்டிருக்கின்றன. இத்தகைய வெறித்தன செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.''

இவ்வாறு தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள ''உதயன்'' அலுவலகம் மீதும், அங்கிருந்த முகாமையாளர் , பணியாளர்கள் மீதும் நடத்தப்பட்ட வெறியாட்டத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

''கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய மக்கள் சந்திப்பொன்றின் போது ஈனத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று சில தினங்களுக்குள் அங்கு ''உதயன்'' அலுவலகம் மீதான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

திட்டமிட்டு காத்திருந்த முகமூடிக் கும்பல் , பத்திரிகை விநியோகம் இடம்பெறும் அதிகாலை வேளையில் தமது வெறியாட்டத்தை ஆடியுள்ளனர்.

இதன் போது ''உதயன்'' அலுவலக முகாமையாளர் ஆறுமுகம் பொன்ராசா (வயது-66) உட்பட பணியாளர்களும் ஈவிரக்கமின்றி இந்தக் கும்பலால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் அலுவலகத்தினுள் இருந்த பெறுமதி வாய்ந்த கணினிகள், அலுவலகப் பொருள்கள் இந்தக் கும்பலால் அடித்து நொறுக்கி சேதமாக்கப்பட்டுள்ளன.

வடக்கு மக்களின் உணர்வின் வெளிப்பாடாகவும், அவர்கள் அனுபவிக்கும் அவலங்களுக்கு நீதி கோரும் ஊடகமாகவும் ''உதயன்'' பல தசாப்தங்களாகத் திகழ்ந்து வருகின்றது.

மக்களின் உதிரத்தோடு ஒன்றித்த அந்த உதயனின் குரல்வளையை நசுக்கிவிடுவதற்கு எடுக்கப்பட்ட புல்லுருவிகளின் அத்தனை தாக்குதல்கள், நெருக்கடிகளையும் தாங்கி, உயிர்ப்பலிகளையும் கொடுத்தும் ''உதயன்'' ஓடி ஒளியவோ, சோர்ந்து சலித்து விடவோ இல்லை.

அதன் பணி தொடர்ந்த வண்ணமேயுள்ளது. மக்கள் ஆதரவு எனும் கவசம் உதயனைத் துவண்டு விடாமல் உயிர்த்துடிப்புடனேயே மிளிரச் செய்து வருகின்றது.

வடக்கில் ஊடகங்கள் மீதான அடக்குமுறை, அராஜகம் வரம்பு மீறிச் சென்று கொண்டிருக்கிறது என்பதையே கிளிநொச்சி ''உதயன்'' அலுவலகம் மீதான தாக்குதல் சம்பவம் கட்டியம் கூறி நிற்கின்றது.

நாட்டில் ஊடக சுதந்திரம் தளைத்தோங்கி நிற்பதாகத் தம்பட்டம் அடிக்கும் அரசு, வழக்கம் போல் இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட தாக்குதல் என்ற வரையறையோடு நின்றுவிடாது, இந்தத் தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன்நிறுத்த வேண்டும்.

இந்த மிலேச்சத்தனமான சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் வடக்கில் தொடரும் ஊடகங்கள் மீதான அராஜக செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு முன்வர வேண்டும் எனவும் கோருகின்றோம்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-30)

# வடக்கு மாகாண மக்களின் உரிமைகளுக்கு அச்சுறுத்தல்

## கரு ஜயசூரிய கூறுகிறார்

கொழும்பு,ஏப்.5

உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இந்தத் தாக்குதலின் மூலம் வடக்கு மக்களின் மாற்றுக் கொள்கைகளை கடைக்கொள்ளும் உரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மாற்றுக் கருத்துக்களை வெளியிட சுதந்திரமில்லாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. அத்துடன் வடக்கு மக்கள் மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் உரிமைக்கு மீளவும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இனந்தெரியாத ஆயுததாரிகள் அப்பாவி மக்களைத் தாக்கி விட்டு எந்தவிதப் பாதிப்பும் இன்றி தப்பிச் செல்லக் கூடிய சூழ்நிலை நாட்டில் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்றோமோ இல்லையோ அவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



உதயன் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் தாக்குதலாளிகள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. தாக்குதல் குறித்த விசாரணைகள் உரிய முறையில் நடைபெறவில்லை. இதனால் தாக்குதலாளிகள் தொடர்ந்தும் தப்பிக்கிறார்கள்.

தாக்குதலாளிகளைக் கண்டு பிடிப்பதில் அரசு அக்கறை காட்டவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. எனவே இவ்வாறான தாக்குதல்கள் இனியும் தொடராமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கரு ஜெய சூரிய கூறினார். (த)

# அரசின் ஆசீர்வாதத்துடன் புலனாய்வாளர் கைவரிசை

## உதயன் தாக்குதலுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

கொழும்பு,ஏப்.5

உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அதி உச்ச இராணுவ பிரசன்னம், மற்றும் இராணுவக் கண்காணிப்பு நடவடிக்கைகளால் முடக்கப்பட்டுள்ள கிளிநொச்சி போன்ற தொரு இடத்தில் இலங்கை அரசின் ஆசீர்வாதம் இல்லாது இவ்வாறான தாக்குதல் ஒரு போதும் நடைபெற்றிருக்க முடியாது. அந்த வகையில் இந்த தாக்குதலுக்குப் பின்னால் இராணுவத்தினருடைய புலனாய்வுப் பிரிவினரே இருந்திருப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகத்தில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பணியாளர்கள் மீதும் அலுவலகத்தின் மீதும் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் கண்மூடித்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் விநியோகத்துக்காக பத்திரிகையினை எடுத்துச்செல்லச் சென்றிருந்த பணியாளர்கள் இருவரும், அலுவலகத்தில் கடமையில் இருந்த முகாமையாளரும் உதவியாளர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளதுடன், வாகனம் மற்றும் அலுவலகத்திலிருந்த கணினிகள் மற்றும் தளபாடங்களும் அடித்து நொறுக்கப்பட்டு பல இலட்சம் பெறுமதியான சொத்தழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தினை தமிழ் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சர்வதேச சமூகத்தினுடைய கவனம் இலங்கையில் விமர்சன ரீதியாக கூடுதலாக செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இது சிங்கள பௌத்த தேசியவாத நிகழ்ச்சிநிரலை முன்கொண்டு செல்வதில் எந்தவொரு அழுத்தத்துக்கும் இலங்கை அரசு அடிபணியப் போவதில்லை என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது.

தொடர்ச்சியாக தமிழ் இனத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ்வாறான தாக்குதல்கள் அனைத்தும், இலங்கைத் தீவில் தமிழர் தாயகப் பிரதேசம் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஆதிக்கத்தினுள் இருக்கும் வரைக்கும் தமிழ்த் தேசிய இருப்பு என்பது பெரிய கேள்விக்குறியாகவே இருக்கும் என்பதனை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகின்றது. இந்தச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மிக மோசமான பலவீனங்களை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

இந்தப் பின்னணியில், இந்தவகையான தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு கட்டங்களிலும் இவற்றை வெறுமனே கண்டிப்பதுடன் நின்றுவிடாது, இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையில் தமிழ் அரசியல் தலைமைகள் தெளிவாக கோரிக்கைகளை முன்வைத்து செயற்பட வேண்டும். இதுவே இன்றைய தேவையாகும். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.